ஜூலை 2002 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## அமெரிக்க அடிமைகளின் போர்வெறிக் கூச்சல்



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## சென்னை தொலைபேசியை ஒழிக்க தனியாரின் நாச வேலைகள்

சென்னை நகருக்குள் உள்ளூர் தொலைபேசி சேவை (local) வியாபாரத்தில் குதித்துள்ள ''பாரதி டெலி நெட்'' என்ற தனியார் நிறுவனம், தனது போட்டியாளரும் அரசு நிறுவனமுமான சென்னை தொலைபேசியை ஒழித்துக்கட்ட சதி வேலைகளில் இறங்கி உள்ளது. அதிலொன்று, நாச வேலை. சமீபத்தில் இந்நிறுவனம் பூமிக்கடியில் பதிக்கப்பட்டுள்ள சென்னை தொலைபேசி இணைப்புகளின் வழித் தடக் கம்பிகளைத் திட்டமிட்டு நாசப்படுத்தியதன் மூலம், 10,000 இணைப்புகளைச் செயல் இழக்கச் செய்தது. மேலும், சென்னை தொலைபேசியிலுள்ள ஐந்தாம் படைகளைக் கையில் போட்டுக் கொண்டு, சென்னை தொலைபேசிக்கு அதிகக் கட்டணம் செலுத்தும் 20 சதவீத வாடிக்கையாளர்களைத் தன் பக்கம் கவர்ந்திழுக்கும் விபச்சாரத்தனத்திலும் இறங்கி வருகிறது. சென்னை தொலைபேசியைச் சேர்ந்த தொழிலாளர்கள் இத்தனியார் நிறுவனத்தின் சதி வேலைகளை அம்பலப்படுத்தி, ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

## சர்க்கரை கசக்கிறது

உள்நாட்டுச் சந்தையில் ஒரு டன் சர்க்கரையை 12,500 ரூபாய்க்கு விற்க வேண்டும் எனக் கறாராக விலை நிர்ணயித்துள்ள அரசு, அதே அளவு சர்க்கரையை 10,500 ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யலாம் எனத் தாராள சலுகை வழங்கியிருக்கிறது. இந்த ஓர வஞ்சனை ஒருபுறமிருக்க, சர்க்கரை ஆலை அதிபர்கள் இந்த விலை வித்தியாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஏற்றுமதி என்ற போர்வையில் பித்தலாட்டம் செய்து வருவது அம்பலமாகியுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏற்றுமதிக்கு உற்பத்தி செய்த சர்க்கரையை, சட்ட விரோதமாக உள்நாட்டுச் சந்தையில் விற்றதன் மூலம் கிட்டதட்ட 40 கோடி ரூபாய் பகற்கொள்ளை அடித்துள்ளன. மேலும், சர்க்கரையை விற்றதற்கான ஆயத் தீர்வையும் செலுத்தாமல், அரசுக்கும் பட்டை நாமம் போட்டு விட்டன.

## எங்கே மனித உரிமை?

இந்தியாவிலுள்ள பல்வேறு சிறைகளிலும் 2,04,480 பேர் விசாரணைக் கைதிகளாக இருப்பதாக மைய அரசு அறிவித்துள்ளது. இந்த விசாரணைக் கைதிகளுள் 2,206 பேர், ஐந்தாண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டு, வதைபட்டு வருகின்றனர். மேலும், விசாரணைக் கைதிகளுள் பெரும்பாலோர், அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டால் கிடைக்கக் கூடிய தண்டனையைவிட அதிக காலம் சிறையில் சட்ட விரோதமாக அடைக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் மட்டும் 9,289 பேர் விசாரணைக் கைதிகளாக உள்ளனர். இவர்களின் மனித உரிமை பறிக்கப்பட்டிருப்பதைக் குற்றமாகப் பார்க்காத சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், இத்தனை நாட்களாகத் தங்களுக்கு 'ஹோண்டா சிட்டி' என்ற சொகுசு காரை அரசு வாங்கித் தராததைக் குற்றமாகக் கூறிக் கொண்டு திரிகிறார்கள்.

பீகாரிலுள்ள கோபால்கஞ்ச் மாவட்டச் சிறையில் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட ஜீதன்ராம் என்ற விசாரணைக் கைதியின் உடலைத் தூக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் கைதிகள்.



## கருத்துரிமைக்கு வேட்டு

இந்து மதவெறியர்களை அம்பலப்படுத்தி 'இராமனின் பெயரால்' என்ற ஆவணப் படத்தை எடுத்திருந்த ஆனந்த் பட்வர்த்தன், தற்பொழுது இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே நடக்கும் அணுஆயுத மிரட்டல் - போட்டியை மையமாக வைத்து ''போரும் அமைதியும்'' என்ற ஆவணப்படத்தை இயக்கியிருக்கிறார். இந்தியத் திரைப்படக் கழகம் மும்பயில் நடத்திய சர்வதேச திரைப்பட விழாவில் இரண்டு பரிசுகளைப் பெற்றுள்ள இப்படத்திற்கு தணிக்கைச்சான்றிதழ் வழங்க மறுத்து வருகிறது, மைய அரசு. ஆனந்த் பட்வர்த்தன் எங்களுக்கு அனுப்பியுள்ள படப் பெட்டி தெளிவாக இல்லை என்ற நொண்டிச் சாக்கைக் கூறிக் கொண்டு, போருக்கு எதிரான கருத்துரிமையின் கழுத்தை நெரித்து வருகிறது, தணிக்கைக் குழு.

## இந்து மதவெறியர்களின் அண்ட புளுகு

குஜராத் தலைநகர் அகமதாபாத் நகரில் கடந்த மே 29 அன்று பேருந்துகளில் வெடிகுண்டுகள் வெடித்ததை முசுலீம் தீவிரவாதிகளின் சதிச் செயலாக இந்து மதவெறி அமைப்புகள் பிரச்சாரம் செய்தன. ஆனால், இக்குண்டு வெடிப்பின் பின் எந்தவொரு முசுலீம் குடியிருப்பிலும் போலீசு தேடுதல் வேட்டை நடத்தாதையும், எந்தவொரு முசுலீமும் இதற்காக கைது செய்யப்படாததையும் ஆதாரமாகக் காட்டி, இதை முசுலீம் தீவிரவாதிகள் செய்திருக்க வாய்ப்பில்லை எனசில போலீசு அதிகாரிகளே கூறியுள்ளனர். மாறாக, நரோடா பாட்டியா பகுதியில் முசுலீம்களை எரித்துக் கொன்ற வழக்கில் இந்து மதவெறியர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, பதற்றத்தை உருவாக்க இந்து மதவெறியர்களே இக்குண்டு வெடிப்பை நடத்தியிருக்கக் கூடும் என்பது பல போலீசு அதிகாரிகளின் கணிப்பு!

## வரலாற்றைத் திரிக்கும் பார்ப்பனச் சதி

இந்து மதவெறிக் கூட்டணி அரசின் கலாச்சார துறை அமைச்சர் ஜக்மோகன், பார்ப்பனிய புராணங்களில் கூறப்பட்டுள்ள சரஸ்வதி நதியின் பாதையைத் தேடும் திருப்பணியை, அரியானா மற்றும் இராசஸ்தான் எல்லைப் பகுதியில் தொடங்கி வைத்திருக்கிறார். அரியானா மாநிலத்தில் உள்ள கபல்மோசன், ரான்மோசன் என்ற இரு கிணறுகளும் சரசுவதி நதியால் நிரம்பியதாகவும், இந்தக் கிணறுகளில் பாண்டவர்கள் குளித்ததாகவும் பார்ப்பனிய புராணம் கூறுகிறது. எனவே, இந்த இரு கிணறுகளையும் ஆழமாகத் தோண்டி சரசுவதி நதியைக் கண்டுபிடிக்கும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது. ''பூமியை ஆழமாகத் தோண்டினால் நிலத்தடி நீர்தான் கிடைக்கும்; அந்த நீரை சரசுவதி நதி நீர் எனப் புளுகப் போகிறார்கள்'' என இடதுசாரி வரலாற்று நிபுணர்கள் இந்தத் தேடும் பணியைக் கிண்டல் செய்திருப்பதோடு, ''இது ஹரப்பா நாகரிகம் ஆரிய நாகரிகம்தான் எனக்கூறுவதற்கான சதி வேலை'' என்றும் அம்பலப்படுத்தியுள்ளனர்.

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

**இதழ் 9**

ஜூலை 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10



மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


## காவிரியில் தண்ணீர் விடாத கிருஷ்ணா நெல்லைக் கொள்முதல் செய்யாத ஜெயா

# எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

தமிழகத்தின் காவிரி பாசனப் பகுதியில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி நடைபெறாது என்பது ஏறத்தாழ உறுதியாகி விட்டது. இதற்கான காரணம் ஒன்றும் புதியதல்ல. மேட்டூர் அணையில் போதிய நீர் கையிருப்பில் இல்லை என்பதோடு, கர்நாடகாவில் இருந்து வரவேண்டிய தண்ணீர் வரத்தும் அடியோடு குறைந்து போய்விட்டது.

குறுவை சாகுபடி இல்லாததால் ஏறத்தாழ 15 இலட்சம் கூலி விவசாயத் தொழிலாளர்கள் முற்றிலுமாக வேலையிழந்து, அடுத்த வேளை சோற்றுக்கு வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களோடு சாகுபடி செய்ய முடியாத ஏழை, நடுத்தர விவசாயிகளையும் சேர்த்துக் கொண்டால், பாதிக்கப்பட்டவர்களின் புள்ளி விவரக் கணக்கு எங்கோ போய் நிற்கும். கூலி விவசாயத் தொழிலாளர்கள் குடும்பத்தோடு பஞ்சம் பிழைக்க கேரளாவிற்கும், திருப்பூருக்கும் ஓடுவதாகவும், எலியைப் பிடித்துச் சுட்டுத் தின்றும், அல்லி - தாமரைக் கிழங்குகளை வேகவைத்து உண்டும் பசியைப் போக்கிக் கொள்வதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

"தென் மேற்குப் பருவ மழை பொய்த்துப் போனதால் கர்நாடகாவிலுள்ள கபினி அணை வறண்டு கிடப்பதாகவும், மைசூரிலுள்ள கிருஷ்ணராஜசாகர் அணையில் இருக்கும் நீரை வைத்து (73 அடி) மைசூர், மாண்டியா பகுதி விவசாயிகளின் தேவையைக் கூட ஈடு செய்ய முடியாது என்பதால், தமிழகத்திற்குத் தண்ணீர் தர முடியாது" எனக் கூறிவிட்டார் கர்நாடக மாநில முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா.

கர்நாடகாவிலுள்ள காவிரியின் அணைகளில் தற்சமயம் தண்ணீர் குறைவாக இருக்கிறது என்பது எந்தளவிற்கு உண்மையோ, அந்தளவிற்குப் போதிய அளவு நீர் இருந்த காலங்களில் கூட, கர்நாடக அரசு இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழகத்திற்குத் தண்ணீரைப் பகிர்ந்து அளித்ததில்லை என்பதும் உண்மை. கர்நாடக அரசு தமிழகத்தை காவிரியின் வடிகால் பகுதியாக்கி வெகுகாலமாகி விட்டது. இப்படிப்பட்ட வறட்சி நிலவும் காலங்களில் இரு மாநில அரசுகளும் கூடிப் பேசி தண்ணீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என காவிரி இடைக்காலத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், கர்நாடக அரசோ சட்டாம்பிள்ளைத்தனமாக நடந்து கொள்வது வாடிக்கையாகி விட்டது.

மேலும், இடைக்காலத் தீர்ப்பை முறையாகவும், முழுமையாகவும் நடைமுறைப் படுத்தச் சொல்லி கர்நாடக அரசை நிர்பந்திக்கும் பொறுப்பும், கடமையும் அரசின் எந்த உறுப்புக்கும் இல்லை என்பதும் ஏற்கனவே அம்பலமாகிவிட்டது. இந்நிலையில் ஜெயா உச்சநீதி மன்றத்தில் தொடுத்திருக்கும் வழக்குப் புதிதாக எதையும் புடுங்கிவிடப் போவதில்லை. காவிரிப் பாசன விவசாயிகளின் கோபத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான கேடயமாகத்தான் இந்த வழக்கு பயன்படும்.

இந்த வழக்கை விட மோசடியானது ஜெயா காவிரிப் பாசனக் கூலி விவசாயிகளுக்காக அறிவித்துள்ள உதவித் திட்டம். ஜெயா ஒதுக்கியுள்ள 164.18 கோடி ரூபாயில், வெறும் 10 கோடி ரூபாய்தான் கூலி விவசாயிகளின் வேலை வாய்ப்புக்குப் பயன்படுத்தப்படும். மீதி அனைத்தும் சாலைகளையும், பாலங்களையும் மராமத்து செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கூலி விவசாயிகளின் குடும்பத்திலும் ஒருவருக்குத் தினமும் வேலை கிடைக்கும் என ஆரவாரமாக அறிவித்திருக்கிறார் ஜெயா. ஆனால், இந்தத் திட்டத்தால் ஒரு கூலி விவசாயிக்கு மாதத்தில் நான்கு நாட்கள் வேலை கிடைத்தாலே அதிசயம் என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள். சுருக்கமாகச் சொன்னால், இந்தத் திட்டம் 'பண வறட்சியால்' வாடும் அ.தி.மு.க. கரை வேட்டி ஒப்பந்தக்காரர்களுக்குத்தான் பயன்படும்.

அ.தி.மு.க.வும் அதன் கூட்டாளிகளும், தி.மு.க.வும் அதன் கூட்டாளிகளும் இப்பிரச்சினையில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்ளும் அதே சமயம், "காவிரியில் தண்ணீர் வராவிட்டால் காவிரிப் பாசன விவசாயிகளின் வாழ்க்கை நாசமாகிவிடும்" என ஒப்பாரி வைக்கிறார்கள். இதற்கு மாறாக, காவிரியில் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் வந்தால் விவசாயியின் வாழ்க்கை செழித்து விடுமா?

விவசாயி குறுவை நடவில் ஈடுபடுவான். ஆனால், தமிழக அரசு விவசாயிக்கு உர மானியம் தராது; இலவச மின்சாரம் தராது; விளைந்த நெல்லை அறுத்துக் கொண்டு வந்தால், தமிழக அரசு கொள்முதலும் செய்யாது. பிறகு, நெல்லை மண்டி வியாபாரிகளிடம் அடிமாட்டு விலைக்கு விற்பதைத் தவிர விவசாயிக்கு வேறு வழி இருக்காது. இந்தத் தாராளமயத் தாக்குதல்களை மூடி மறைத்து விட்டு, காவிரியில் தண்ணீர் வராதது மட்டும்தான் காவிரிப் பாசன விவசாயிகளின் அவலத்திற்குக் காரணம் என ஓட்டுக்கட்சிகள் நாடகமாடுகின்றன.

காவிரியில் தண்ணீர் வராததால், இந்த ஆண்டு குறுவையைக் கொள்முதல் செய்யச் சொல்லும் விவசாயிகளின் பிரச்சினை இருக்காது எனக் கோட்டையில் உள்ள அதிகார கும்பல் மகிழ்ச்சியடைகிறதாம். மேலும், காவிரி நீர்ப் பிரச்சினையைக் காட்டி காவிரிப் பாசன விவசாயிகளை நெல்லுக்குப் பதிலாக வேறு பணப் பயிர்களுக்கு மாற்றும் திட்டத்தையும் அதிகார வர்க்கம் அலசுகிறதாம். அதாவது காவிரி நீர்ப் பிரச்சினை, விவசாயத்தில் தாராளமயத்தைப் புகுத்தும் புதிய ஆயுதமாக ஜெயா கும்பலுக்குப் பயன்படுகிறது.

www.padippakam.com

# அப்துல் கலாம்:
# அரசுத் தலைவராகும் ஆர்.எஸ்.எஸ். விசுவாசி

இந்திய அரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. அதற்கு முன்னரே ஆளும் வர்க்கங்களின் அடுத்த 'ரப்பர் ஸ்டாம்பு' யார் என்பதும் உறுதியாகி விட்டது. ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும் எதிர்த்தரப்பு காங்கிரசும் மட்டுமின்றி, இவற்றுக்கு வெளியிலுள்ள அ.தி.மு.க., சமாஜ்வாடி, தேசிய லீக் முதலான கட்சிகளும் விஞ்ஞானி அப்துல் கலாமை அடுத்த 'ரப்பர் ஸ்டாம்பு' ஆக்குவதில் ஓரணியில் நிற்கின்றன.

அப்துல் கலாம் ஒரு விஞ்ஞானி; பிரதமரின் முன்னாள் முதன்மை விஞ்ஞான ஆலோசகர். இந்துவெறியர்களின் அகண்ட பாரதக் கனவுப்படி பொக்ரானில் அணு குண்டு சோதனை நடத்தியதில் முக்கியப் பங்காற்றியவர். ''அக்னி'' ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி, போர்வெறியும் விரிவாக்கப் பேராசையும் கொண்ட இந்தியாவின் துணை வல்லரசு கொள்கைக்கு வலுவூட்டியவர். தேசியம் என்ற பெயரில் தேசிய வெறியூட்ட இந்து வெறியர்களுக்குக் கிடைத்த பிரம்மாஸ்திரம்தான் அவர். குஜராத்தில் நடந்த வெறியாட்டங்களால் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில் நாங்கள் முசுலீம்களின் எதிரியல்ல என்று நாடகமாடுவதற்காக இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு அவர் ஏவுகணையாகப் பயன்பட்டுள்ளார்.

அவர் பிறப்பால் முசுலீமாக இருந்தாலும், சமூகக் கண்ணோட்டத்தில் அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர். முசுலீம்களைப் போல அவர் தாடி வைப்பதில்லை; ஐந்து வேளை தொழுகை செய்வதில்லை. மாட்டுக்கறி உள்ளிட்டு எந்தக் கறியையும் தொடாத சுத்த சைவக்காரர். பார்ப்பனர்களால் புனிதமானதாகக் கூறப்படும் பகவத் கீதையிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசுபவர். ஓய்வு நேரத்தில் தியாகராஜர் கீர்த்தனைகளை வீணையில் வாசித்து ரசிப்பவர். நான் ஒரு முசுலீம் என்பதைவிட, இந்தியன் என்பதே முக்கியம் என்று தனது நாட்டுப் பற்றை அறிவித்தவர்.

''இந்தியன் - இந்தியனிசம் என்பதுதான் இந்துத்துவத்தின் சாரம்; அந்தப் பார்வை அப்துல் கலாமிடம் உள்ளது. அந்தப் பார்வைதான் ஆர்.எஸ்.எஸ்-இன் உந்து சக்தி'' என்கிறது பாஞ்சஜன்யா என்னும் ஆர்.எஸ்.எஸ். பத்திரிகை. ''இந்து ஆன்மாவைக் கொண்ட முசுலீம்தான் அப்துல்கலாம்'' என்கிறார்கள் பா.ஜ.க.வினர். ''அவர் முசுலீமாக இருந்தாலும் இந்துமதக் கோட்பாடுகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்'' என்கிறார், கலாமின் இளமைகால நண்பரான பட்சி வெங்கடசுப்ரமணிய சாஸ்திரி. ''நாங்கள் அவரை 'கலாம் அய்யர்' என்றுதான் அழைப்போம். அவர் எப்போதும் பிராமண நண்பர்களுடன்தான் இருப்பார். அவர்களைப் போலவே பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தார்'' என்கிறார், இந்திய வான்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநரான ஆராவமுதன்.

சுருக்கமாகச் சொன்னால், ''கலாம் அய்யர்'' இந்துத்துவ சித்தாந்தத்தைப் பின்பற்றி வரும் 'இந்திய' முசுலீம். இந்து வெறியர்களின் தேசிய வெறிக்கும் அணு ஆயுதப் போர்வெறிக்கும் துணை நின்று சேவை செய்த விஞ்ஞானி. குஜராத்தில் நடந்த இந்துவெறிப் பாசிச வெறியாட்டத்தை மூடி மறைத்து, தங்களை மதச்சார்பற்றவர்களாகக் காட்டிக் கொண்டு நாட்டு மக்களை ஏய்க்க இந்துவெறியர்களுக்குக் கிடைத்த விஞ்ஞான முகமூடி!

எந்த நோக்கத்தோடு இந்துவெறி ஆட்சியாளர்கள் அப்துல்கலாமை ஆதரிக்கிறார்களோ, அதை விசுவாசமாக தனது வாக்குமூலங்களில் பிரதிபலிக்கிறார், கலாம். அன்னியர் - அதாவது முசுலீம்களின் படையெடுப்பால் இந்திய நாடு சூறையாடப்பட்டது; நமது பழம் பெருமையும் நாகரீகமும் கலாச்சாரமும் அழிக்கப்பட்டது என்பது பார்ப்பன - இந்துவெறியர்கள் நீண்ட காலமாகக் கூறிவரும் அண்டப் புளுகு. இதையே அப்துல் கலாம், ''இந்தியா அணு ஆயுதம் வைத்திருப்பது அவசியம். ஏனெனில் கடந்த மூவாயிரம் ஆண்டு காலச் சரித்திரத்தைப் புரட்டினால் பல்வேறு நாடுகளின் படையெடுப்புக்கு ஆட்பட்டிருப்பது தெரியும்'' என்று வேறு வார்த்தைகளில் விளக்குகிறார். ''பாகிஸ்தான் அணு ஆயுதங்களை வைத்திருக்கும்போது, நாம் கைகளைக் கட்டிக் கொண்டு தவம் செய்து கொண்டிருக்க முடியாது'' என்று இந்துவெறியர்களின் அணு ஆயுதப் போர்வெறிக்கு உரமேற்றுகிறார்.

குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதத்தை வாயளவில் கூடக் கண்டிக்க முன்வராமல், ''குஜராத் சம்பவம் எனக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கிறது'' என்று முகமூடி வாஜ்பாய் பாணியில் அங்கலாய்க்கிறார். பொக்ரான் குண்டு வெடிப்பு, கார்கில் போர், குஜராத் இந்துவெறியாட்டம், தனியார்மய - தாராளமயக் கொள்ளை பற்றிக் கேட்டால் - ''நடந்தவை நல்லவையாகவே நடந்தன; நடப்பதும் நல்லவையாகவே நடக்கின்றன; நடக்கப் போவதும் நல்லவையாகவே நடக்கும்'' என்று தத்துவ ஞான முத்துக்களை உதிர்க்கிறார்.

எனவேதான், ''விஞ்ஞான ரீதியான பார்வை, மானுட இதயம், முற்போக்கு சிந்தனை, யதார்த்த கண்ணோட்டம் ஆகிய வசீகர முகப்புகளுடன் தேசபக்தியும் நிறைந்த அபூர்வ தலைமைக்கான அடையாளங்களுடன் அப்துல் கலாம் திகழ்கிறார்'' என்று தலையங்கம் தீட்டி துதிபாடுகிறது தினமணி. கலாமின் வாழ்க்கைக் குறிப்புகள், பண்பு நலன்கள், பேட்டிகள், விஞ்ஞான சாதனைகள் என்று முதலாளித்துவ பத்திரிகைகள் பரபரப்பாக செய்தி வெளியிட்டு கலாம் புகழ் பாடுகின்றன.

இந்துவல்லாதவர், பார்ப்பனரல்லா

அப்துல் கலாம் அய்யரை சனாதன முறையில் வரவேற்கும் சென்னை பத்மா சேஷாத்ரி பாலபவன் மாணவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com



அகண்ட பாரதக் கனவுடன் நடந்த பொக்ரான் குண்டு வெடிப்பு களத்தில் இந்துவெறி ஆட்சியாளர்களுடன் ஆர்.எஸ்.எஸ். விஞ்ஞானி அப்துல் கலாம்.

தவர், தமிழால் அறிவில் வான் தொட்டு வளைத்துக் காட்டியவர், நேர்மைத் திறனாளர் என்றெல்லாம் தமிழ்ச் சான்றோர்கள் முதல் திராவிட இயக்கப் பிழைப்புவாதிகள் வரை எல்லோருமே மூன்றாந்தர சினிமா ரசிகன் பாணியில் கலாமுக்கு ''ஓ'' போடுகிறார்கள். சாதுக்களும் சாமியார்களும் மடாதிபதிகளும் கலாமுக்கு ஆசி வழங்குகிறார்கள்.

அப்துல் கலாம் ஒரு விஞ்ஞானி; அதனாலேயே அவர் சமுதாயத்தைப் பற்றிய அறிவியல் பார்வையைக் கொண்டிருப்பார் என்று நம்புவது பாமரத்தனமானது. இட்லரின் பாசிசத்தை உறுதியாக எதிர்த்து நின்றவர், விஞ்ஞானி ஐன்ஸ்டின். ஆனால், அப்துல் கலாம் நாடெங்கும் தொடர்ந்து நடக்கும் இந்து வெறி பாசிச வெறியாட்டத்தை அறிந்திருந்த போதிலும் வாய்மூடி நிற்கிறார். ஐன்ஸ்டினிடம் பாசிச எதிர்ப்பு ஜனநாயக உணர்வு இருந்தது. கலாமிடம் பாசிசத்துக்குப் பணிந்து சேவை செய்யும் அடிமைப் புத்திதான் உள்ளது.

இருவருமே விஞ்ஞானிகள்தான்; எனில் ஐன்ஸ்டினுடன் கலாமை ஒப்பிட முடியுமா? விஞ்ஞானிகள் எல்லாம் சமுதாயத்தைப் பற்றிய அறிவியல் பார்வை கொண்டிருப்பார்கள் என்று நம்பினால், 'இளந்தமிழ் விஞ்ஞானி' மூலிகை பெட்ரோல் ராமர் பிள்ளையை அரசுத் துணைத் தலைவராக்கி விடலாம். அதையும்கூட பிழைப்புவாதக் கூத்தாடிகள் ஆதரித்து துதிபாடக் கிளம்பி விடுவார்கள்.

அரசுத் தலைவர் தேர்தலில் கலாமுக்குப் போட்டியாக மதச்சார்பற்ற ஜனதா தளம் மற்றும் 'இடதுசாரி' கட்சிகளால் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளரான கேப்டன் லட்சுமி செகல், சுதந்திரப் போராட்ட வீராங்கனை. ''குஜராத்தில் இந்துத்துவ மோடி வெறியாட்டத்தை மூடி மறைக்கவே அப்துல் கலாம் அரசுத் தலைவர் பதவிக்கு நிறுத்தப்பட்டுள்ளார்; அணுகுண்டு தயாரிக்க உதவிய ஒருவரை, அணு ஆயுதக் குவிப்புக்கு ஆதரவான ஒருவரை இந்நாட்டின் அரசுத் தலைவராக்கினால் மற்ற நாடுகள் இந்தியாவைப் பற்றி என்ன நினைக்கும்'' என்று லெட்சுமி செகல் இந்து வெறி ஆட்சியாளர்களை அம்பலப்படுத்துகிறார்.

போலி கம்யூனிஸ்டுகள் குஜராத் இந்து வெறியாட்டம் பற்றிய லெட்சுமி செகலின் கருத்தை ஆதரிக்கும் அதேசமயம், இந்தியாவின் அணு ஆயுதப் போர்வெறிக் கொள்கை பற்றி வாய் திறக்க மறுக்கின்றனர். இந்திய அரசின் வங்கதேசப் போர், ஈழ ஆக்கிரமிப்புப் போர் உள்ளிட்டு அதன் துணை வல்லரசு - வட்டார மேலாதிக்க கொள்கையை விசுவாசமாக ஆதரித்து வந்த தமது துரோகம் அம்பலமாகி விடுமோ என்ற அச்சத்தில், அரசியல் பின்னணி எதுவுமில்லாததால் கலாமை ஆதரிக்க முடியாது என்று வேறொரு காரணத்தை முன் வைக்கிறார்கள். அரசியல் சாசனம் - சட்ட நுணுக்கம் பற்றி அரசுத் தலைவர் அறிந்திருக்க வேண்டும்; சட்ட வல்லுநர்களின் வழி காட்டுதல் இருந்த போதிலும் இக்கட்டான தருணங்களில் அரசியல் நெளிவு சுளிவுகளோடு செயல்பட திறன் பெற்றவராக இருக்க வேண்டும்; இத்தகைய அரசியல் சட்டப் பின்னணி எதுவுமில்லாததாலேயே கலாமை ஆதரிக்க முடியாது என்கின்றனர்.

இந்த அபத்தமான வாதத்தை எடுத்துக் கொண்டு பா.ஜ.க. எடுபிடிகளும் பத்திரிகைகளும், அரசியல் சாசனமே இத்தகைய விதிமுறைகளை அரசுத் தலைவர் பதவிக்கு விதிக்கவில்லையே என்று போலி கம்யூனிஸ்டுகளை எகத்தாளம் செய்கின்றனர். அது ஒருபுறமிருக்கட்டும். அரசியல் சாசனத்தை அறிந்து கொண்டு நெளிவு சுளிவுகளோடு அதைச் செயல்படுத்தினால் நாட்டில் ஜனநாயகம் பூத்துக் குலுங்கி, நாட்டைக் கவ்வியுள்ள எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்பதுபோல போலி கம்யூனிஸ்டுகள் பிரமையூட்டுவதுதான் அதைவிட மோசடித்தனமானது.

**விஞ்ஞானிகள் எல்லாம் சமுதாயத்தைப் பற்றிய அறிவியல் பார்வை கொண்டிருப்பார்கள் என்று நம்பினால், 'இளந்தமிழ் விஞ்ஞானி' மூலிகை பெட்ரோல் ராமர் பிள்ளையை அரசுத் துணைத் தலைவராக்கி விடலாம்**

'தலித்திய' வாதிகளோ, தாழ்த்தப்பட்டவரான இன்றைய அரசுத் தலைவர் நாராயணனை மீண்டும் அப்பதவியில் அமர்த்தக் கூடாது என்பதற்காகவே பா.ஜ.க.வினர் கலாமை நிறுத்தியிருக்கிறார்கள். ஏனெனில் அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய பா.ஜ.க. மேற்கொண்ட முயற்சியைக் கடுமையாக விமர்சித்ததோடு, பா.ஜ.க.வுக்கு பல்வேறு அரசியல் நெருக்கடிகளை உருவாக்கி புதிய மரபுகளை கே.ஆர். நாராயணன் வகுத்தார் என்கிறார்கள்.

போலி கம்யூனிஸ்டுகளும் சரி, தலித்தியவாதிகளும் சரி தமது வாதங்களின் மூலம் அரசுத் தலைவர் பதவி என்பது ஏதோ உயர் அதிகாரமுள்ள பதவி போலவும், அரசுத் தலைவர் நினைத்தால் எந்தவொரு ஜனநாயக விரோத ஆட்சியையும் கலைத்தோ, அல்லது அரசியல் நெருக்கடிகளை உருவாக்கி கட்டுப்படுத்தவோ முடியும் என்பதாகச் சித்தரிக்கிறார்கள்.

உண்மையில், அரசுத் தலைவருக்கு 'அசாதாரணமான' அதிகாரம் இருக்கிறதா? ஒரு வெங்காயமும் கிடையாது. அரசுத் தலைவர் பதவி என்பது அலங்கரிக்கப்பட்ட சோளக் கொல்லை பொம்மைதான்!

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் மூலவர்களில் ஒருவரான டாக்டர் அம்பேத்கர், ''தேசத்தின் முழுமைக்கும் தலைவர் ஜனாதிபதிதான்; ஆனால்,

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

## ''பேசி முடிச்சுவுடு தலைவா!''

# கொல்லைப்புறத்தில் கெஞ்சல் எல்லைப்புறத்தில் கூச்சல்

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே போர் மூண்டு, அது அணு ஆயுதப் போராக வெடித்து விடுமோ என்றிருந்த பதற்ற நிலை, தற்பொழுது கணிசமாகத் தணிந்து விட்டது. ஜம்மு - காசுமீர் மாநிலத்தில் எல்லைக் கட்டுப்பாடு கோட்டையொட்டி இரு நாடுகளுக்கும் இடையே விட்டுவிட்டு நடந்து வந்த பீரங்கிச் சண்டையும் தற்பொழுது முடிவுக்கு வந்து விட்டது.

இரண்டு நாடுகளும் எல்லையோரமும் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகிலும் நிறுத்தி வைத்திருக்கும் தங்கள் நாட்டுப் படைகளைத் திரும்பப் பெறவில்லை. எனினும், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி காசுமீருக்குள் நுழையும் முசுலீம் தீவிரவாதிகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்துவதாக பாகிஸ்தான் உறுதியளித்திருக்கிறது. பாகிஸ்தானையொட்டி அரபிக்கடலில் நின்று கொண்டிருந்த தனது போர்க் கப்பல்களை இந்தியா திரும்பப் பெற்றுக் கொண்டதோடு, பாகிஸ்தானின் வர்த்தக விமானங்கள் இந்திய வான்வழியாகப் பறந்து செல்ல மீண்டும் அனுமதியளித்திருக்கிறது. மேலும், பாகிஸ்தானுக்குப் புதிய இந்தியத் தூதரையும் நியமித்துள்ளது.

எல்லைக்கு அருகில் படைகளைக் குவித்து, பாகிஸ்தானை மிரட்டி, காரியத்தைச் சாதித்துவிட்டதாகக் கூறுகிறது, இந்தியா. இதைத் தனது தார்க்குச்சி அரசு தந்திரத்திற்குக் கிடைத்த வெற்றி என்றும் மார்தட்டிக் கொள்கிறது. பாகிஸ்தானோ, தன்னிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதால், பெரிய நாடான இந்தியா தன்னைத் தாக்காமல் பின்வாங்கி விட்டதாகப் பீற்றிக் கொள்கிறது.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்து வரும் முறுகல் நிலையை, பதட்டத்தை, அவர்கள் போடும் தேசபக்தக் கூச்சல்களுக்கெல்லாம் மயங்காமல் நடுநிலையோடு பரிசீலித்தால்தான், வெற்றி அடைந்து விட்டதாகக் கூறுவதற்கு இரு நாடுகளுக்கும் அருகதையில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்; இரு நாடுகளும் காசுமீர் பிரச்சினையை, அதன் மூலம் தங்களின் எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் பொறுப்பை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்டுச் சரணாகதியடைந்து விட்டதை அறிந்து கொள்ள முடியும்.

பாகிஸ்தானை விட, இந்தியாவின் நிலைதான் மிகவும் பரிதாபகரமானது. ஏனென்றால், காசுமீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய எந்தவொரு மூன்றாம் நாட்டையும் அனுமதிக்க மாட்டோம் என இன்னும்கூட வெற்றுக் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பது இந்தியாதான். மேலும், காலுசக் இராணுவக் குடியிருப்பில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பின், இந்தியாவிற்கான பாக். தூதர் அஷ்ரப் ஜஹாங்கீர் காசியை வெளியேற்றிய வேகத்தையும்; இந்தியாவின் போர் முஸ்தீபுகளையும்; இந்து மதவெறிக் கும்பல் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளும் எழுப்பிய தேசிய வெறிக் கூச்சலையும் இந்தச் சரணாகதியோடு ஒப்பீட்டால்தான் இந்தியா அடைந்திருக்கும் பரிதாபகரமான தோல்வியின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

**ஓட்டுக் கட்சிகளின் போர்வெறிக் கூச்சல்**

காலுசக் தாக்குதல் பற்றி நாடாளுமன்றத்தின் கீழவையில் ஏழு மணிநேரமும், மேலவையில் நான்கு மணிநேரமும் விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் ''இந்தத் (தீவிரவாத) தொல்லையை ஒரேயடியாக ஒழித்துவிட வேண்டும்'' எனத் தீர்மானம் போடப்பட்டது. இத்தீர்மானம் இலைமறை காயாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பாலோர், ''பாகிஸ்தானுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்'' எனப் போருக்குத் தூபம் போட்டனர். மைய அரசின் சார்பாகப் பேசிய அத்வானி, என்ன பாடம் புகட்டுவது, எப்படி புகட்டுவது என்பதை அரசாங்கம் தீர்மானிக்கும் என உறுப்பினர்களின் சவடாலுக்குப் பதில் அளித்தார்.

நாடாளுமன்றத்தில் இப்படி அரசியல் நாகரிகத்தோடு பூடகமாக பாகிஸ்தானைக் குறி வைத்த அத்வானி, நாடாளுமன்றத்திற்கு வெளியே, ''பாக். மீது இரண்டே வாரம் முழுப் போர் நடத்தி அதனை வீழ்த்திவிடலாம்'' எனப் பேட்டை ரவுடியைப் போலச் சவால் விட்டார்.

பாக். மீது போர் நடத்தக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் ''தேசபக்தர்கள்''!




கடந்த டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்தவுடனேயே கிட்டதட்ட ஏழு இலட்சம் படைவீரர்களையும், ஆயுதங்களையும் எல்லையில் குவித்தது இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி. கடந்த ஆறு மாதங்களாக எல்லையில் ''புலியை'' எதிர்பார்த்து வாடி வதங்கிக் கிடக்கும் இராணுவ வீரர்களை உசுப்பேற்றிவிட ஜம்மு - காசுமீருக்குச் சென்ற பிரதமர் வாஜ்பாயி, ''தீவிரவாதிகளுக்கும் அவர்களைத் தூண்டிவிடுகிறவர்களுக்கும் எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? என எல்லோரும் என்னைக் கேட்கிறார்கள். நான் இந்த மாநிலத்திற்கு வந்ததே



படிப்பகம்

அதற்குப் பதிலாகும். படைவீரர்களே, தீர்மானகரமான சண்டைக்குத் தயாராக இருங்கள்... எதிரியை நசுக்கி விடுவோம்'' என கட்ட பொம்மன் சிவாஜி கணக்காய் வசனம் பேசி விட்டுத் திரும்பினார். படைவீரர்களும் இந்த முறை 'புலி' வந்தே விடும் என மிகுந்த உஷாரானார்கள்.

''நாடாளுமன்றத் தாக்குதல் நடந்தவுடனேயே நாங்கள் தாக்கியிருக்க வேண்டும். இந்தியா பொறுமையாக இருக்கிறது என்பதற்காக, அதைத் தண்டிக்கக் கூடாது. எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு'' என வாஜ்பாயி உலக நாடுகளுக்கு, புலம்பலா, எச்சரிக்கையா எனத் தெளிவாகத் தெரியாதபடி அறிக்கை விடுத்தார்.



கண்ணி வெடி புதைக்கப்பட்டதால், தங்களின் நிலத்தைப் பறிகொடுத்தவிட்ட இராசஸ்தான் விவசாயிகள்.

எதிர்க் கட்சிகளோ இந்த மதவெறிக் கூட்டணிக் கட்சிகளைப் பின்னுக்குத் தள்ளி விடும்படி போர்வெறி - தேசியவெறிக் கூச்சலை எடுத்து விட்டன. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான சோனியா, ''தீர்மானகரமான போர், இறுதிப் போர் என வாய்ச் சவடால் அடித்துக் கொண்டிராமல் காரியத்தில் இறங்குமாறு'' இந்துமதவெறியர்களைத் தூண்டிவிட்டார்.

இந்து மதவெறியர்களால் அடிக்கடி பாகிஸ்தான் ஆள் என நக்கல் செய்யப்படும் முலயம் சிங், ''பாகிஸ்தானுக்கு உடனே பாடம் புகட்டுங்கள்; நீங்கள் போருக்குக் கூடப் போக வேண்டாம். சிந்து நதி நீரைத் தடுத்து நிறுத்துங்கள்... அவர்கள் நமது காலில் விழுவார்கள்'' என பாக். மக்களைப் பட்டினி போட்டுக் கொல்ல வழி சொன்னார்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் இளைய பங்காளியான ஜெயா நாடாளுமன்றத்திற்குக் கொடுத்த அறிக்கையில், ''பாகிஸ்தானுடன் உள்ள உறவுகள் அனைத்தையும் அறுத்து விடுங்கள். பாகிஸ்தானால் மறக்கவே முடியாதபடியான பாடம் புகட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது. பாக். மீது முழு அளவிலான போரை நடத்துவோம்'' எனக் குறிப்பிட்டு, தனது இந்திய தேசிய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

பாக். எதிர்ப்பு இந்திய தேசிய வெறியைக் கக்கிய கட்சிகள் அனைத்தும், ''இது நமது போர். இந்தப் போரை நடத்த நாம் அமெரிக்காவிற்காகக் காத்திருக்கத் தேவையில்லை'' என ஏகாதிபத்திய எதிர்ப்பு சவடால் அடிக்கவும் தயங்கவில்லை.

பா.ஜ.க. தொடங்கி பகுஜன் சமாஜ் கட்சி முடிய, முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகள் போட்ட போர்வெறிக் கூச்சலை, இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் பாகிஸ்தானிடம் இருக்கும் அணு ஆயுதங்களைக் காட்டித் தடுத்து நிறுத்த முயன்றார்கள். இந்தப் 'பெரு முயுற்சி'யையும் அக்கட்சிகள் நாடாளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும்தான் செய்தன; அதற்கு வெளியே இந்தப் போர்வெறிக் கூச்சலைக் கண்டித்து எந்தவொரு இயக்கமும் எடுத்ததாகத் தெரியவில்லை. இடதுசாரிகள் எடுத்துவிட்ட பாக்.கின் அணு ஆயுத பூச்சாண்டிக்கு முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகள் சொன்ன பதில்: ''நம்மிடமும் அணு ஆயுதங்கள் உள்ளன!''

### இராணுவத்தின் சவடால் - பத்திரிக்கைகளின் தூபம்

நாள் முழுக்க குளு குளு ஏ.சி. அறையில் உட்கார்ந்து கொண்டு பொழுதை ஓட்டும் ஓட்டுக்கட்சி தலைவர்களே பாகிஸ்தானுக்கு எதிராக இந்தத் துள்ளு துள்ளினால், எல்லையில் கடந்த ஆறு மாதங்களாக வெட்டியாக வெந்து கொண்டிருக்கும் இராணுவம் சும்மா இருந்து விடுமா?

கண்ணி வெடி வெடித்ததால் கால்களை இழந்துவிட்ட லக்கா சிங்.



''முடிவு எதுவும் எடுக்காமல் வழவழவென்று விவாதித்துக் கொண்டிருப்பதற்கு முடிவு எடுங்கள்'' என இராணுவத் தளபதி பத்மனாபா தனது எரிச்சலைக் கொட்டினார்.

அவருக்குக் கீழிருந்த அதிகாரிகளோ, ''பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை அழித்து, அந்நாட்டின் எண்ணெய் போக்குவரத்தை முடமாக்கி விடுவோம்; பாகிஸ்தானை முப்பது ஆண்டு காலம் பின்னோக்கித் தள்ளும் அளவிற்குக் குண்டுகளைப் போடுவோம்'' எனத் தாக்குதல் ஆலோசனைகளை அள்ளி வழங்கினார்கள். இந்த அதிரடி ஆக்ஷன் ஹீரோக்கள் யாரும் தங்களின் பெயரை வெளியே சொல்லவில்லை. சொல்லியிருந்தால், விஜய்காந்துக்குப் பதிலாக இவர்களைப் போட்டு ஓர் அதிரடி தேச பக்தி மசாலா படத்தையாவது தயாரித்து அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்திருக்கலாம்.

எள்ளளவும் கலப்படமில்லாத ஐ.எஸ்.ஐ. தேச பக்தி கொண்ட முதலாளித்துவ பத்திரிகைகள், இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகவே பயன்படுத்திக் கொண்டன. வீட்டில் உட்கார்ந்து கொண்டு பங்குச் சந்தை நிலவரத்தைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை வளைத்துப் போட்டு, ''பாகிஸ்தானை எப்படித் தாக்கலாம்!'' என வகைவகையாக ''கவர் ஸ்டோரி''களை வெளியிட்டுத் தள்ளின. இந்த தேசபக்த போட்டியில் வழக்கம் போலவே ''இந்தியா டுடே'' இதழ் முதலிடத்தைப் பெற்றது.

இந்திய ஆளும் வர்க்கமும், 'தேசிய' ஓட்டுக் கட்சிகளும் வெகு காலமாகப் பரப்பி வரும் பாக். எதிர்ப்பு - இந்திய தேசிய வெறியில் மயங்கிக் கிடக்கும் 'இந்தியர்கள்' பாக். மீதான போரை ஆதரித்து தேசியப் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதியும், ''டீக்கடை பெஞ்சு''களில் பேசியும் தங்களின் தேசபக்த அரிப்பைத் தீர்த்துக் கொண்டனர்.

### பாக் மீது போர் சாத்தியமா?

பாகிஸ்தான் மீது விழும் குண்டின் இனிய சத்தத்தைக் கேட்பதற்காகத் தேச

www.padippakam.com

பக்தர்கள் அனைவரும் காதைத் தீட்டிக் கொண்டிருந்தபொழுது, மே 17 இந்து நாளிதழில் அதுல் அனேஜா என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் அவர், ''அமெரிக்க இராணுவத் துருப்புகள் தப்பியோடும் தாலிபான் தீவிரவாதிகளைத் தேடிப் பிடித்து ஒழிப்பதற்காக பாகிஸ்தானில் இறங்கியிருப்பது; பாகிஸ்தானின் கராச்சி, பாஸ்னி, ஜாகோபாபாத், தல்பாதின் ஆகிய விமானத் தளங்களை அமெரிக்கா தன் பிடியில் வைத்திருப்பது; அணுகுண்டுகளை வீசக்கூடிய பாகிஸ்தானின் ஏவுகணைகளை முடமாக்கும் முழுத் திறன் இந்தியாவிடம் இல்லாமல் இருப்பது; இந்திய இராணுவத்தில் உயர் தொழில்நுட்பம் கொண்ட டி90 பீரங்கிகளையும், எஸ்.யு 30 இரக போர் விமானங்களையும் புகுத்தும் பணி அரைகுறையாக இருப்பது'' ஆகிய காரணங்களால் இந்தியா பாக். மீது முழு அளவிலான போர் தொடுக்க தற்பொழுது சாத்தியமில்லை என்றும், குறைந்தபட்ச போர் தொடுக்க வேண்டும் என்றால்கூட, சர்வதேச நாடுகளைச் சமாதானப்படுத்தும் அரசு தந்திரத் திறன் தேவை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

போர்வெறியர்கள் அதுல்அனேஜாவின் வாதங்களை முதுகெலும்பில்லாதவர்களின் முனகல் என்று கிண்டல் அடிக்கலாம். அவர்களுக்காக, இந்திய இராணுவத்தின் போர்த்திறன் குறித்து தற்பொழுது அம்பலமாகியிருக்கும் அரசு இரகசியமொன்றை எடுத்து வைப்போம்.

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்த சில நாட்களிலேயே பாக். வசமுள்ள ஆசாத் காசுமீரில் உள்ள தீவிரவாத முகாம்களையும்; ஆசாத் காசுமீரையும் சீனாவையும்; ஆசாத் காசுமீரையும் பாகிஸ்தானையும் இணைக்கும் பாலங்களையும் வான்வழித் தாக்குதலின் மூலம் அழித்து விடத் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு பிரதமரும் ஒப்புதல் அளித்திருக்கிறார். ஆனால், இத்திட்டத்திற்கு இராணுவம் மறுப்பு தெரிவித்து விட்டது.

''இந்தத் தாக்குதல் ஒரு முழு போராக வெடிக்குமானால், அதைச் சமாளிக்கக் கூடிய அளவிற்கான நவீன சாதனங்கள் இராணுவத்திடம் இல்லை'' எனத் தனது இயலாமையை இராணுவம் மைய அரசிடம் தெரிவித்திருக்கிறது. அத்தாக்குதல் நடந்திருக்குமானால், பஞ்சாபிலும், இராசஸ்தான் பாலைவனத்திலும் நிறுத்தப்பட்டிருக்கும் இந்திய இராணுவத்திடம் இரவில் பார்க்கும் சாதனங்கள் இல்லாததால், அவை பலத்த அடி வாங்கியிருக்கும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க இராணுவத் துருப்புகள் பாகிஸ்தானில் இறங்கியிருக்கும் அரசியல் காரணத்தை விட்டு விடுவோம். சொந்த இராணுவம் ஒரு முழு அளவிலான போரைத் தாக்குப் பிடிக்கும் அளவிற்குத் திறன் இன்றி இருப்பதை மூடி மறைத்து விட்டு, ''பாகிஸ்தானை இரண்டே வாரத்திற்குள் சுருட்டி விடுவோம்'' என்ற போர் வெறிக் கூச்சலை எழுப்பி ஏன் மக்களை முட்டாளாக்கினார்கள்? இந்தப் படை திரட்டல், இந்தப் போர்வெறிக் கூச்சல் மூலம் இந்தியா சாதிக்க விரும்பியது என்ன? தார்க்குச்சி அரசு தந்திரத்தின் மூலம் பாகிஸ்தானை அடிபணியச் செய்துவிட்டதாக இந்தியா மார் தட்டுகிறதே, அந்தத் தார்க்குச்சி யாரிடம் இருந்தது? யாரையெல்லாம் பதம் பார்த்தது?

### ஏகாதிபத்தியங்களின் 'நடுநிலை'

அமெரிக்கா தீவிரவாதத்திற்கு எதிரான போரை ஆப்கானில் தொடங்கியதில் இருந்தே இந்து மதவெறியர்களும், 'தேசிய' பத்திரிகைகளும், ''பாகிஸ்தான் தீவிரவாதத்தைத் தூண்டி விடும் நாடு; இந்தியா தீவிரவாதத்தால் பாதிக்கப்படும் நாடு. ஆகையால் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு உற்ற தோழனாக இந்தியாதான் இருக்க முடியும்; அமெரிக்காவின் தீவிரவாதத்துக்கு எதிரான கூட்டணியில் பாக். பங்கு பெற முடியாது'' என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப பிரச்சாரம் செய்து வருகின்றனர். கடந்த ஒரு மாத காலமாக இந்தப் பிரச்சாரத்திற்குப் பலன் கிடைத்து விட்டதைப் போன்று, அமெரிக்கா இந்தியாவின் பக்கம் சாயத் தொடங்கி விட்டதாகத் துள்ளிக் குதித்துக் கொண்டு திரிகின்றனர். இதற்கு ஆதாரமாக, ''தீவிரவாதிகள் எல்லை தாண்டி காசுமீருக்குள் ஊடுருவுவதை பாகிஸ்தான் தடுக்க வேண்டும்'' என ஏகாதிபத்திய நாடுகள் பாகிஸ்தானிடம் கண்டிப்புடன் சொன்னதை இந்தியா எடுத்து வைக்கிறது.

உண்மைதான். அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், ''முஷாரப் ஏவுகணைகளைச் சோதிப்பதைவிட, தீவிரவாதிகள் எல்லை தாண்டிச் செல்வதைத் தடுப்பதிலும், தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் அக்கறை செலுத்த வேண்டும்'' என்றார். அமெரிக்கா மட்டுமின்றி ரசியா, பிரான்சு, இங்கிலாந்து உள்ளிட்டு பிற ஏகாதிபத்திய நாடுகளும் கூட பாகிஸ்தானைக் கண்டித்தன. ஜப்பான், ''முஷாரப் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தாவிட்டால், நாங்கள் வழங்கும் உதவியை நிறுத்தி விடுவோம்'' என மிரட்டும் தொனியில் சொன்னது.

முஷராப்பைக் கண்டித்த அதே ஏகாதி

## சமாதான பேரமும் சாவு வியாபாரமும்

''இந்தியாவும் பாகிஸ்தானும் போரில் ஈடுபடக்கூடாது; தங்களின் பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்'' என நேரில் வந்து சமரசம் பேசியும், தொலைபேசி மூலம் கண்டிப்பு கலந்த குரலில் அறிவுறுத்தியும் தங்களை சமாதானத் தூதுவர்களாகக் காட்டிக் கொண்ட ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தும், மறைமுகமாக, இரகசியமாக இந்தியாவிடமும், பாகிஸ்தானிடமும் பல ஆயிரம் கோடி ரூபாய் பெறுமான ஆயுத விற்பனை ஒப்பந்தங்களைப் போட்டுள்ளன. வியாபாரம் இல்லாமல் படுத்துக் கிடக்கும் ஏகாதிபத்திய நாடுகளின் ஆயுதத் தளவாட பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியா - பாக். இடையே இருந்துவரும் இந்தப் பதற்ற நிலை, பொன்னான வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

730 கோடி ரூபாய் பெறுமான நவீன ஆயுதங்கள் விற்பதற்கான ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது. இந்தியக் கப்பற்படை, அமெரிக்கக் கப்பற்படையுடன் சேர்ந்து மலாக்கா நீர் இணைப்பில் ரோந்து சுற்றி வருவதால், இந்தியக் கப்பற் படைக்குத் தேவையான நவீன ஹெலிகாப்டர்களை விற்க அமெரிக்கா முன் வந்துள்ளது. மேலும், அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து ஆயுதங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக இராணுவத் தகவல் பரிமாற்ற ஒப்பந்தமும் கையெழுத்தாகியிருக்கிறது.

பிரிட்டன் இந்தியாவிற்கு 7000 கோடி ரூபாய் பெறுமான 66 ஹாக் இரக விமானங்களை விற்பதற்காக பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. பிப்ரவரி மாதம் இந்தியாவிற்கு வந்த டோனி பிளேயர் இந்த ஒப்பந்தத்தை எப்படியும் பேசி முடித்துவிட வேண்டும் என்பதில்தான் குறியாக இருந்திருக்கிறார்.

ரசியாவிடமிருந்து 310 டி-90 இரக பீரங்கிகளை வாங்க போடப்பட்ட ஒப்பந்தத்தின் படி, முதல் தவணையாக 50 பீரங்கிகள் இந்தியாவிற்கு வந்து சேர்ந்து விட்டன. இந்தப் பீரங்கி பேர ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பு 3500 கோடி ரூபாய்.

பிரான்சு இந்தியாவுடன் இணைந்து மும்பயில் போர்க் கப்பல்களைக் கட்டும் 1000 கோடி ரூபாய் பெறுமான ஒப்பந்தம் போட்டுள்ளதோடு, 126 மிராஜ்-2005 இரக போர் விமானங்களை இந்தியாவிற்கு விற்கவும் முன் வந்துள்ளது.

''குடி குடியைக் கெடுக்கும்'' என்று எழுதி வைத்துவிட்டு சாராய வியாபாரம் நடத்தப்படுவதைப் போல, இந்த ஏகாதிபத்திய நாடுகள், ''தற்காப்புக்கான ஆயுதங்களைத் தான் தாங்கள் விற்பதாகவும், இதனால் இந்தியா-பாக். இடையே ஆயுதப் போட்டி எழுந்துவிடாது'' என்றும் பிரச்சாரம் செய்து, தங்களின் சாவு வியாபாரத்தை நியாயப்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

பத்திய நாடுகள் இந்தியாவுக்கு 'அறிவுரை' சொல்லவும் தவறவில்லை. ஜார்ஜ் புஷ், ''முஷாரப்பால் ஒரே நாளில் தீவிரவாதத்தை ஒழித்து விட முடியாது என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்; இந்தியா முஷாரப்புக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்'' என்றார். காலுசக் சம்பவம் நடந்தபொழுது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வந்து சென்ற அமெரிக்காவின் தெற்காசியப் பகுதிக்கான துணைச் செயலர் கிறிஸ்டினா ரோக்கா, ''முஷாரப் ஏதோ செய்து கொண்டுதான் இருக்கிறார்; இதற்கு பிரதிபலனாக இந்தியாவும் ஏதாவது செய்ய வேண்டும்'' என இந்தியாவுக்கு எல்லையில் இருந்து படைகளை விலக்கிச் சொல்லி நிர்ப்பந்தம் கொடுத்தார்.

காலுசக் சம்பவத்தையடுத்து இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் வந்து போன ஏகாதிபத்திய நாடுகளின் தலைவர்கள், நமது நாட்டு அரசியல்வாதிகளைப் போல இங்கொன்றும் அங்கொன்றும் பேசுவது என்ற தந்திரத்தையும் கடைப்பிடித்தனர். இந்தியாவில் இருந்தபொழுது காலுசக் சம்பவத்தைக் கண்டித்துப் பேசிய அமெரிக்க அரசின் துணைச்செயலர் கிறிஸ்டினா ரோக்கா பாகிஸ்தானில் அதைப் பற்றி வாயே திறக்கவில்லை.

''எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி அல் - கொய்தா தீவிரவாதிகள் நடமாடுவதாக'' இந்தியாவில் பேசிய அமெரிக்க அரசின் இராணுவச் செயலர் டொனால்ட் ரம்ஸ்ஃபெல்ட், பாகிஸ்தானில் ''நான் சும்மா ஒரு பேச்சுக்காகச் சொன்னேன். அதை இந்தியா பெரிதுபடுத்தி விட்டது'' என்று தட்டைத் திருப்பிப் போட்டார்.

''பாகிஸ்தானுக்கும் நிதி உதவியை நிறுத்துவோம்'' என மிரட்டிய ஜப்பான், அதேசமயம், ''தீவிரவாதிகளை ஒழிக்க முஷாரப் நடவடிக்கைகள் எடுக்கிறார்'' எனத் தட்டிக் கொடுக்கவும் செய்தது.

ஏகாதிபத்திய நாடுகள் பாகிஸ்தானைக் கண்டிப்பதை மட்டும் பெரிதுபடுத்தும் இந்தியா, அதைக் காட்டி, காசுமீர் பிரச்சினையில் ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தும் இந்தியா பக்கம் வந்துவிட்டதாகப் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் உண்மையென்ன?

நாடாளுமன்றம் மற்றும் காலுசக் இராணுவக் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், பாகிஸ்தான் அரசின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டவை என அடித்துப் பேசுகிறது இந்தியா. இதற்கான வலுவான ஆதாரங்கள் எதையும் இந்தியா முன் வைக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, எந்தவொரு ஏகாதிபத்திய நாடும், பாக். மீது இந்தியா வைக்கும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. ''இந்த இரண்டு தாக்குதல்களையும் பாகிஸ்தானுக்குக் கட்டுப்படாத போக்கிரி குழுக்கள் செய்ததாக''க் கூறியுள்ள அமெரிக்கா, ''காசுமீரில் நடக்கும் ஒவ்வொரு தாக்குதலையும் இந்தியா பாகிஸ்தானோடு முடிச்சுப் போடக் கூடாது'' என அறிவுறுத்தியிருக்கிறது.

இது மட்டுமின்றி, ''காசுமீர் முழுமையும் இந்தியாவிற்குச் சொந்தம்'' என்ற இந்தியாவின் கருத்தையும் ஏகாதிபத்திய நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களைப் பொருத்தவரை ''காசுமீர் பிரச்சினைக்குரிய பகுதி''. இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க வந்த இங்கிலாந்தின் வெளியுறவுச் செயலர் ஜாக் ஸ்ட்ரா இதை வெளிப்படையாகவே கூறினார்.

### அடிவருடிகளில் யாருக்கு முதலிடம்?

''பாகிஸ்தான் எல்லை தாண்டி வரும் முசுலீம் தீவிரவாதிகளுக்கு உதவுவதோடு, முசுலீம் தீவிரவாதத்தை ஊட்டி வளர்க்கும் நாடாகவும் இருக்கிறது என்பதை எப்பாடுபட்டாவது அமெரிக்காவுக்குப் புரிய வைத்து, பாகிஸ்தானை அமெரிக்காவிடமிருந்து கழட்டிவிடுவது; மேற்காசியாவில் இசுரேல் முசுலீம் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போர் தொடுப்பதைப் போல, தெற்காசியாவில் முசுலீம் தீவிரவாதத்திற்கு எதிராகவும், அதை ஊட்டி வளர்க்கும் பாக்.கிற்கு எதிராகவும் போர் தொடுக்க இந்தியா அமெரிக்காவின் அனுமதியையும், தனிச் சலுகையையும் பெறுவது'' - இவைதான் இந்து மதவெறிக் கூட்டணி அரசின் நோக்கங்கள்.

அமெரிக்காவிற்கோ தெற்காசியாவில் இருந்து முசுலீம் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவது மட்டும் நோக்கமல்ல. மத்திய ஆசியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய எண்ணெய் வளங்களை, ரசியா, ஈரான் தலையீடின்றி ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்வது; ரசியா, சீனாவின் செல்வாக்கை மட்டுப்படுத்தவும், ஈரானைக் கண்காணிக்கவும் மத்திய, தெற்காசியாவைப் பயன்படுத்துவது; இந்தப் பொருளாதார, இராணுவ நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஈரான், சீனா எல்லையில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தானில் தனது விசுவாசிகளைக் கொண்ட நிலையான கைக்கூலி அரசை அமைப்பது - இவைதான் அமெரிக்காவின் நோக்கங்கள்.

ஆப்கானிஸ்தானில் நிலையான ஆட்சி அமைய வேண்டுமானால், அந்நாட்டின் பெரிய இனக் குழுவான பட்டாணியர்களை அமெரிக்கா ஆசை காட்டி அடக்கியாக வேண்டும். அதற்கு பாகிஸ்தானின் உதவி அமெரிக்காவிற்கு இன்றியமையாதது. இதனால் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா என்னதான் ஆதாரங்களைக் காட்டினாலும், அமெரிக்கா தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானைக் கழட்டி விட்டு விட்டு, இந்தியாவைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு தற்சமயம் இல்லை.

மேலும், அமெரிக்காவின் ஆசியும், ஆதரவும் இன்றி பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியோ, இராணுவ சர்வாதிகார ஆட்சியோ நடக்காது. அந்தளவிற்கு, பாகிஸ்தான் கடைந்தெடுத்த அமெரிக்கக் கைக்கூலி நாடென்பது வெட்ட வெளிச்சமான உண்மை. அதனால்தான் அதிபர் முஷாரப், அமெரிக்கா தாலிபான் பற்றிய அணுகுமுறையை மாற்றிக் கொண்டவுடனேயே தானும் மாற்றிக் கொண்டு, ஆப்கான் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்குத் துணை போனார். இதனால் உள்நாட்டில் ''ஜிகாதி''களின் எதிர்ப்பை அவர் சம்பாதித்துக் கொண்டாலும், தனக்குக் கட்டுப்படாத போக்கிரி ஜிகாதி குழுக்கள் உருவாகிவிடக் கூடாது என்பதில் முஷாரப் அக்கறை காட்டுகிறார். இதனால்தான், ''முஷா






படிப்பகம்

www.padippakam.com

ரப்புக்கு இந்தியா அவகாசம் கொடுக்க வேண்டும்'' என அமெரிக்கா பரிந்து பேசுகிறது.

பாகிஸ்தான் தனக்கு அடங்காத போக்கிரிக் குழுக்களை அடக்குவதை காசுமீர் பிரச்சினையை அந்நாடு கைகழுவி வருகிறது என்பதாகப் பார்க்க முடியாது. ''காசுமீர் எங்களின் தேசியப் பிரச்சினை'' என்றுதான் முஷாரப் இன்னமும் கூறிக் கொண்டிருக்கிறார். போக்கிரி ஜிகாதிக் குழுக்களின் மீது முஷாரப் நடவடிக்கை எடுப்பதற்கு ஈடாக, அமெரிக்கா காசுமீர் பிரச்சினையில் வெளிப்படையாகவே தலையிட்டு மத்தியஸ்தம் பண்ண வேண்டும் என்பதுதான் முஷாரப்பின் தந்திரம்.



அமெரிக்க இராணுவத்துடன் சேர்ந்து இந்தியாவில் போர் பயிற்சியில் ஈடுபடும் இந்திய இராணுவம்.

ராக முணுமுணுக்கக் கூட இல்லை. மாறாக, ''எல்லைக் கட்டுப்பாடு பகுதி மோசமான மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதி. இதனை அமெரிக்க - பிரிட்டன் துருப்புகள் கண்காணிப்பது மிகவும் சிரமம்'' என்று நயமாக எடுத்துக் கூறி மறுத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவோ, ''எங்களின் துருப்புகள் தேவையில்லையென்றால், எங்களின் மின்னணுக் கண்காணிப்புக் கருவிகளை எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் புதைத்து விடுங்கள்'' என மாற்றுத் திட்டத்தை முன் வைத்துள்ளது. எல்லைக் கட்டுப்பாட்டு கோடு நெடுகிலும் அமெரிக்காவின் மின்னணுக் கருவிகளைப் பொருத்துவது, ''ஒட்டகம் கூடாரத்திற்குள் மூக்கை நுழைத்த கதைதான்'' என முதலாளித்துவ அரசியல் வல்லுவர்களே எச்சரிக்கிறார்கள். எனினும், இந்து மத வெறிக் கூட்டணி ஆட்சி இந்த எச்சரிக்கைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு விட்டது.

இந்தியா வசமுள்ள ஜம்மு - காசுமீரில் போராடும் மக்களோடும், குழுக்களோடும் வெளிப்படையான பேச்சு வார்த்தைகளை நடத்தாமல் அந்தப் பிரச்சினையை இராணுவத்தைக் கொண்டு ஒடுக்கி வரும் இந்தியா, பாக். விரித்த இந்த வலையில் - காசுமீர் பிரச்சினையை சர்வதேசமயமாக்குவதில் - வசமாக மாட்டிக் கொண்டு விட்டது.

அமெரிக்காவோடு, பாகிஸ்தானும் இந்தியாவும் கொண்டுள்ள உறவு, ''நான் முந்தி, நீ பிந்தி'' என்ற அதிகார வர்க்கப் படிநிலை உறவல்ல. மாறாக, சூரியக் குடும்பத்தில் கோள்கள் இருப்பதைப் போல, அமெரிக்காவின் நலனுக்கு ஏற்றபடி, அமெரிக்காவைச் சுற்றி அதன் அடிவருடி நாடுகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேசமயம், பரமசிவன் கழுத்தில் பாம்பாக இருந்தாலும், எந்தவொரு அடிவருடி நாடும் தன்னிச்சைப்படி ஆடக்கூடாது என்பதில் அமெரிக்கா உஷாராகவே இருக்கிறது.

அதனால்தான், முஷாரப் அரசின் மூத்த அமைச்சர் ஜாவெத் அஷ்ரஃப் குவாஸி, ''பாகிஸ்தானின் சுயாதிபத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியா மீது அணுகுண்டு வீசவும் தயங்க மாட்டோம்'' என போர் வெறியைக் கக்கியதை, அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் கடுமையாகக் கண்டித்தன. அதையடுத்துதான் முஷாரப், ''எந்தப் பையத்தியக்காரனும் அணுகுண்டு வீசுவதைப் பற்றி நினைத்துப் பார்க்க மாட்டான்'' எனப் பின் வாங்கினார்.

''அணுகுண்டு வீசும் உரிமை பெற்ற ஒரே பைத்தியக்காரன் அமெரிக்காதான்'' என்பதில் உறுதியாக இருக்கும் ஜார்ஜ் புஷ், இரு நாடுகளில் இருந்தும் அமெரிக்கா, இங்கிலாந்தைச் சேர்ந்த தூதரக ஊழியர்களை வெளியேறச் செய்தார். இந்த நடவடிக்கை, ''வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், அந்நிய மூலதனமும் வருவதைத் தடுத்து விடுவோம்'' எனக் காட்ட, இரு நாடுகளுக்கும் விடப்பட்ட மிரட்டலாகக் கூறப்படுகிறது.

**அமெரிக்காவின் சதி**

அணுகுண்டை வைத்துக் கொண்டு இரு நாடுகளும் துள்ளுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு அமெரிக்கா, ''எல்லைக் கட்டுப்பாடு கோட்டைக் கண்காணிக்கும் பொறுப்பை அமெரிக்கா - இங்கிலாந்தின் கூட்டுப் படைகளிடம் விட்டு விடுங்கள்'' என்ற திட்டத்தை முன் வைத்துள்ளது. இந்தத் திட்டத்தை வருங்காலத்தில் எப்படியாவது செயல்படுத்தி விட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அமெரிக்காவின் இராணுவச் செயலர் டோனால்ட் ரம்ஸ்ஃபெல்ட், ''எல்லைக் கட்டுப்பாடு கோட்டருகே அல்-கொய்தா தீவிரவாதிகளின் நடமாட்டம் இருக்கிறது'' என இந்தியாவில் 'உளறியதாக'க் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் இந்தத் திட்டம் பாகிஸ்தானின் விருப்பப்படி காசுமீர் பிரச்சினையை முழுமையாக சர்வதேசமயமாக்கி விடும் என்பது ஒருபுறமிருக்க, பீற்றிக் கொள்ளப்படும் இந்தியாவின் சுயாதிபத்தியம், தேசிய ஒருமைப்பாடு அனைத்தையும் அமெரிக்காவிடம் அடகு வைப்பதாகும். ஆங்கிலேய ஆட்சியின் பொழுது வெல்லெல்லி பிரபு சுதேசி அரசர்களின் பாதுகாப்புக்காகக் கொண்டு வந்த துணைப் படைதிட்டத்திற்கும் அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கும் பெரிய வேறுபாடு கிடையாது.

காசுமீரையும், இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டையும் காப்பதற்காக பாகிஸ்தானை எதிர்த்து தேசிய வெறிக் கூச்சல் எழுப்பும் இந்து மதவெறிக் கும்பல், அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு எதி

அமெரிக்காவின் தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்துக்கு ஒப்புதல், அமெரிக்கா இராணுவத்துடன் இந்தியாவில் கூட்டு இராணுவப் பயிற்சி என ஏற்கனவே அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கத்துக்குப் பணிந்துவிட்ட இந்து மதவெறிக் கும்பலிடம் ஒப்புதலைத் தவிர வேறெதை எதிர்பார்க்க முடியும்?

காசுமீர் பிரச்சினையையொட்டி நடந்த கார்கில் போரில் இலைமறை காயாகத் தெரிந்த அமெரிக்கத் தலையீடு, இப்பொழுது மிகவும் வெளிப்படையாக முன்னணிக்கு வந்துவிட்டது. அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஒப்புதலுடன், காசுமீர் மக்களின் எதிர்காலம் இந்து மதவெறிக் கூட்டணி அரசால் அமெரிக்காவிடம் அடகு வைக்கப்பட்டு விட்டது.

அதேசமயம், சர்வதேச எல்லையிலும் எல்லைக் கட்டுப்பாடு கோட்டுக்கு அருகிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் படைகளைத் திரும்பப் பெறாததைக் காட்டி, இந்தச் சரணாகதியை மூடிமறைத்துவிட முயலுகிறது இந்து மதவெறிக் கும்பல். மேலும், போர் பதட்டத்தைக் காட்டி காசுமீரை இராணுவமயமாக்கியிருப்பதன் மூலம் அங்கு நடந்து வரும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இன்னும் கொடூரமாக ஒடுக்கவும்; இராணுவத்தின் மேற்பார்வையில் ஒரு மோசடித் தேர்தலை நடத்தி ஜனநாயக நாடகம் ஆடவும் முயலுகிறது, இந்து மதவெறிக் கும்பல்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## திண்ணியத்தில் வன்கொடுமை

# சட்டப்பூர்வ வழிமுறைகள் இனியும் சாத்தியமா?

**சா**தி ஆதிக்கத் திமிர் உச்சநிலையை எட்டும்போது சாதிவெறியர்கள் எத்தகைய கொடூரமான - வக்கிரமான மனுதர்மக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவார்கள் என்பதற்கு திண்ணியத்தில் நடந்த சாதிவெறி அட்டூழியமே சான்றாகத் திகழ்கிறது.

திருச்சி மாவட்டம் இலால்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட திண்ணியம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவரான கருப்பையா என்பவர், தனது தங்கைக்கு தொகுப்பு வீடு பெறுவதற்காக, திண்ணியம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவி ராஜலட்சுமியிடம் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 2000 இலஞ்சமாகக் கொடுத்துள்ளார். அவருக்குத் தொகுப்பு வீடு கிடைக்காததால், தான் கொடுத்த பணத்தைத் திருப்பித் தரச் சொல்லி ராஜலட்சுமியிடம் அவர் பல முறை மன்றாடியும் இன்று வரை கிடைக்கவில்லை. எனவே அவர் கடந்த மே 20-ஆம் தேதியன்று தனது உறவினர்களான முருகேசன், இராமசாமி ஆகியோருடன் சேர்ந்து, முன்னாள் தலைவர் ராஜலட்சுமியிடம் தான் கொடுத்த பணத்தை ஊர்க்காரர்கள் வாங்கித் தரவேண்டும் என்றும், பணம் கிடைக்காவிடில் ஊரில் வெட்டிமை வேலையைச் செய்யப் போவதில்லை என்றும் தப்படித்து ஊர் முழுக்கச் சொல்லியுள்ளார்.

இலஞ்ச ஊழல் மலத்தைத் தின்று வயிறு வளர்க்கும் தங்களது யோக்கியதை ஊர் முழுக்க நாறிப் போனதைக் கண்டு ஆத்திரமடைந்த கள்ளர் சாதி வெறியர்களான ராஜலெட்சுமியும் அவரது கணவர் சுப்பிரமணியும், கருப்பையாவை இழுத்து வந்து தமது உறவினர்களுடன் சேர்ந்து கொண்டு மிருகத்தனமாகத் தாக்கினர். பறப்பயலே, உனக்கு இவ்வளவு திமிராடா - என்று செருப்புக் காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி மிதித்தனர். தப்படித்துத் தண்டோரா போட்டது தப்புதான் என்று ஊர் முழுக்க தண்டோரா போடச் சொல்லி, காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கச் சொல்லி உதைத்தனர்.

இத்தாக்குதலை அறிந்து அஞ்சிய முருகேசனும் இராமசாமியும், தங்களை மன்னித்து விடும்படி கோரி ராஜலட்சுமியின் வீட்டுக்குச் சென்றனர். அவரது கணவரும் முன்னாள் ஆசிரியருமான சுப்பிரமணி, ''மன்னிப்பாடா கேட்குறீங்க? பறநாய்களா'' என்று கேட்டுக் கொண்டே அவர்களை எட்டி உதைத்தார். குப்புற விழுந்து முருகேசனின் பல் உடைந்தது. பின்னர் பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு அவர்களின் உடலெங்கும் ராஜலட்சுமி குடும்பத்தினர் சூடு போட்டனர். அவர்கள் காலில் விழுந்து கெஞ்சிய பிறகு, செஞ்சது தப்புதான்னு ஊர் முழுக்க தண்டோரா போட வைத்தனர். அதன் பிறகும் திமிர் அடங்காத இச்சாதிவெறியர்கள் தண்டோரா போட்டுவிட்டுத் திரும்பிய முருகேசனையும் ராமசாமியையும் காய்ந்த மலத்தை தகர முறத்தில் எடுத்து வரச் செய்து, ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொள்ளச் செய்துள்ளனர். இதற்குத் தயங்கியபடியே மறுத்து, மன்னிப்புக் கேட்ட அவர்களுக்கு மீண்டும் சூடு போட்டு கட்டாயப் படுத்தித் தின்ன வைத்துள்ளனர்.

இச்சாதிவெறிக் கொடுமை மெதுவாகக் கசிந்து பத்திரிகைகளில் அம்பலமான பின்னரும், இலால்குடி போலீசு நிலையத்தில் புகார் கொடுத்த போதிலும், போலீசார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் மனித உரிமை வழக்கறிஞர்கள் மையத்தினரும் தலையிட்ட பின்னரே சாதிவெறியர்கள் 10 பேரின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதில் ராஜலட்சுமியின் உறவினர்கள் 5 பேர் மீது சாதாரண தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டதால், அவர்கள் கடந்த ஜூன் 21-ஆம் தேதியன்று பிணையில் வெளிவந்து விட்டனர். எஞ்சியுள்ள ராஜலட்சுமி, அவரது கணவர் உள்ளிட்ட 5 பேர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் சாதாரண பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆயுள் தண்டனைக்குரிய கொடிய பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்படாததால், அவர்கள் அபராதம் செலுத்திவிட்டு பிணையில் விடுதலையாகும் வாய்ப்புகளே அதிகமாக உள்ளது.

**சாதிவெறியாட்ட வன்கொடுமைக்கு ஆளான தாழ்த்தப்பட்டோர்: இராமசாமி, முருகேசன் மற்றும் கருப்பையா.**



வன்கொடுமை தடுப்புச் சட்டம், தீண்டாமை ஒழிப்புச் சட்டம், இட ஒதுக்கீடு - சமூக நீதி என்றெல்லாம் எவ்வளவுதான் மாய்மாலம் செய்தாலும் அவையெல்லாம் வெறும் காகிதக் குப்பைகள்தான். சட்டத்தின் ஆட்சியல்ல; உண்மையில் சாதிய - வர்க்க ஆதிக்க ஆட்சிதான் எங்கும் கோலோச்சுகிறது என்பதை திண்ணியத்தில் நடந்த சாதிவெறிக் கொடுமை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. சட்டபூர்வ வழிமுறைகளின் மூலம் சாதிய ஆதிக்கம் நீடிப்பதோடு நின்று விடுவதில்லை. சாதியத் திமிரோடு மிகக் கொடூரமான - வக்கிரமான வெறியாட்டங்களையும் சாதிவெறியர்கள் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர்.

எனவே இத்தகைய கொடுமைகளை சட்டவாத வழிமுறைகளின் மூலம் ஒழித்து விட முடியாது. திண்ணியத்தில் வன்கொடுமைக்கு ஆளான கருப்பையா, முருகேசன், இராமசாமி ஆகியோரும் கூட இத்தகைய வழிமுறைகளின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. எனவேதான் அவர்கள் மனுகொடுப்பது, உண்ணாவிரதமிருப்பது முதலான சட்டபூர்வ போராட்ட வழிமுறைகளைக் கைவிட்டு, தமது யதார்த்தமான சிந்தனையிலிருந்து, மோசடியை எதிர்த்து ஊர் முழுக்க தண்டோரா போட்டு ஆதிக்க சக்திகளை அம்பலப்படுத்தும் முன்னுதாரணமிக்க போராட்ட வழிமுறையை மேற்கொண்டனர்.

சட்டபூர்வ வழிமுறைகளுக்கு அப்பாற்பட்ட இத்தகைய புதிய போராட்ட முறைகளை மேற்கொள்வதைத் தவிர, சாதிய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய இனி வேறென்ன வழியிருக்கிறது?

**- பு.ஜ. செய்தியாளர்கள்,**
**திருச்சி.**


படிப்பகம்

www.padippakam.com

# தோலிருக்க சுளை முழுங்கிய டாடா

மைய அரசின் முழுக் கட்டுப்பாட்டிலும், ஏகபோகத்திலும் இருந்து வந்த தொலைபேசி சேவையைத் தனியாரிடம் தாரை வார்க்கும் திருப்பணி, ஏறத்தாழ ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது. முதலில், ''செல்லுலார்'' இணைப்பு வர்த்தகத்தில் தனியாரை அனுமதித்த மைய அரசு, படிப் படியாகத் தனியாருக்கு உள்ளூர் மற்றும் தொலைதூர இணைப்பு வர்த்தகத்தையும் திறந்து விட்டது.

அடுத்த கட்டமாக, மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில், அரசு நிறுவனமாக இருந்த தொலைபேசி துறையை, அரசின் கட்டுப்பாட்டில் இருந்து பிடுங்கி, ''பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட்'' எனப் புதுப் பெயர் கொடுத்து, பொதுத்துறை நிறுவனமாக்கியது. இது, பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான தொலைபேசித் துறையைத் தனியாரிடம் தூக்கிக் கொடுப்பதற்காக அரசு எடுத்திருக்கும் நரித்தனமான முயற்சி தவிர வேறில்லை.

கடந்த பிப்ரவரியில், தொலைபேசி மற்றம் தகவல் தொடர்பு சேவையில் ஈடுபட்டு வந்த ''விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட்'' (VSNL) என்ற பொதுத்துறை நிறுவனத்தை டாடாவுக்கு விற்றுத் தனியார்மய மாக்கியதன் மூலம், இந்துமதவெறி மைய அரசு, ஒட்டு மொத்த தொலைபேசித் துறையையும் தனியார்மய மாக்கும் அம்முயற்சிக்குப் பிள்ளையார் சுழியும் போட்டுவிட்டது.

ஓரளவு நாட்டு நடப்பை அறிந்தவர்களுக்குக் கூட, ''விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட்'' என்ற இந்தப் பொதுத் துறை நிறுவனம், இதுவரை அறியப்படாத புதிய நிறுவனமாகத் தோன்றலாம். ஆனால், இந்நிறுவனம் தொலைபேசித் துறையின் கீழ், அதன் முழுக் கட்டுப்பாட்டில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த போதும், பெரும்பாலான மக்கள் பயன்படுத்தும் உள்ளூர் அல்லது தொலை தூர இணைப்பு சேவைகளில் ஈடுபட்டது கிடையாது. இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்கும், அயல் நாடுகளில் இருந்து இந்தியாவிற்கும் நேரடி தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தித் தரும் சர்வதேச சேவையிலும் (ISD); இந்தியாவிற்குள்ளும், இந்தியாவிற்கும் அயல்நாடுகளுக்கு இடையிலும் இணைய தள இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் சேவையிலும் மட்டுமே இந்நிறுவனம் ஈடுபட்டு வந்தது; ஈடுப்ட்டு வருகிறது.

இரண்டாம் கட்டப் பொருளாதாரச் சீர்திருத்தத்தின் படி, இலாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை விற்று வரும் மைய அரசு, கடந்த பிப்ரவரியில், விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட்டின் 25 சதவீதப் பங்குகளை 1218.37 கோடி ரூபாய்க்கு விற்க முன் வந்தது. ஏற்கனவே தொலைபேசி மற்றும் இணைய தள சேவை வர்த்தகத்தில் புகுந்து விட்ட டாடாவும், ரிலையன்சும் இந்தப் பொதுத்துறை நிறுவனத்தை விழுங்கிவிடப் போட்டியில் குதித்தன. வீ.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 25 சதவீதப் பங்குகளை ரிலையன்ஸ் 1346.62 கோடி ரூபாய்க்கும், டாடா 1439.25 கோடி ரூபாய்க்கும் வாங்க முன் வந்தன. இந்த ஏலப் போட்டியில், அரசு நிர்ணயித்த விலையைவிட கிட்டதட்ட 220 கோடி ரூபாய்க்கு அதிகமாக விலை கொடுக்க முன் வந்த டாடாவுக்கு யோகம் அடித்தது.

வீ.எஸ்.என்.எல்-இன் 25 சதவீதப் பங்குகளை 1439 கோடி ரூபாய்க்கு மைய அரசிடமிருந்து வாங்கிய டாடா, அதன்பின் அந்நிறுவனத்தின் மேலும் 20 சதவீதப் பங்குகளை 1100 கோடி ரூபாய்க்குப் பங்குச் சந்தையில் இருந்து வாங்கியது. மீதமுள்ள 55 சதவீதப் பங்குகளை அரசும், வேறு பல முதலீட்டாளர்களும் வைத்திருக்கும் போதும், வீ.எஸ்.என்.எல்-இன் நிர்வாகக் கட்டுப்பாடு முழுவதும் டாடாவின் கைகளுக்குச் சென்று விட்டது. தனியார்மயமாக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு, அதனின் 25 சதவீதப் பங்குகளை வாங்கும் தனியார் முதலாளிகளுக்கே தரப்படும் என மைய அரசு ஏற்கனவே சலுகையினை அறிவித்திருப்பதால், வீ.எஸ்.என்.எல் இன்று ஏறக்குறைய டாடாவின் குடும்பச் சொத்தாகிவிட்டது.

வீ.எஸ்.என்.எல். நிறுவனத்தை டாடாவிற்கு (வலது) விற்றதே மிகப் பெரிய மோசடி. அதற்கு உடந்தையாக இருந்த பிரமோத் மகாஜன் (இடது) இப்பொழுது அம்பானிக்காக டாடாவிடம் மல்லுக்கு நிற்கிறார்.



***

மைய அரசு நிர்ணயித்த



படிப்பகம்

விலைக்கு மேலாக 200 கோடி ரூபாய் கொடுத்து வீ.எஸ்.என்.எல்-இன் பங்குகளை டாடா வாங்கியிருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தால், இந்த வியாபாரம் எந்தவிதமான சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படையாகவும், நாணயமாகவும் நடந்திருப்பதாகத் தோன்றும். ஆனால், வீ.எஸ்.என்.எல்-இன் சொத்து மதிப்பு, வருடந்தோறும் அது ஈட்டி வரும் இலாபம், அதன் கையிருப்பிலுள்ள சேமிப்பு, வியாபாரத்தில் அந்நிறுவனத்திற்குள்ள ஏகபோக செல்வாக்கு - இவை அனைத்தோடும் டாடா கொடுத்த விலையை ஒப்பீட்டுப் பார்க்கும் பொழுதுதான் இந்த மோசடி வியாபாரத்தின் பிரம்மாண்டம் பிடிபடும்.

இந்தியாவில் நடைபெறும் சர்வதேச தொலைபேசி சேவை மற்றும் இணைய தள இணைப்பு சேவை வர்த்தகத்தில் 80 சதவீதப் பங்கு வீ.எஸ்.என்.எல்-இன் கைகளில்தான் உள்ளது. இந்த இரண்டு சேவை வியாபாரத்திலும் தனியாரும் நுழையத் தொடங்கி விட்டாலும், இந்த இரண்டு துறையிலும் வீ.எஸ்.என்.எல்-க்கு இருந்து வரும் ஏகபோகத்தை இன்னும் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு யாராலும் அசைக்க முடியாது எனக் கூறப்படுகிறது.

தில்லி, சென்னை, கொல்கத்தா, புனே ஆகிய நகரங்களில் வீ.எஸ்.என்.எல்-க்குச் சொந்தமாக இருக்கும் இடங்களின் மதிப்பு மட்டும் தோராயமாக 1546 கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

வீ.எஸ்.என்.எல் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மைய அரசிற்கு இலாப ஈவுத் தொகையாக 1852 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் வீ.எஸ்.என்.எல் அடைந்த இலாபம் 1407 கோடி ரூபாய்.

வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தைத் தனியார்மயமாக்க அரசு முடிவு செய்த பொழுது அதன் கையிருப்பில் 1600 கோடி ரூபாய் சேமிப்பாக இருந்திருக்கிறது.

வீ.எஸ்.என்.எல்-இன் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ள டாடா அரசுக்குக் கொடுத்த விலை 1439 கோடி ரூபாய், வீ.எஸ்.என்.எல்-க்குச் சொந்தமான அடிமனைகளின் மதிப்புக்குச் சமமாகக் கூட இல்லை. ஆனாலும், மைய அரசோ இதை இலாபகரமான வியாபாரமாகக் கூறி, கேட்பவனையெல்லாம் கேணப்பயலாக்குகிறது.

1400 கோடி ரூபாய் இலாபமும், 1600 கோடி ரூபாய் சேமிப்பும் - அதாவது 3000 கோடி ரூபாய் உபரியாக வைத்திருக்கும் நிறுவனத்தின் 45 சதவீதப் பங்குகளை டாடா 2539 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது. பால் கறக்கும் காராம் பசுவை யாராவது அடிமாட்டு விலைக்கு விற்பார்களா எனக் கேட்டால், பங்குச் சந்தை மதிப்பின் படி வீ.எஸ்.என்.எல் அடிமாடுதான் எனப் பொருளாதார நிபுணர்கள் வாதாடுகிறார்கள்.



**தரகு முதலாளிகளுக்கு இடையேயான பொறாமை தான் தனியார்மயமாக்கலுக்கு மிகப் பெரிய அபாயம் என எச்சரித்து, வீ.எஸ்.என்.எல். நிறுவனத்தில் டாடா நடத்திய மோசடியை அமுக்கிவிட முயன்றார், அருண் ஷோரி.**

வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தை பிப்ரவரி மாதம் விலைக்கு வாங்கிய டாடா, மே மாதம் வீ.எஸ்.என்.எல்-இன் நிர்வாகக் குழுவைக் கூட்டி, அதனின் சேமிப்பில் இருந்து 1200 கோடி ரூபாயை எடுத்து, நட்டத்தில் நடந்து வரும் ''டாடா டெலிசர்வீசஸ்'' என்ற தனது நிறுவனத்தில் மூலதனமாகப் போட்டது. கடை தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக இருக்கிறதே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், டாடாவும், பொருளாதார நிபுணர்களும் கடைக்காரனின் நன்மைக்காகத்தான் தேங்காயை எடுத்து உடைத்ததாக வாதாடுகிறார்கள்.

பல்லாயிரம் கோடி ரூபாய் சொத்து மதிப்பும், 1400 கோடி ரூபாய் இலாபமும் ஈட்டிய வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தின் 25 சதவீத பங்குகளை 1439.25 கோடி ரூபாய்க்கு வாங்கும் டாடா, நட்டத்தில் இயங்கும் டாடா டெலிசர்வீசஸின் 25 சதவீதப் பங்குகளை 1200 கோடி ரூபாய்க்கு வீ.எஸ்.என்.எல் மூலம் வாங்குகிறார். டாடா டெலி சர்வீசஸை இலாபத்தில் இயங்க வைக்க வேண்டும் என்பதற்காகவே, வீ.எஸ்.என்.எல் மொட்டையடிக்கப்படுவதை இது மிகவும் வெளிப்படையாகவே எடுத்துக் காட்டுகிறது. ஆனால், டாடாவும், பொருளாதாரப் புலிகளும் ''வீ.எஸ்.என்.எல்-இன் எதிர்கால இலாபம் கருதியே இந்த முதலீட்டைச் செய்ததாக''க் கதை விடுகிறார்கள்.

டாடா, வீ.எஸ்.என்.எல். நிறுவனத்தில் இருந்து கடத்திக் கொண்டு போன 1200 கோடி ரூபாயைக் கழித்து விட்டால், பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தை டாடா மிகவும் தந்திரமாக வெறும் 1339 கோடி ரூபாயில் கைப்பற்றிக் கொண்டு விட்டது.

இது ஒருபுறமிருக்க, டாடா, வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தின் 45 சதவீதப் பங்குகளைத் தனது சொந்தப் பணத்தில் இருந்து வாங்கவில்லையென்றும், அந்த 2539 கோடி ரூபாயையும் வங்கிகளில் இருந்தும், நிதி நிறுவனங்களில் இருந்தும்தான் கடனாகப் பெற்றதாகக் கூறப்படுகிறது. நம் விரலைக் கொண்டே நம் கண்ணைக் குத்துவதைப் போல, மக்களின் வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தை மக்களின் சேமிப்பைப் பயன்படுத்தியே விலைக்கு வாங்கி விட்டார் டாடா.

டாடா வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கியதை விட, அந்நிறுவனத்தில் இருந்து 1200 கோடி ரூபாய் மூலதனத்தைக் கடத்தியிருப்பதுதான் சூடான வாக்குவாதங்களைக் கிளப்பிவிட்டுள்ளது.

தொலைதொடர்புத் துறை அமைச்சர் பிரமோத் மகாஜன், டாடாவின் இந்த மூலதனக் கடத்தலை நாணயமற்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை எழுப்பி பிரமோத் மகாஜனுக்கு தகுதியிருக்கிறதா என்ற கேள்விக்கு நாம் பதில் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பொறுப்பைத் தேசியப் பத்திரிகைகள் எடுத்துக் கொண்டன. அவை, ''வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தை ஏலத்தில் எடுக்க முடியாமல் தோற்றுப் போன ரிலையன்ஸ் சார்பாக பிரமோத் மகாஜன் குற்றஞ்சாட்டுகிறார்'' என்று டாடாவின் சார்பாக குரைத்தன.

தனியார்மயமாக்கும் துறையின் அமைச்சர் அருண்ஷோரி, ''தரகு முதலாளிகளுக்கு இடையேயுள்ள போட்டியும் பொறாமையும்தான், தனியார்மயமாக்கலுக்கு மிகப் பெரும் அபாயம்'' என எச்சரித்து, டாடாவையும் அம்பானியையும் சமாதானப்படுத்தி, இந்த மோசடியை அமுக்கிவிட முயன்றார்.

மைய அரசு, பால்கோவை ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு விற்றபொழுது, ''ஸ்டெர்லைட் நிறுவனம் பால்கோவின் சேமிப்புகளைத் தனக்குச் சொந்தமான வேறு நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது'' என்ற நிபந்தனையை விதித்திருந்தது. வீ.எஸ்.என்.எல் விற்பனையில் இது போன்ற நிபந்தனை விதிக்கப்படவில்லை. முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் இந்த வேறுபாட்டைக் காட்டி, ''டாடாவின் முடிவைத் தொலைதொடர்பு துறை அமைச்சர் கேள்விக்குள்ளாக்குவது அதிகார மீறல்'' எனச் சாடுகிறார்கள்.

வீ.எஸ்.என்.எல் நிறுவனத்தின் 25 சதவீதப் பங்குகளைத் தனது கையில் வைத்தி

ருக்கும் மைய அரசு கூட, நிர்வாகக் குழு என்ற பெயரில் டாடாவின் எடுபிடிகள் எடுக்கும் முடிவைக் கேள்வி கேட்க முடியாது என்றால், வேறு யார்தான் டாடாவைத் தட்டிக் கேட்க முடியும்? இன்று தன்னிச்சையாக மூலதனக் கடத்தலை நடத்தி வீ.எஸ்.என்.எல்-ஐக் கொள்ளையடித்தவர்கள், நாளை தன்னிச்சையாகக் கட்டண உயர்வையும் அறிவித்துப் பொதுமக்களையும் கொள்ளையடிப்பார்கள்!

பால்கோவை விற்பனை செய்தபொழுது விதிக்கப்பட்ட நிபந்தனை, வீ.எஸ்.என்.எல் விற்பனையின் பொழுது ஏன் விதிக்கப்படவில்லை என்பதற்குத் தனியார்மயமாக்கல் துறையின் செயலாளர், ''பால்கோவை விற்பனை செய்தபொழுது, தொழிலாளர்களின் எதிர்ப்பு வலுவாக இருந்தது; எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டார்கள். வீ.எஸ்.என்.எல் விற்பனைக்குப் பெரிய எதிர்ப்பு எதுவும் இல்லை. அதனால் நாங்கள் அது போன்ற விதியைச் சேர்க்கவில்லை'' எனப் பதில் கூறி, நாட்டின் அரசியல் நிலையைப் புட்டு வைக்கிறார்.

''வீ.எஸ்.என்.எல் நிறுவனத்திடம் 1600 கோடி ரூபாய் உபரியாக இருப்பது எங்களுக்குத் தெரியும். அதை எங்கள் விருப்பப்படிப் பயன்படுத்திக் கொள்ள அரசு தடை விதிக்காது என்று தெரிந்து கொண்ட பின்னர்தான் நாங்கள் 1439.25 கோடி ரூபாய் கொடுத்து 25 சதவீதப் பங்குகளை வாங்க முடிவு செய்தோம்'' என்கிறார் டாடா.

கன்னக்கோல் வைத்துத் திருடும் கும்பல், திருடுவதற்கு முன்பாக, பெட்டகம் எங்கே இருக்கிறது என வேவு பார்த்துத் தெரிந்து கொள்ளும். அப்படிப்பட்ட கன்னக்கோல் திருட்டுக் கும்பல்தான் டாடா என்பதை இந்த விவகாரம் அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

''பொதுத்துறை நிறுவனங்களின் திறனையும், திறமையையும் வளர்ப்பதற்கும்; அவற்றின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் தனியார்மயமாக்குவதைத் தவிர வேறு வழியில்லை'' என்பதுதான் தனியார்மயத்தை ஆதரிப்பவர்களின் வாதம்.

வீ.எஸ் என்.எல் தனியார்மயமாக்கபட்ட பின், கடந்த இரண்டு மாதங்களில் அதனின் திறனும், சேவையும் இம்மியளவு கூட உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், டாடாவின் சொத்து மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய் உயர்ந்து விட்டது மட்டும் நிதர்சனமாக தெரிகிறது.

தனியார்மயமாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் நிலை, பேராசைக்காரனிடம் அகப்பட்டுக் கொண்ட தங்க முட்டையிடும் வாத்தின் கதையாகி விட்டது என்பதுதான் உண்மை!

● செல்வம்

## பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு வலது கம்யூனிஸ்டுகள் விருது:

# ஓம் சக்தியும் ஜனசக்தியும்

மே 24, 25, 26 தேதிகளில் கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40-ஆம் ஆண்டு சிறப்பு மாநாட்டின் சிறப்பு என்ன என்பதைப் பார்க்கப் போயிருந்தோம்.

முதல்நாள் நிகழ்ச்சிதான் முழு மாநாட்டின் சிறப்புக்கே சிறப்பு சேர்த்த பெருஞ்சிறப்பு! தமிழகத்தின் மிகப் பெரிய தரகு முதலாளியும் இந்து மதவெறிக் கும்பலின் புரவலரும், ஆன்மீகம் என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ். கருத்துக்களைத் 'தேனினும் இனிய தமிழில்' பிரச்சாரம் செய்து வருபவருமான பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களுக்குத் 'தமிழ்ச் செம்மல்' என்ற விருது வழங்குவதுதான் முதல்நாள் நிகழ்ச்சி.

மகாலிங்கத்துக்கு விருது வழங்கியது கலை இலக்கியப் பெருமன்றம்; பெருமன்றத்திற்கு மேற்படி விழாவையே வழங்கியவர் இன்னொரு முதலாளி. கோவை ''சி.ஆர்.ஐ. பம்ப்ஸ்'' என்ற நிறுவனம்தான் மாநாட்டை 'ஸ்பான்சர்' செய்திருந்தது. இந்த நிறுவனத்தின் முதலாளி முன்னாள் வலது கம்யூனிஸ்டு கட்சிக்காரர்.

''என்னே முன்னாள் தோழரின் வர்க்க உணர்வு!'' என்று யாரும் புல்லரிக்க வேண்டாம். இந்த 'முன்னாள் தோழரின்' தொழிற்சாலையில் பெரும்பாலோர் காண்டிராக்ட் தொழிலாளர்கள்; ஏ.ஐ.டி.யு.சி. உள்ளிட்ட எந்தத் தொழிற்சங்கமும் அங்கே கிடையாது; கொடியேற்றவும் முடியாது. மேற்படி 'தோழர்' அன்னிய நிறுவனங்களுடன் கூட்டுச்சேரத் துடித்துக் கொண்டிருப்பவர் என்பது கூடுதலாகக் கூறப்படும் செய்தி.

எனவே, ''கம்யூனிஸ்டு கட்சியின் இலக்கிய அமைப்பு ஒரு தரகு முதலாளிக்கு எப்படி விருது வழங்கலாம்?'' என்ற கேள்வியை மூட்டை கட்டிவிட்டு நிகழ்ச்சிக்குள் போவோம்.

''சிறந்த தமிழறிஞர், பழம் பெரும் தமிழ் நூல்களை ஆங்கிலம், இந்தி என மொழி பெயர்த்து வெளியிடுபவர், வெளிநாடு சென்றால் கூட அங்கும் தமிழைப் பற்றிப் பேசுபவர். தென்னக நதிகளை இணைக்கக் குரல் கொடுத்தவர், புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்த தொழிலதிபர்; சிறந்த ஆன்மீகவாதி; சாதி, மதம் பார்க்காதவர்'' என்பதால் இவருக்கு இந்த விருதை வழங்குவது பொருத்தமானது என நிகழ்ச்சியில் பேசிய அனைவரும் குறிப்பிட்டனர்.

கோவையில் இந்து மதவெறியெனும் பார்த்தீனியச் செடி அமோகமாக வளர்வதற்கு நிலம் கொடுத்து உரமிட்டவர் 'அருட்செல்வர்'. ''ஓம் சக்தி'' எனும் இந்து பக்தி - ஆன்மீக பத்திரிகையின் நிறுவனரும் புரவலருமாக இருந்து ஆர்.எஸ்.எஸ்-க்கு சேவை செய்பவர். நம்மூர் ஏரிகுளங்கள், ஆறுகளையெல்லாம் குத்தகை எடுத்து கப்பம் கட்டாமல் நாம் தண்ணீர் பெறமுடியாது எனும் நிலைமைக்கு ஆளாக்கக் காத்திருக்கும் பெப்சி, கோக் மூத்திரங்களின் கோவை, ஈரோடு ஏஜெண்ட்தான் புதிய பொருளாதாரக் கொள்கையைக் 'கண்டித்த' தொழிலதிபர் மகாலிங்கம். கரும்பு விளைவிப்பவன் கவுண்டரானாலும் அவனுக்கும் பட்டை நாமம் சாத்தி பகல் கொள்ளையடிப்பவர்தான் சாதிப் பற்றில்லா மகாலிங்கம்.

''தன்னுடைய கரும்பு ஆலைக்கு டெல்லியிருந்து வந்த பார்வையாளர் குழுவில் இருந்த முசுலீம் ஒருவரை கோயிலுக்குக் கூட்டிச் சென்று ''பரிவட்டம்'' கட்டிவிட்டு எல்லோரையும் அல்லாஹு அக்பர் என முழக்கமிட வைத்த மத நல்லிணக்கவாதி அருட்செல்வர்'' என பாராட்டு உரையில் சிலாகித்தார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

ஆனால் கோவையில் முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டபோது ''ஜெய் ஸ்ரீராம்'' என ஆனந்தமடைந்தவரும் அருட்செல்வர்தான் என்பதை படிமங்களின் பால்வீதிக்காரர் அறிந்திருப்பாரா?

'நமது நாடு தற்போது உள்ள சூழ்நிலையில் தேசபக்தர்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்' என ஏற்புரையில் தொடங்கிய மகாலிங்கம் அடுத்து குஜராத் பிரச்சினையைத்தான் பேசுவார் என எதிர்பார்த்தால் ''சென்னையில் நடக்கும் கொலை, கொள்ளைகளைத் தடுக்க வேண்டும், அது ஏன் நடக்கிறது என ஆராய வேண்டும்'' எனத் தொடர்ந்து, தமிழைக் காப்பாற்ற மும்மொழித் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று முடித்தார்.

www.padippakam.com

''எனக்கு கூச்சமாக, தயக்கமாக இருக்கிறது, அருட்செல்வரைப் பாராட்ட எனக்கு வயதுமில்லை, தகுதியுமில்லை. சிவப்புத் துண்டைப் போட்டுக் கொண்டு அருட்செல்வர் மகாலிங்கத்தைப் பாராட்டிப் பேசுவதால், இந்த விருதை வழங்கியதால் எங்கே புரட்சியின் கற்பு கெட்டு விட்டதோ என தூரத்திலிருப்பவர்கள் நினைக்கக் கூடும், தயவு செய்து அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்'' என பேசினார், 'வாழும் ஜீவா' தா. பாண்டியன்.

**சிவப்புத்துண்டு போட்டவர்களெல்லாம் கம்யூனிஸ்டுகள் என்று நம்புவதாக இருந்தால் பங்காரு அடிகள்தான் தமிழகத்தின் மிகப் பெரிய கம்யூனிஸ்டு தலைவர் என்றும் நம்ப வேண்டியிருக்கும்.**

தா. பாண்டியனின் கற்பைப் பற்றியோ போலி கம்யூனிஸ்டுகள் நடத்தவிருக்கும் 'புரட்சி' பற்றியோ யாருக்கும் எந்தப் பிரமையும் இல்லை. சிவப்புத்துண்டு போட்டவர்களெல்லாம் கம்யூனிஸ்டுகள் என்று நம்புவதாக இருந்தால் பங்காரு அடிகள்தான் தமிழகத்தின் மிகப்பெரிய கம்யூனிஸ்டு தலைவர் என்றும் நம்ப வேண்டியிருக்கும்.

இருந்தாலும் வலது கம்யூனிஸ்டு கட்சியின் தொண்டர்கள் சிலர் அவ்வாறு நம்பிக் கொண்டிருக்கிறார்களே, அதுதான் வேதனை!

***

மே 24-ம் தேதியன்று தா. பாண்டியன் அவர்கள் பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு விருது கொடுத்து விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்த அதேநேரத்தில், மகாலிங்கத்தின் அபிமான மொழியான சமஸ்கிருதத்தை எதிர்த்துப் போராடிய பாண்டிச்சேரி வ.கம்யூனிஸ்டு கட்சித் தொண்டர்கள் 20 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

''சமஸ்கிருத மொழி கற்றுத் தருவதை நாங்கள் எதிர்க்கவில்லை; சமஸ்கிருதம் என்ற பெயரால் ஆர்.எஸ்.எஸ். மதவெறிப் பயிற்சி அளிப்பதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்'' என்று போராட்டத்திற்குப் பின் அறிக்கை விட்டிருக்கிறார் வ.கம்யூனிஸ்டு கட்சியின் புதுவை மாநிலச் செயலர்.

சமஸ்கிருதம் என்பது தமிழ் உள்ளிட்ட மக்கள் மொழிகளை இழிவுபடுத்துகின்ற பார்ப்பன மதத்தின் கருவி. சூத்திரரும் பஞ்சமரும் படிக்கக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருந்த அம்மொழியை, மக்கள் வழக்கிலேயே இல்லாமல் செத்து ஒழிந்த அந்த மொழியை அலங்கரித்து சமஸ்கிருத ஆண்டையும் அறிவித்துள்ளது பா.ஜ.க. அரசு. இது இந்துத்துவத் திட்டத்தின் ஓர் அங்கம் என்பது அரசியலறிவற்ற மரமண்டைகளுக்கும் புரியக் கூடிய விசயம்.

சமஸ்கிருதத்தைப் பரப்புவதற்காக உருவாக்கப்பட்ட சமஸ்கிருத பாரதி இருபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் ஆர்.எஸ்.எஸ்.-ஸின் பினாமி அமைப்பு. ''30 நாளில் ஆங்கிலம்'' என்பதைப் போல சமஸ்கிருதத்தைப் பேச்சு மொழியாகப் பயிற்றுவிக்கும் வகுப்புதான் பாண்டிச்சேரியில் நடத்தப்பட்டது.

டெல்லி அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு கல்வித்திட்டம், கல்வி நிறுவனங்கள் ஆகிய அனைத்தையும் அதிகாரபூர்வமாகவே ஆர்.எஸ்.எஸ்.ஸிடம் ஒப்படைக்கின்ற காவிமயமாக்கும் திட்டத்தின் ஒரு அங்கம் தான் மேற்படி பயிற்சி வகுப்பு. பாண்டிச்சேரி அரசுக் கல்லூரியில் இவ்வகுப்பை நடத்த அம்மாநில காங்கிரசு அரசும் அனுமதி அளித்துள்ளது.

''மே 16 முதல் 25 வரை அரசுக் கல்லூரியில் இலவசமாக சமஸ்கிருதம் கற்றுத் தரப்படும்'' என்று பத்திரிகைகளில் விளம்பரம் வெளியானவுடனேயே இதைத் தடுத்து நிறுத்த சட்டபூர்வமாக முயற்சி செய்து முடியாமல் போகவேதான், இப்போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர் வலது கம்யூனிஸ்டு கட்சித் தொண்டர்கள்.

''நாங்கள் சமஸ்கிருதத்தை எதிர்க்கவில்லை, மதவெறியைத்தான் எதிர்க்கிறோம்'' என்று பல்டியடித்ததன் மூலம் இந்தப் போராட்டத்தையே கொச்சைப்படுத்தியிருக்கிறது கட்சித் தலைமை.

தமிழுக்கு மூலமொழியே சமஸ்கிருதம் என்றும், அதனை தேவபாசையென்றும் கொண்டாடிவரும் மகாலிங்கத்துக்குத் 'தமிழ்ச் செம்மல்' விருது கொடுத்ததன் மூலம், போராடிய பாண்டிச்சேரி தோழர்களையும் கேவலப்படுத்தி விட்டது, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்.

கம்யூனிசக் கொள்கைக்காக சக தோழர்கள் செய்த தியாகத்தையெல்லாம் மகாலிங்கத்தின் காலடியில் சமர்ப்பித்து விட்டு ''புரட்சியின் கற்பு ஒன்றும் கெட்டு விடாது'' என்று தெனாவெட்டாகப் பேசுகிறார் பாண்டியன். இந்த சிவப்பு விளக்குக் கட்சியில் கற்புள்ள தொண்டர்களுக்கு என்ன வேலை?

**செய்தி: மலர் மன்னன், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, கோவை**

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

தேசத்தை நிர்வகிப்பவர் அவர் அல்ல. தேச முழுமையின் பிரதிநிதியும் அவர்தான்; ஆனால் அதனை ஆளுபவர் அவர் அல்ல'' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் சுகபோகங்களை அனுபவிக்கும் அரசுத் தலைவருக்கு, நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களில் கையெழுத்திட மட்டுமே அதிகாரம் உண்டு. அதிகபட்சம் போனால், இந்தச் சட்டங்கள் - விதிகள் ஏற்புடையதாக இல்லை என்று மறுபரிசீலனை செய்யச் சொல்லி அதை அவர் திருப்பி அனுப்பலாம். மீண்டும் அதே சட்டம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டால் அதில் அவர் கையெழுத்திட வேண்டியதுதான்! இவ்வளவுதான் அரசுத் தலைவர் என்ற அலங்கார பொம்மைக்கு உள்ள அதிகாரம். விஞ்ஞானி அப்துல் கலாமாக இருந்தாலும் வீராங்கனை லட்சுமியாக



'இடதுசாரி'களின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள லட்சுமி செகல்.

இருந்தாலும் இதற்கு மேல் ஒன்றும் செய்து விட முடியாது.

அப்படி ஏதாவது அதிகாரம் இருந்திருக்குமானால், குஜராத்தில் இந்துவெறி பாசிச பயங்கரம் தலை விரித்தாடியபோது அரசுத் தலைவர் நாராயணன் அதிரடி நடவடிக்கை எடுத்திருக்கலாமே! பாப்பாபட்டி - கீரிப்பட்டி பஞ்சாயத்துக்களில் தாழ்த்தப்பட்டோரின் ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் சாதிவெறியர்களின் கொட்டத்தை முறியடித்திருக்கலாமே! கோடானுகோடி மக்களை மரணக்குழியில் தள்ளி வரும் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை ரத்து செய்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை என்பதுதான் கேள்வி.

தமிழகத்தின் இடைக்கால முதல்வராக இருந்த ஓ. பன்னீர் செல்வத்துக்கு என்ன அதிகாரம் இருந்ததோ, அந்த அதிகாரம் கூட அரசுத் தலைவருக்குக் கிடையாது. ஆனாலும் அந்த தலையாட்டிப் பொம்மை பதவிக்கு ஏதோ அசாதாரண அதிகாரம் இருப்பதாகக் காட்டி நாட்டு மக்களை ஏய்த்து, அழுகி நாறும் இன்றைய அரசியலமைப்பு முறைக்கு ஓட்டுக் கட்சிகள் ஆரத்தி எடுத்துக் கொண்டிருக்கின்றன.

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

## காலச்சுவடு கருத்தரங்கம்:

# பச்சோந்தியின் நிறம் படிப்பாளிகளின் திறம்

குஜராத் வன்முறை - காலச்சுவடு கருத்தரங்கம். பேச்சாளர்கள் 7 பேர்; பார்வையாளர்கள் 70 பேர்.

கூட்டம் 70 பேர் என்பதால் அலட்சியமாக எண்ணிவிட வேண்டாம். காலச்சுவடு என்பது தமிழகத்தின் அரசியல் - இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் தரத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தியே தீருவது எனும் இமாலயப் பொறுப்பைத் தன்னந்தனியே தனது தோளில் சுமந்துவரும் பத்திரிகை. ''சந்தை பத்திரிகைகளைப் போல நுனிப்புல் மேயக் கூடாது; இடதுசாரிப் பத்திரிகைகளைப் போன்ற குறுகிய பார்வையும் கூடாது; ''பன்முகப் பார்வை, ஆழமான ஆய்வு'' - இதுதான் காலச்சுவடின் முத்திரை வாசகம் எனலாம்.

அப்பேர்ப்பட்ட பத்திரிகையானது, குஜராத் படுகொலை தொடங்கி 3 மாதம் கழித்து, இரண்டாயிரம் முசுலீம்களைப் புதைத்துப் புல் முளைத்து, மேலே போர் அபாய ஜல்லி போட்டுக் கிடித்துக் காய வைத்து, அதற்கும் மேலே ''அழகுக்கு அப்துல் கலாமை உட்கார வைக்கலாம்'' என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் யோசித்து வரும் தருணத்தில் கருத்தரங்கம் நடத்துகிறது என்றால் மிக ஆழமான ஆய்வாகத் தானே இருக்க முடியும்! எழுபதாவது மனிதனாக உட்கார்ந்திருந்த எனக்கு அந்த ஏ.சி. குளிரிலும் லேசாக வியர்த்தது.

''இது மதச்சார்பின்மையின் மீதான நேரடித் தாக்குதல்'' என்றார் முதல் பேச்சாளரான பீட்டர் அல்போன்ஸ் (த.மா.கா). ''அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பதுதான் உண்மையான மதச்சார்பின்மை கோட்பாடு என்ற போதிலும் சர்வதர்ம சமபாவ என்பதுதான் மதச்சார்பின்மை என்று நாம் வைத்துக் கொண்டோம்'' என்றார் அல்போன்ஸ். இந்தக் காந்தியப் பித்தலாட்டம்தான் இன்று மோடி வெறியாட்டமாக மாறுவதற்கான அடிப்படை என்பதை அவர் சொல்லவில்லை. ஏனென்றால் அவர் காங்கிரசுக்காரர்.

ஒரு காங்கிரசுகாரர் என்ற முறையில் அடுத்து நாட்டுப்பற்றைப் பற்றி அவர் பேசத் தொடங்கினார். ''அமெரிக்காவுடன் கூட்டு இராணுவப் பயிற்சி நடத்துவதன் மூலம் நமது இராணுவ இரகசியங்களை அமெரிக்காவுக்குத் தாரை வார்க்கிறோம்'' என்று பாரதீய ஜனதா அரசை அம்பலப்படுத்தினார்.

ஆனால் இதைக் காங்கிரசு கட்சியினர் பாராளுமன்றத்தில் கூட எதிர்க்கவில்லை என்ற இரகசியத்தை வெளியிடாமல் பத்திரப்படுத்தினார். ஒரு காங்கிரசுக்காரனாக இருந்தும் அமெரிக்காவை எதிர்த்துப் பேச வேண்டிய துரதிருஷ்டமான சூழ்நிலைக்குத் தான் தள்ளப்பட்டதற்கான காரணத்தையும் அவர் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது.

''இதே அமெரிக்காதான் பாகிஸ்தான் இராணுவத்துக்கும் பயிற்சியளிக்கப் போகிறது. இது எவ்வளவு பெரிய அபாயம்!'' என்று கூறி ''பாகிஸ்தான் எதிர்ப்பு ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி'' நாங்கள்தான் என்பதை நிலைநிறுத்தினார்.

பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டுமானால் உள்நாட்டில் இந்து - முசுலீம் ஒற்றுமை வேண்டாமா, அதற்காகவாவது குஜராத்தில் அமைதி நிலவ வேண்டாமா என்று இறுதியாக பீட்டர் அல்போன்ஸ் எழுப்பிய கேள்வி அத்வானியின் காதில் மட்டும் விழுந்திருந்தால் பதில் சொல்ல முடியாமல் ஆடிப் போயிருப்பார். வெளிநாட்டு முசுலீம்களைக் கொல்ல வேண்டுமானால் உள்நாட்டு முசுலீம்களை அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும் என்ற காங்கிரசின் மதச்சார்பின்மைத் தத்துவத்தை இதைவிடப் பச்சையாக உடைத்துச் சொல்ல முடியுமா என்ன?


கனிமொழி

**குஜராத் முசுலீம்கள் படுகொலை என்று யாராவது சொன்னால் ''பிணத்துக்கு மதமேது?'' என்று கேட்கிறார் மோடி. காலச்சுவடு/கனிமொழியின் அகராதியின்படி இதுதான் உண்மையான மனிதாபிமானம்.**

அடுத்த வந்த நடிகர் சாருஹாசன் ஒரு அதிர்ச்சியூட்டும் கேள்வியை எழுப்பினார். சென்னையில் 1.5 லட்சம் குஜராத்தி வர்த்தக சமூகத்தினர் உள்ளனர். இந்தக் கூட்டத்திற்கு எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் - கை உயர்த்த முடியுமா?'' என்றார். அரங்கில் மவுனம். பின்னர் மெதுவாக ஒருவர் மட்டும் கையை உயர்த்தினார்.

ஒருவேளை ''குஜராத் முசுலீம் படுகொலை - இந்து மதவெறி எதிர்ப்புக் கருத்தரங்கம்'' என்று காலச்சுவடுக்காரர்கள் இந்தக் கூட்டத்திற்குப் பெயரிட்டிருந்தால் குஜராத்தி (இந்து) வர்த்தகர்கள் வந்திருப்பார்கள். குறைந்தபட்சம் தங்கள் அடியாட்களையாவது கையில் உருட்டுக் கட்டையுடன் அனுப்பி வைத்திருப்பார்கள்.

அடுத்துப் பேச வந்த பத்திரிகையாளர் டி.என். கோபாலன் நாட்டின் நிலைமையை எண்ணிப் பெரிதும் வருத்தப்பட்டார். குஜராத்துக்கு முன்னோடியாக டெல்லி சீக்கியர் படுகொலையை நடத்தியது காங்கிரசுதான் என்ற உண்மையை நினைவுபடுத்திவிட்டு, இந்த மேடையில் அதைப் பேச நேர்ந்ததற்காக பீட்டர் அல்போன்சிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

முசுலீம் மக்கள் எந்த அளவுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதற்குச் சில சான்றுகளைக் கூறி ''நடுத்தர வர்க்கமாகிய நாம் இதைத் தடுப்பதற்கு எதுவும் செய்ய இயலாதவர்களாக இருக்கிறோம்'' என்று கூறி மேலும் வருத்தப்பட்டார்.

குஜராத்தின் இந்து நடுத்தரவர்க்கம் கையில் தீவட்டியுடன் அலையும்போது மதச்சார்பற்ற நடுத்தரவர்க்கம் மட்டும் ஏ.சி. அரங்கில் அமர்ந்து கண்ணீர் வடிப்பதைப் பார்த்து நமக்கும் வருத்தமாகத்தானிருந்தது.

சோகத்தின் உருவமாகவே பேசத் தொடங்கினார் கனிமொழி. காலச்சுவடு



படிப்பகம்

www.padippakam.com




**காலச்சுவடுவின் மனச்சாட்சிக்கு அவர்கள் அளித்துக் கொண்ட பதிலில் ஒன்று இந்தக் கருத்தரங்கம் என்றால், மனச்சாட்சி கேட்ட கேள்வி என்னவாக இருக்கும்?**

**''கணக்கு காட்டு... கணக்கு காட்டு'' என்று நச்சரித்திருக்குமோ?**

சார்பாக குஜராத் நிவாரண நிதி திரட்டப் போனபோது ''முசுலீம்களுக்காக மட்டும் ஏன் வசூல் செய்கிறீர்கள்?'' என்று சிலர் கேட்டார்களாம். ''நாங்கள் முசுலீம்களுக்காகவோ இந்துக்களுக்காகவோ வசூல் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும்தான் வசூல் செய்கிறோம்.'' என்று பதிலளித்தாராம் கனிமொழி.

காலச்சுவடுவின் நடுநிலையை நிரூபிக்க கனிமொழி இவ்வளவு சிரமப்பட்டிருக்கத் தேவையில்லை. மேற்படி நிவாரண நிதி விளம்பரம் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரப்பூர்வ மற்ற பத்திரிகைகளான இந்தியா டுடே, தினமணி, எக்ஸ்பிரஸ் ஆகியவற்றில் வெளிவந்திருப்பதை எடுத்துக் காட்டியிருந்தால், சவுகார் பேட்டை சேட்டுகளே மறுபேச்சில்லாமல் வாரி வழங்கியிருப்பார்கள்.

குஜராத் முசுலீம்கள் படுகொலை என்று யாராவது சொன்னால் ''பிணத்துக்கு மதமேது?'' என்று கேட்கிறார் மோடி. காலச்சுவடு / கனிமொழியின் அகராதியின் படி இதுதான் உண்மையான மனிதாபிமானம்.

மனிதாபிமானி பேசி முடித்தவுடன் மேடையேறியவர் 'தத்துவ ஞானி' ரவிக்குமார். குஜராத் படுகொலை குறித்த சில புள்ளி விவரங்களைப் பார்வையாளர்கள் மீது தெளித்துவிட்டு, இது ஏற்கனவே எனக்குத் தெரிந்ததுதான் என்ற தோரணையில் பேசத் தொடங்கினார்.

தற்போது நடைமுறையில் உள்ள வாக்குரிமையில் (ஒரு மனிதன் - ஒரு ஓட்டு) இந்துப் பெரும்பான்மையின் ஆதிக்கம்தான் இருக்குமென்றும், சிறுபான்மை மக்களுக்கும் தலித்துகளுக்கும் கூடுதல் வாக்குரிமை அளிக்கின்ற வகையில் இதனை மாற்றியமைப்பதுதான் இதற்குத் தீர்வு என்று 1945-இலேயே அம்பேத்கர் கூறியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே கிடைத்த அதிகாரத்தை பார்ப்பன மதவெறியர்களுடன் பங்கு போட்டுக் கொண்ட மாயாவதியைப் பற்றியும், பஸ்வானைப் பற்றியும் 'தலித்' பத்திரிகை ஆசிரியர் பேசியிருந்தால் யோக்கியமாக இருந்திருக்கும். ஏற்கனவே பாப்பாபட்டி, கீரிப்பட்டி விவகாரம் பற்றி அவரது கட்சியின் தலைவர் திருமாவளவன் வாஜ்பாயியிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார். ரவிக்குமாரின் இந்தப் புதிய யோசனையை மோடியிடம்தான் தெரிவிக்க வேண்டும்.

இந்தச் செயல்பூர்வமான யோசனையைத் தொடர்ந்து ''பெரியாரும் முசுலீம்களைத் திட்டியிருக்கிறார்'' என்பதை நிரூபிக்குமுகமாக ஒரு மேற்கோளை அவிழ்த்து விட்டார். முன்னர் பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து இசுலாமை விமரிசித்து அம்பேத்கர் எழுதியவற்றை ஒரு முழுப்பக்கத்திற்கு வெளியிட்டிருந்தது இந்தியன் எக்ஸ்பிரஸ். தற்போது குஜராத் படுகொலையில் ரவிக்குமாரின் நடுநிலை நோக்கிற்கும் பன்முகப் பார்வைக்கும் அரைப்பக்கம், கால்பக்கமாவது கிடைக்காமலா போய்விடும்?

''ஒரு சூழல் வந்துவிட்டது; கொல்லுகிறவனாகவோ கொல்லப்படுகிறவனாகவோ இருக்கிறோம். இதுதான் நிலைமை'' என்ற திகிலூட்டும் பிரகடனத்துடன் தனது பேச்சை முடித்தார் ரவிக்குமார். அரங்கிலிருந்தவர்கள் ''பக்கத்து இருக்கையிலிருப்பவர் கொல்பவராக இருக்கக் கூடுமோ!'' என்ற ஐயத்துடன் ஒரு பார்வை பார்த்துக் கொண்டனர்.

இறுதியாகப் பேசிய துணை வேந்தர் வசந்திதேவி, குஜராத்தில் சட்டப்பிரிவு - 355-ஐப் பயன்படுத்துவதென்று டெல்லி மாநிலங்களவை தீர்மானித்ததைப் பாராட்டினார். அது பா.ஜ.க.வும் சேர்ந்து எடுத்த முடிவு என்பதால் பாராட்டில் பாதியை அத்வானி கணக்கில் நாம் சேர்த்து விடலாம்.

''நாஜிகள் 30,000 ஆண்டுகள் தள்ளிச் சிந்திக்கிறார்கள். நாம் 30 நாட்களுக்காவது திட்டமிட வேண்டும்'' என்று கூறிச் சொன்ன வேகத்தில் புறப்பட்டார் வசந்தி தேவி. பேசி முடித்த 30 நிமிடத்தில் வீட்டில் இருக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்த மற்ற பேச்சாளர்களோ ஏற்கனவே புறப்பட்டுப் போய்விட்டனர். வசந்திதேவியின் வேண்டுகோளைக் காலி நாற்காலிகளின் பரிசீலனைக்கு விட்டுவிட்டுப் பார்வையாளர்களும் புறப்பட்டனர்.

இனி, கருத்தரங்கில் பேசப்படாத விசயங்கள்: பார்ப்பன இந்துமத வெறிப் பாசிசம் அல்லது இந்துமத வெறிப் பாசிசம் போன்ற சொற்றொடர்களைத் தவறிக் கூட எந்தப் பேச்சாளரும் பயன்படுத்தவில்லை. அடிப்படைவாதம், வகுப்புவாதம், மனிதாபிமானம் போன்ற மோசடியான சொற்களையே பல பேச்சாளர்கள் பயன்படுத்தினர்.

வாஜ்பாய் அரசுக்குக் காவல் அரணாக நின்ற கருணாநிதியின் பெயரைக் கூட யாரும் உச்சரிக்கவில்லை. கனிமொழியம்மாவுக்கு அவ்வளவு மரியாதை! 'கருத்துச் சுதந்திரத்தில்' பெரிதும் நம்பிக்கை கொண்ட காலச்சுவடு, பேச்சாளர்களுக்கு எதுவும் கட்டுப்பாடு விதித்திருக்காது. எனினும் பேச்சாளர்களின் சுதந்திரச் சிந்தனை தன் இயல்பிலேயே அவ்வளவு தந்திரமானதாக இருக்கிறது என்று கொள்ளலாம்.

''மதவாத பாசிச சக்திகளுக்கு எதிரான இடையறாத கடும் போராட்டமே நம்முடைய மனச்சாட்சிக்கு நாம் அளிக்கும் பதிலாக இருக்க முடியும்'' என்கிறது காலச்சுவடு சிறப்பிதழின் தலையங்கம். தமது மனச்சாட்சிக்கு அவர்கள் அளித்துக் கொண்ட பதிலில் ஒன்று இந்தக் கருத்தரங்கம் என்றால், மனச்சாட்சி கேட்ட கேள்வி என்னவாக இருக்கும்?

''கணக்கு காட்டு... கணக்கு காட்டு'' என்று நச்சரித்திருக்குமோ?

● தொரட்டி

www.padippakam.com

# ''ஷேர் ஆட்டோ — கால் டாக்சியைத் தடை செய்! டீசல், பெட்ரோல் விலை உயர்வை ரத்து செய்! — ஆட்டோ ஓட்டுநர்கள் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தின் பெருநகரங்களில் அதிகரித்து வரும் ''ஷேர் ஆட்டோ''க்களால், வாடகை ஆட்டோ ஓட்டும் தொழிலே அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக திருச்சி நகரில் ஆட்டோ ஓட்டும் தொழிலை நம்பியுள்ள கணிசமான தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் ஷேர் ஆட்டோக்களின் பெருக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வருமானம் குறைந்து, கடன் அதிகரித்து விரக்தியின் விளிம்பில் நிற்கும் பல ஆட்டோ ஓட்டுநர் குடும்பங்கள் ஒன்று ஊரை விட்டே ஓடவேண்டும்; அல்லது குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற இறுதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஷேர் ஆட்டோவில் 5+1 பேருக்கு மேல் ஏற்றக்கூடாது; ஆனால் 10, 15 பேரை ஏற்றுகின்றனர். ஒரு கி.மீக்கு ஒரு ரூபாய் வீதம்தான் கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால், பேருந்துகளைப் போல ரூ. 2 முதல் 5 ரூபாய் வரை வசூலிக்கின்றனர். திருச்சி நகரில் அரசு அனுமதித்ததோ 50 ஷேர் ஆட்டோக்கள். ஆனால், அனுமதியை மீறி 65 ஷேர் ஆட்டோக்கள் திருச்சியில் இயங்குகின்றன. இதை எந்த ஆர்.டி.ஓ.வும் சாலை போக்குவரத்து அதிகாரிகளும் கண்டு கொள்வதேயில்லை. ஏனெனில் உரிய முறையில் இவர்களுக்குக் 'கப்பம்' கட்டப்பட்டு விடுகிறது.



ஷேர் ஆட்டோக்கள் 30 கி.மீ. தொலைவிலுள்ள சுற்றுப்புற கிராமங்களுக்குச் செல்ல அனுமதி தரப்பட்டுள்ளதால், இது பொது மக்களின் நன்மைக்கானது என்கின்றனர். திருச்சியைச் சுற்றியுள்ள பல கிராமப்புற பகுதிகளுக்கு முறையான பேருந்து போக்குவரத்தே கிடையாது. ஆயிரக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்கள் லாரிகளில் தொற்றிக் கொண்டு கிராமங்களிலிருந்து திருச்சிக்கு தினமும் வந்து செல்கின்றனர். இருப்பினும் இக்கிராமங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள் போவதே இல்லை. திருச்சி நகருக்குள்ளேதான் சுற்றி வருகின்றன. வாடகை ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வைப் பறிக்கின்றன.

திருச்சி நகரில் ஏறத்தாழ 7000 ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளனர். ஒருவரது வீட்டில் சராசரியாக 5 பேர் என்றால், ஏறத்தாழ 35,000 பேர் ஷேர் ஆட்டோவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் ஷேர் ஆட்டோக்கள், விரல் விட்டு எண்ணக்கூடிய முதலாளிகள், கந்து வட்டிக்காரர்கள்,

## வாசகர் கடிதம்

* ''தனித் தமிழீழம்தான் ஒரே தீர்வு; அது ஒன்றுதான் ஈழத் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டும்; அப்போதுதான் ஈழத் தமிழினச் சமுதாயம் நிரந்தர அமைதி காண முடியும்'' என்று முழங்கி வந்த புலிகள், இப்போது சமாதானம் - இடைக்காலத் தீர்வு என்று ஈழத்தை வல்லரசுகளிடம் அடகு வைக்கக் கிளம்பி விட்டதை ''ஈழம் மறு காலனியாகிறது'' என்ற கட்டுரை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது. ''புலிகளின் இன விடுதலைத் துரோகம்'' என்ற தலைப்பில் வாசகர் வட்டக் கூட்டத்தில் நடத்தப்பட்ட சிறப்புரையானது வாசகர்களுக்கும் புதிய பார்வையைக் கொடுத்தது. உ.பி.யில் மாயாவதி தலைமையிலான ஆட்சியானது தலித்தியத்தின் வெற்றியல்ல; மாறாக, பிழைப்புவாதத்தின் வெற்றிதான் என்பதை அம்பலப்படுத்திக் காட்டிய கட்டுரையானது, தலித்திய பிழைப்புவாதிகளைத் தோலுரித்துக் காட்டப் பெரிதும் உதவியாக இருந்தது. ''போராட்டத்தில் ஊழியர்கள்; உல்லாசத்தில் தலைவர்கள்'' என்ற தலைப்பில் சி.பி.எம். தலைவர்களின் யோக்கியதையை சந்தி சிரிக்க வைத்த செய்திக் கட்டுரையும் கேலிச் சித்திரமும் சிறப்பு. வழக்கம் போலவே இவ்விதழின் 'இன்றைய இந்தியா' அநீதிக்கு எதிராகப் போராட அறைகூவல் விடுத்து உணர்வூட்டியது.

— வாசகர் வட்டம், திருச்சி.




* புதிய ஜனநாயகம் இதழில் எழுத்துக்கள் மிகவும் சிறியதாக உள்ளன. புதிய வாசகர்கள் படிக்கச் சிரமப்படுகிறார்கள். விசயங்கள் வீரியமானவையாக இருப்பினும், இதழின் வெற்றியானது மக்களைச் சென்றடைவதில் இருக்கிறது. ஆகவே பரிசீலியுங்கள்.

— சாக்ரடீஸ், மதுரை.

*(வாசகத் தோழரின் கருத்தைப் பரிசீலித்து ஆவன செய்கிறோம். - ஆ.குழு.)*

* பா.ஜ.க.வின் பாசிசத் திணிப்பு; பக்க மேளமாக எதிர்த் தரப்பு என்ற கட்டுரையானது வாஜ்பாயி, பெர்னாண்டஸ், ஜெயலலிதா, கருணாநிதி, போலி கம்யூனிஸ்டுகள் ஆகியோரது வாக்கு மூலங்களிலிருந்தே பாசிசவாதிகளையும், அவர்களது பங்காளிகளையும் எடுப்பாகச் சித்தரித்துக் காட்டியது. உ.பி.யில் மாயாவதி ஆட்சி என்ற கட்டுரையானது தக்க தருணத்தில் வெளிவந்து தலித்திய பிழைப்புவாதிகளின் முகத்தில் அறைந்தது. அமெரிக்காவிடம் மண்டியிடாத வெனிசுலா அதிபர் பற்றிய செய்தியானது புதிய நம்பிக்கையை அளித்தது. அரசியல் அம்பலப்படுத்தல்களையும் புதிய தகவல்களையும் தரும் பு.ஜ.வுக்கு நன்றி சொல்ல நினைத்தேன். அது சரியல்ல; புரட்சிகர அரசியல் பத்திரிக்கையின் கடமை அதுதானே!

— தர்மராஜ், திருச்சி.


படிப்பகம்

கட்டைப் பஞ்சாயத்து பேர்வழிகள் மற்றும் இவர்களின் கூட்டாளிகளான அதிகாரிகளால், அவர்களின் கொள்ளை லாபத்துக்காகவே இயக்கப்படுகிறது. மேலும், ஷேர் ஆட்டோக்கள் வரைமுறையின்றி பயணிகளை ஏற்றுவதால் விபத்துகளும் பெருகி வருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஷேர் ஆட்டோக்களால் அரசுப் பேருந்துகளில் வருவாய் குறைந்து, குறிப்பிட்ட சில வழித்தடங்களில் பேருந்து சேவை நிறுத்தப்பட்டு வருகிறது. இதர இலாபகரமான வழித்தடங்களையும் கால் டாக்சி, ஷேர் ஆட்டோ, மினி பஸ் என்று தனியார் முதலாளிகளின் பகற்கொள்ளைக்குத் திறந்து விட தமிழக அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. தமிழக அரசின் பொறுப்பிலுள்ள போக்குவரத்துத் துறையை நட்டக்கணக்கு காட்டி தனியார்மயமாக்கும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. சுருக்கமாகச் சொன்னால் தனியார்மயம் - தனியார்மயம் என்று நாட்டையும் மக்களையும் அடிமையாக்கும் சதித்திட்டத்தின் உருவமாகவே ஷேர் ஆட்டோ, கால் டாக்சி, மினிபஸ், சொகுசுப் பேருந்து, ஆம்னி பஸ் ஆகியன வந்துள்ளன. இத்தனியார்மயத் தாக்குதலை மக்கள் தலையில் சுமத்தி, டீசல் - பெட்ரோல் கட்டணங்கள் அவ்வப்போது தாறுமாறாக உயர்த்தப்படுகின்றன.

இத்தாக்குதல்களை முறியடிக்காமல் வாடகை ஆட்டோ தொழிலைப் பாதுகாக்க முடியாது என்பதால் திருச்சி ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கத்தினர், ''ஷேர் ஆட்டோ, கால் டாக்சிகளைத் தடை செய்! அனைத்து வழித் தடங்களிலும் அரசுப் பேருந்துகளை இயக்கு! டீசல் - பெட்ரோல் விலை உயர்வினை உடனே ரத்து செய்! ஆகிய மைய முழக்கங்களுடன் கடந்த ஜூன் 8-ஆம் தேதியன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். திருச்சி - சிந்தாமணி அண்ணாசிலை அருகில், சங்கத் தலைவர் வே. செல்வராஜ் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட ஆட்டோக்களுடன் ஏறத்தாழ 300 ஆட்டோ ஓட்டுநர்கள் பங்கேற்றனர்.

சங்கத்தின் நிர்வாகிகளும், தோழமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தை ஆதரித்து சிறப்புரையாற்றினர். புரட்சிகரப் பாடல்களைப் பாடிய ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர், போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சினர்.

தகவல்:
ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம்,
திருச்சி.

# சட்டம் படித்தவர்களுக்கே இந்த கதி என்றால் சாமானியரின் கதி என்ன?

கடந்த ஜூன் ஏழாம் தேதி கோவை குண்டு வெடிப்பு சம்பவத்தை விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக வாதாடுவதற்காக இரு வழக்கறிஞர்களுடன் வந்தார், உயர்நீதி மன்ற வழக்கறிஞர் ஜியாவுதீன். நீதிமன்றம் அருகேயிருந்த சோதனை சாவடியில் பணியிலிருந்த ஜெயராமன் என்ற போலீசுக்காரர் ஜியாவுதீன் மற்றும் வழக்கறிஞர்கள் ஏறிவந்த ஆட்டோவைத் தடுத்து நிறுத்தி விசாரித்துள்ளார். அவர்கள் தாங்கள் வந்த காரணத்தைக் கூறி தமது அடையாள அட்டையைக் காட்டியுள்ளனர். அதைப் பார்த்துக் கொண்டே ''உங்கள் பேர் என்ன?'' என்று மீண்டும் ஜெயராமன் கேட்டதற்கு ''அதுதான் அடையாள அட்டையிலிருக்கிறதே'' என்று கூறினார் ஜியாவுதீனுடன் வந்த வழக்கறிஞர். உடனே ஜெயராமன், ''நான் கேள்வி கேட்டால் நீ பதில் சொல்லனும்! இவர் கிட்டே கேள்விகேட்டால் நீ ஏன் பேசுற?'' என்று திமிராக பேசியதோடு அவர்களைத் தாக்கவும் முனைந்தார். இதில் வழக்கறிஞர் ஜியாவுதீன் மணிக்கட்டில் குத்து விழுந்தது. செய்தியறிந்து வழக்கறிஞர்களும், போலீசு அதிகாரிகளும் அங்கே கூடி விட்டனர். ஜெயராமனுக்கு ஆதரவாக பேசியதோடு அவருக்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்ட போலீசு அதிகாரிகள், வழக்கறிஞர்களோடு பின்னர் சமரசம் பேசினர். கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்ட வழக்கறிஞர் ஜியாவுதீன், ஜெயராமன் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்.

சென்ற மே மாதம் 25-ஆம் தேதி வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் கோவையிலிருந்து இரு சக்கர வாகனத்தில் துடியலூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அங்கே போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியிலிருந்தவர் வடவள்ளி போலீசு நிலையத்தில் பணிபுரியும் மோகன்தாசு. அவர் வழக்கறிஞரைத் தடுத்து நிறுத்தி, இந்தப் பாதை வழியாக கவர்னர் செல்லவிருப்பதால் நின்று செல்லும்படி கூறியுள்ளார். உடனே பாலகிருஷ்ணன் தான் கோவையிலிருந்து புறப்படும்போதே, தன்னைத் தாண்டி கவர்னர் சென்று விட்டதாக விளக்கமளித்துள்ளார். அதைக் காதில் வாங்கிக் கொள்ளாத மோகன்ராசு, ''நான் சொல்றேன் நில்லுடா!'' என்று மரியாதைக் குறைவாக பேசியுள்ளார். தான் ஒரு வழக்கறிஞர் என்றும் எனவே மரியாதையாக பேசும்படியும் பாலகிருஷ்ணன் கூறியதைக் கேட்டு, 'நீ எவனாயிருந்தா எனக்கென்னடா' என்று மிரட்டியுள்ளார். அவரோடு வடவள்ளி போலீசு ஆய்வாளர் பசீர் அகமது, தொண்டாமுத்தூர் போலீசு உதவி ஆய்வாளர் குமரேசன் இருவரும் சேர்ந்து கொண்டு பாலகிருஷ்ணனைச் சட்டையைப் பிடித்துத் தள்ளியபடி வாகனத்தில் ஏற்றி துடியலூர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர். அங்கே ''வாடா! போடா!'' என்று இழிவாகவும் பேசி அவமதித்துள்ளனர். கடைசியில் தன் சக வழக்கறிஞர்களின் உதவியோடு வெளியில் வந்துள்ளார் பாலகிருஷ்ணன்.

கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களுக்குப் பிறகு அந்நகரையே தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது போலீசு. கோவை நகர் தடை சட்டம், 144 தடையுத்தரவு என்று சட்டங்கள் போட்டு எந்த நேரமும் மக்களைப் பய பீதியில் அச்சுறுத்தி வருகிறது. சுவரொட்டி ஒட்டுவது, பொதுக்கூட்டம் போடுவது போன்ற எழுத்துரிமை, பேச்சுரிமை முதலான ஜனநாயக உரிமைகளைக் கூட தராமல் கடும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. தான் வைத்ததுதான் சட்டமென்ற போலீசின் அதிகாரத் திமிருக்கு, சட்டம் பயின்ற வழக்கறிஞர்களே தப்பிக்க முடியவில்லையென்றால், சாதாரண உழைக்கும் மக்களின் நிலைமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

- பு.ஜ. செய்தியாளர்கள், கோவை.

**போலீசு ரௌடித்தனத்தை எதிர்த்து கோவை சிறப்பு நீதிமன்ற வாயிலருகே வழக்கறிஞர்களின் கண்டன ஆர்ப்பாட்டம்.**



## அறிவிப்பு

''முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.'' தொடர் கட்டுரை இந்த இதழில் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— *ஆசிரியர் குழு*

www.padippakam.com



## ஜப்பான்: வளம் கொழிக்கவில்லை வறுமை தாண்டவமாடுகிறது

உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார வல்லரசாகச் சித்தரிக்கப்படும் ஜப்பான். மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய உலகிற்கே உரித்தான தீராத நோய்களான மிகை உற்பத்தி, ஊக வணிகம், பணவீக்கம், தேக்க நிலை, வேலையின்மை முதலான வற்றால் சிக்கித் தடுமாறிக் கொண்டிருந்த ஜப்பான், உலகமயமாக்கலைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக பொருளாதாரப் புதைச்சேற்றில் விழுந்து தடுமாறிக் கொண்டிருக்கிறது.




வேலையிழந்த ஜப்பானியத் தொழிலாளர்கள் ஆலை மூடலுக்கு எதிராக நடத்தும் ஆர்ப்பாட்டம்.

இன்று ஜப்பானில் கணக்கற்ற தொழில் நிறுவனங்கள், வங்கியில் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் திவாலாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டில் மட்டும் 19000 நிறுவனங்கள் திவாலாகி மூடப்பட்டு விட்டன. இவையனைத்தும் சிறிய - நடுத்தரத் தொழில் நிறுவனங்களாகும். இவை, மிகப்பெரிய ஏகபோக தொழில் நிறுவனங்களுக்கு உதிரிப் பாகங்களைத் தயாரித்து வந்த நிறுவனங்களாகும். உலகமயமாக்க நெருக்கடியால், தமது இலாப விகிதம் வீழ்ச்சியடைந்து விட்டதைக் காரணம் காட்டி, ஏகபோகத் தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்தியை முடக்கியதும், சிறிய - நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சரிந்து வீழ்ந்துவிட்டன. இதன் விளைவாக, கடந்த ஐந்தாண்டுகளில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

மிகப்பெரிய ஏகபோக தொழில் நிறுவனங்களிலும் வேலைக்கு உத்தரவாதமில்லை. எந்நேரமும் எந்த நிறுவனமும் ஆட்குறைப்பையும் ஆலை மூடலையும் அறிவிக்கலாம் என்ற அபாயமே நிலவுகிறது. கடந்த ஆண்டில் மிகப் பிரபலமான பிஜிட்சு, ஹிடாச்சி, தோஷிபா முதலான ஏகபோக நிறுவனங்கள் 15,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்துள்ளன. வாழ்விழந்த பல மூத்த தொழிலாளர்கள் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்வதும் அதிகரித்து வருகிறது. 2000-மாவது ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 3000 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இதுவரை கண்டிராத அளவுக்கு - ஏறத்தாழ 5.6%-க்கும் அதிகமாக வேலையின்மை தலைவிரித்தாடுவதாக ஏகாதிபத்தியவாதிகளே ஒப்புக் கொள்கின்றனர்.

வங்கிகள் முட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பதாலேயே ஜப்பானில் பல ஏகபோகத் தொழில் நிறுவனங்கள் திவாலாகாமல் நிற்கின்றன. ஆனால் இதற்கு மேலும் முட்டுக் கொடுக்க முடியாமல் வங்கிகள் பாதாளச் சரிவின் விளிம்பில் நிற்கின்றன. எந்த வங்கி எப்போது திவாலாகுமோ என்ற அச்சமே நாட்டைக் கவ்வியுள்ளது. வங்கிகளில் சாதாரண சேமிப்புகளுக்கு வட்டி கிடையாது. நீண்ட கால வைப்புத் தொகைகளை முதிர்வடைந்ததும் எடுக்கவும் முடியாது. அதற்குப் பதிலாக அர்ஜெண்டினா பாணியில் அரசாங்கக் கடன் பத்திரங்களே தரப்படுகின்றன. இந்த உத்தரவாதமற்ற நிலையைக் கண்டு பீதியடைந்த ஜப்பானிய மக்கள், தமது சேமிப்புகளை வங்கியில் போடாமல், தங்கமாக மாற்றி வைத்துக் கொள்கிறார்கள்.

''ஜப்பானைப் பார்! அந்நாட்டு மக்கள் சுறுசுறுப்பாகவும் கடினமாகவும் உழைத்ததால்தான் அந்நாடு பொருளாதார வல்லரசாகி செழித்தோங்குகிறது'' என்று இங்குள்ள ஏகாதிபத்திய எடுபிடிகள் கதையளந்தார்கள். ஆனால் அவர்களின் முகத்திலே கரிபூசிவிட்டு ஏகாதிபத்திய வல்லரசான ஜப்பான், பொருளாதார நெருக்கடியில் சிக்கி, வேலையின்மையைத் தீவிரமாக்கி மக்களை வறுமைப்படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கிறது.

## ''கொலைகாரனும் நானே! நியாயவானும் நானே!'' – அமெரிக்காவின் அடாவடித்தனம்

இரசாயன ஆயுதங்களை ஏழை நாடுகள் வைத்திருந்தால் அது உலக அமைதிக்குப் பேரபாயம்; ஆனால் அவற்றை அமெரிக்கா குவித்து வைத்துக் கொண்டிருந்தால் அது உலக நன்மைக்கானது என்பது அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் நியாயவாதம். இதற்காக அமெரிக்கா செய்து வரும் தில்லுமுல்லுகளும் சதிகளும் அடாவடித்தனங்களும் ஏராளம். உலகப் பேட்டை ரவுடியான அமெரிக்கா, அண்மையில் செய்துள்ள அடாவடித்தனங்கள் அதன் போர்வெறி கோர முகத்தை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

அனைத்துலக அரங்கில் கொடிய இரசாயன ஆயுதங்களை அழித்தொழித்து அமைதியான உலகை உருவாக்கும் நோக்கத்தோடு இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பு (OPCW) நெதர்லாந்து நாட்டிலுள்ள ஹேக் நகரில் 1997-இல் தொடங்கப்பட்டது. ஜோஸ் பஸ்தானி என்ற பிரேசில் நாட்டுக்காரர் இதன் தலைவராகச் செயல்பட்டு வந்தார். இவர் ஒவ்வொரு நாடாகச் சென்று இரசாயன ஆயுதங்களால் ஏற்படும் பேரழிவை விளக்கி 145 நாடுகளை இந்த அமைப்பில் உறுப்பினர்களாக்கியதோடு, அபாயகரமான இரசா



படிப்பகம்

www.padippakam.com



யன ஆயுதங்களை அழிக்கவும் செய்துள்ளார். எந்தவொரு நாட்டுக்கும் சார்பு / எதிர்ப்பு என்றில்லாமல் எல்லா நாடுகளையும் சமமாகப் பாவித்த பஸ்தானி, அமெரிக்காவிலுள்ள இரசாயன ஆயுதக் கிடங்குகளையும் பார்வையிடத் தீர்மானித்தார். இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, இந்த அமைப்பின் உறுப்பினர்கள் தமது நாட்டுக்கு வருவதைத் தடுக்கும் சிறப்புச் சட்டத்தை இயற்றி அதிபருக்கு வரம்பற்ற அதிகாரமளித்தது.

விவகாரம் இதோடு நின்றுவிடவில்லை. பஸ்தானியைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று கடந்த ஜனவரியில் பிரேசிலுக்கு அமெரிக்கா கடிதம் எழுதியது. பிரேசில் இதை ஏற்க மறுத்துவிட்டது. பின்னர், தவறான நிர்வாகம் மற்றும் சார்புத்தன்மை கொண்ட தீய நோக்கத்துடன் செயல்படுவதாகக் கூறி இரசாயன ஆயுதத் தடை அமைப்பில் கடந்த மார்ச் மாதத்தில் பஸ்தானி மீது அமெரிக்கா நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அங்கே அமெரிக்காவின் கீழ்த்தரமான முயற்சி தோல்வியடைந்ததும், உச்சகட்ட வெறியோடு மீண்டும் ஏப்ரல் 21 அன்று ஒரு சிறப்புக் கூட்டத்துக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்தது. அமெரிக்க உதவி வேண்டுமா - வேண்டாமா என்று ஏழை நாடுகளை மிரட்டிப் பணிய வைத்து ஓட்டுப் போடச் செய்து பஸ்தானியைப் பதவியிலிருந்து தூக்கியடித்துள்ளது. இதற்காகப் பலகோடி டாலர்களை வாரியிறைத்து ஏழை நாடுகளை விலைபேசும் கீழ்த்தரமான நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

பஸ்தானி, ஈராக்கையும் தனது அமைப்பில் உறுப்பினராக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார். இதனால் ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இல்லை என்று நிருபணமாகிவிட்டால், ஈராக்கைப் பயங்கரவாத நாடாகக் காட்டி போர்தொடுக்கத் துடிக்கும் அமெரிக்காவின் ஆதிக்கக் கனவு தகர்ந்துவிடும். அதன் போர்வெறியும் உலக மேலாதிக்க நோக்கமும் அம்பலமாகிவிடும். பஸ்தானியைத் தலைவர் பதவியிலிருந்து அமெரிக்கா தூக்கியடிக்க இதுவும் ஒரு காரணம்.








**அமெரிக்காவின் அடாவடித் தனத்தால் பதவி பறிக்கப்பட்ட ஐ.நா. மன்ற தட்பவெப்ப நிலை மாற்ற அமைப்பின் தலைவர் ராபர்ட் வாட்சன் (மேல்), இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பின் தலைவர் ஜோஸ் பஸ்தானி (நடுவில்) மற்றும் ஐ.நா. தலைமை ஆயுத பரிசோதகர் ஹான்ஸ் ப்ளிக்ஸ்.**

பஸ்தானி மட்டுமல்ல; ஐ.நா. மன்றத்தின் தட்பவெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகளை எச்சரித்து வரும் அமைப்பின் தலைவரான ராபர்ட் வாட்சன் என்பவரையும் அப்பதவியிலிருந்து அமெரிக்கா தூக்கியடித்துள்ளது. அமெரிக்காவின் ஏகபோக எண்ணெய் நிறுவனமான எக்சான் மொபில், தட்பவெப்ப நிலையில் பெரும் சீர்குலைவுகளை ஏற்படுத்தி வருகிறது என்று அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியதே, அவரது பதவி பறிப்புக்குக் காரணம்.

இவை தவிர, கடந்த ஏப்ரலில் ஐ.நா.வின் தலைமை ஆயுதப் பரிசோதகரான ஹான்ஸ் ப்ளிக்ஸ் என்பவரது நேர்மையைப் பற்றி துப்பு துலக்க தனது உளவு அமைப்புகளுக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. அமெரிக்காவின் ஆயுத இருப்பை அவர் ஆராய முற்பட்டதுதான் இதற்குக் காரணம். உலகில் தட்பவெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க முயற்சிக்கும் கியோடோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவரும் அமெரிக்கா, கடந்த ஏப்ரலில் வியன்னாவில் நடந்த ஐ.நா.வின் அணு ஆயுதத்தடை ஒப்பந்தம் குறித்த கூட்டத்தையும் புறக்கணித்து விட்டது.

எந்த சட்ட திட்டங்களுக்கும் சோதனைகளுக்கும் கட்டுப்படவே மாட்டேன் என்று அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வரும் அமெரிக்காவுக்கு ஜனநாயகத்தைப் பற்றிப் பேச யோக்கியதை இருக்கிறதா? போர்வெறி பிடித்த காட்டுமிராண்டியான அமெரிக்க மேலாதிக்க வல்லரசுக்கு உலக அமைதி - சமாதானம் பற்றிப் பேச அருகதைதான் இருக்கிறதா?

## கொலைகார புஷ்-க்கு எதிராக கொந்தளிப்பான ஆர்ப்பாட்டங்கள்

கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது பழமொழி. போர்வெறியன் புஷ்-க்குச் செல்லுமிடமெல்லாம் எதிர்ப்பு என்பது புதுமொழியாகி விட்டது.

உலக மேலாதிக்கப் போர்வெறியன் புஷ், ஐரோப்பிய கண்டத்திலுள்ள ஜெர்மனி, பிரான்சு, ரசியா ஆகிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு கடந்த மே - 21-ந் தேதி முதலாக ஒரு வார காலத்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பெர்லின், பாரிஸ், கேயன், மாஸ்கோ, லெனின் கிராடு - என அவர் சென்ற இடமெல்லாம் "போர்வெறியன் புஷ்ஷே, திரும்பிப் போ!" என்ற முழக்கத்துடன் கூடிய ஆர்ப்பாட்டங்களே அவரை வரவேற்றன.

ஆப்கான் மீதான ஆக்கிரமிப்புப் போர், ஈராக் மீது போர்தொடுக்கத் துடிப்பது, தட்பவெப்ப நிலை - சுற்றுச் சூழலைப் பாதுகாக்க 'கியோட்டோ' ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுப்பது, உள்நாட்டில் தூக்கு தண்டனையை ஒழிக்க மறுப்பது ஆகிய அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதோடு, உலக மேலாதிக்கத்துக்காக அட்டூழியங்களில் ஈடுபட்டு வருவதையும் எதிர்த்து ஐரோப்பிய மக்கள் புஷ் வருகையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள். ஜெர்மனியின் பெர்லின் நகரில் 20,000-க்கும் மேலாகத் திரண்ட மக்கள், "போர் வெறியனே திரும்பிப் போ! நாங்கள் உனது போர்த் திட்டங்களை ஆதரிக்கவில்லை" என்று முழங்கியபடியே நாடாளுமன்றக் கட்டிடத்தின்



படிப்பகம்

www.padippakam.com



முன்னும், புஷ் தங்கியிருந்த "அட்லான்" ஐந்து நட்சத்திர விடுதி முன்னும் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க ஜெர்மன் நாட்டு அரசு 10,000 அதிரடிப் போலீசைக் குவித்து தடையரண்களை அமைத்து அச்சுறுத்தியது. இது தவிர, அமெரிக்க அதிபர் புஷ் தன்னுடன் 600 பாதுகாப்புப் படையினரைக் கொண்டு வந்து பீதியூட்டினார். ஆனாலும் அச்சுறுத்தல் - அடக்குமுறைகளை மீறி கொலைகார புஷ்-ஐ எதிர்த்து ஜெர்மானிய மக்கள் மிகப் பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அடுத்து, அவர் பிரான்சுக்குச் சென்றபோது தலைநகர் பாரீசில், "போர்வெறியன் புஷ்ஷே, நீதான் உலகின் முதல் பயங்கரவாதி!" என்ற முழக்கமே எங்கும் எதிரொலித்தது. பாரீசிலும் பாஸ்டில் நகரிலும் பல பத்தாயிரக்கணக்கானோர் திரண்டு புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அதிபர் புஷ், முன்பு டெக்சாஸ் மாகாண கவர்னராக இருந்தபோது 152 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கிய கொடுஞ்செயலை எதிர்த்தும், இன்றும்கூட அமெரிக்க வல்லரசு தூக்கு தண்டனையை ரத்து செய்யாததை எதிர்த்தும், பாரிசின் சுதந்திரதேவி சிலை முன்பாக புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. பிரான்சின் நார்மண்டி பிராந்தியத்தில் உள்ள கேயன் நகரில் இரண்டாம் உலகப் போரில் இறந்த அமெரிக்கப் போர்வீரர்களுக்கு அஞ்சலி செலுத்த புஷ் சென்றபோது, வழியெங்கும் தடையை மீறி மக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தார்கள்.



"கொலைகார புஷ்ஷே திரும்பிப் போ!" - பெர்லின் நகரில் போலீசுடன் மோதலாக முடிந்த புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

அதிபர் புஷ், அடுத்து ரசியாவுக்குச் சென்றார். புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதித்த ரசிய அதிபர் புடின், லெனின்கிராடு நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ரசிய மக்களைச் சிறையிலடைத்தார். புஷ் வருகைக்கு முன்னரே நாட்டின் பல பகுதிகளிலும் முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். அதையும் மீறி மாஸ்கோ நகரில் புஷ் வருகைக்கு முன் மே - 23-ஆம் தேதியன்று மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. மே 25 அன்று லெனின்கிராடு நகரில் பீட்டர்ஸ் பர்க் பல்கலைக் கழகத்தில் பலத்த பாதுகாப்புடன் ரசிய அதிபர் புடினும் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் கூட்டாகப் பங்கேற்று உரையாற்றிக் கொண்டிருந்தபோது, திடீரென 50 மாணவர்கள் கூட்டத்தின் நடுவே கூச்சலிட்டு புஷ்ஷுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்று மாலை புடினும் புஷ்ஷும் குடும்பத்தோடு கலை நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தபோது, கலையரங்கில் திடீரென நுழைந்து 20 பேர் ஆர்ப்பாட்டம் செய்ததோடு புரட்சிகரப் பாடல்களையும் உரக்கப் பாடியுள்ளனர்.

அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும் போர்வெறியையும் அதன் கூட்டாளிகளான ஏகாதிபத்தியவாதிகளும், இந்தியா போன்ற அடிமை நாட்டு ஆட்சியாளர்களும் மட்டுமே அங்கீகரிக்கின்றனர். உலக மக்கள் இதை ஒருபோதும் ஆதரிக்கவில்லை என்பதற்கு ஐரோப்பாவில் நடந்த புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களே சாட்சியாகத் திகழ்கிறது.

## "கின்லே" என்றால் பகற்கொள்ளை

நமது பொருளை நம்மிடமிருந்து திருடி நமக்கே விற்கிறவனை என்ன சொல்லி அழைக்கலாம்? அயோக்கியன், மோசடிக்காரன் என்றெல்லாம் பல பகுதிகளில் அந்தந்த வட்டார மொழிக்கேற்ப பல பெயர்களில் அழைப்பதால் குழப்பமாகிறது. இனி அந்தக் குழப்பம் தேவையில்லை. "கின்லே" என்ற ஒரே பெயரில் இனி அழைக்கலாம்.

அமெரிக்காவின் தேசங்கடந்த ஏகபோக குளிர்பான நிறுவனமான கோகோ கோலா, "கின்லே" என்ற பெயரில் குடுவை குடிநீரை விற்பனை செய்து வருகிறது. அதைத் தாதுநீர் என்று அந்நிறுவனம் ஆரவாரமாக விளம்பரம் செய்தாலும், கின்லே குடுவையில் இருப்பது நமது ஊரின் சாதாரணக் குடிநீர்தான். இந்தக் குடிநீரை 5 பைசாவுக்கு வாங்கி அதை ஒரு லிட்டர் ரூ. 12-க்கு நம்மிடமே விற்கிறது கின்லே.

கோவை - பெரிய நாயக்கன் பாளையம் அருகே குடிநீரைக் குடுவையில் அடைக்கும் ஆலையை கின்லே நிறுவியுள்ளது. ஒரு நாளைக்கு 2 லட்சம் லிட்டர் குடிநீரை அத்திக்கடவு குடிநீர் திட்டத்திலிருந்து பெற்று தனது குடுவை குடிநீர் ஆலைக்குக் கொண்டு செல்ல கின்லே நிறுவனம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளது.

இந்த ஒப்பந்தப்படி 1000 லிட்டர் குடிநீரை எடுத்துக் கொள்ள கின்லே கொடுக்கப்போகும் கட்டணம் ரூ.50; அதாவது ஒரு லிட்டருக்கு 5 பைசா! இந்த ஒப்பந்தத்துக்கு உத்தரவு அளித்துள்ள குடிநீர் - வடிகால் வாரியம் இந்த ஆணையை இரகசியமாக வைத்துள்ளது.

கோவை மற்றும் புறநகர் பகுதிகளில் மக்களின் குடிநீர் தேவையை பில்லூர், அத்திக்கடவு குடிநீர் திட்டங்கள் பூர்த்தி செய்து வருகின்றன. அத்திக்கடவு குடிநீர் திட்டம் இல்லையெனில் கோவையிலும் குறிப்பாக கவுண்டம்பாளையம், கணபதி, துடியலூர் போன்ற புறநகர் பகுதிகளிலும் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும். ஏற்கனவே கவுண்டம்பாளையம் பகுதியில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை என சுழற்சி முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், அத்திக்கடவு குடிநீர் திட்டத்திலிருந்து ஒரு நாளைக்கு 2 லட்சம் லிட்டர் குடிநீர் வீதம் கின்லே நிறுவனம் எடுத்துக் கொண்டால், நிலைமை என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தவிச்ச வாய்க்கு தண்ணீர்கூட இல்லாமல் கோவை மக்கள் அவதிப்பட வேண்டும்; அல்லது ஒரு லிட்டர் குடிநீரை ரூ. 12-க்கு கின்லேயிடம் வாங்க வேண்டும். அல்லது தாகம் தணிக்க கோகோ கோலாவை வாங்கிக் குடிக்க வேண்டும்.

ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்டு வரும் குடிநீரை வாங்கி அதைக் குடுவையில் அடைத்து கின்லே நிறுவனம் விற்பது நியாயமான வர்த்தகமா? நம்மிடமிருந்து 5 பைசாவுக்குக் குடிநீரைப் பெற்று அதை 12 ரூபாய்க்கு விற்பதற்குப் பெயர் வியாபாரத் தந்திரமா? பல்லாயிரக்கணக்கான மக்கள் குடிநீரின்றி அவதிப்படும்போது, பன்னாட்டுக் கம்பெனிக்கு தினம் 2 லட்சம் லிட்டர் குடிநீரைத் தாரை வார்ப்பதுதான் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியா? கோவை மக்கள் தமது வீரம் செறிந்த போராட்டத்தின் மூலம் இதற்குப் பதிலளிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேரணி மீது டெல்லி போலீசாரின் கொலைவெறித் தாக்குதல்

ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரான அரங்கம் (Forum Against Imperialist Globalisation (FAIG) என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக அமைப்புகளின் கூட்டமைப்பாகும். இதில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர் - இளைஞர்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பல்வேறு உழைக்கும் மக்களின் அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இக்கூட்டமைப்பில் ஒரு உறுப்பு அமைப்பாக உள்ளது.

நாட்டை அடகு வைக்கும் வாஜ்பாய் அரசை எதிர்த்தும், உலக வர்த்தகக் கழகத்திலிருந்து (WTO) இந்தியாவை வெளியேறக் கோரியும், பயங்கரவாத ''பொடா'' சட்டத்தை ரத்து செய்யக் கோரியும், குஜராத்தில் முசுலீம்களை நரவேட்டையாடும் இந்துவெறி பாசிச பயங்கரத்தை எதிர்த்தும், இக்கூட்டமைப்பானது கடந்த மே 10-ஆம் தேதியன்று டெல்லி ராம்லீலா மைதானத்தில் பொதுக் கூட்டமும் மாலையில் நாடாளுமன்ற வீதியில் பேரணியும் நடத்த ஏற்பாடு செய்திருந்தது. 1857-ஆம் ஆண்டில் நடந்த முதல் சுதந்திரப் போரின் 145-வது ஆண்டு நினைவாக இப்பேரணியும் பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டன.

மே-10 ஆம் நாளன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரண்ட 20,000-க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள், கொளுத்தும் வெய்யிலைப் பொருட்படுத்தாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வோடு ராம்லீலா மைதானத்தில் குழுமினர். பல்வேறு தொழிற்சங்க - விவசாய சங்கத் தலைவர்கள், தாழ்த்தப்பட்டோர், மகளிர், மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகளின் பொதுக்கூட்ட உரைக்குப் பின்னர், மாலை 4 மணியளவில் பேரணி புறப்படத் தயாரானது. ஆனால் மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள டெல்லி போலீசார், பேரணிக்குத் திடீரென தடை விதித்தனர். இதை முன்னணியாளர் எதிர்த்து வாதிட்டதும், திடலில் கூடியுள்ள அத்தனை பேரையும் தாம் கைது செய்வதாக போலீசார் எச்சரித்தனர். ஒலிபெருக்கி இணைப்புகளையும் துண்டித்தனர். அடுத்த சில நிமிடங்களில் பெரும்படையுடன் வந்த போலீசார், மைதானத்தின் வாயிற்கதவுகள் அனைத்தையும் அடைத்துவிட்டு, நிராயுதபாணிகளான உழைக்கும் மக்கள் மீது கண்மூடித்தனமான தடியடித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். நாற்புறமும் சூழ்ந்து கொண்டு கொலைவெறித் தாக்குதலை நடத்திய டெல்லி போலீசு, ஒரு சிறிய வாயிற்கதவை மட்டும் திறந்துவிட்டு, ரெயில் நிலையம் வரை துரத்தி வந்து தாக்கியது. ஆயிரக்கணக்கான பெண்களும் குழந்தைகள் படுகாயமடைந்ததோடு, இத்தாக்குதலில் பலரது கைகால் எலும்பு முறிந்து மண்டை உடைந்தது. முன்னணித் தலைவர்கள் பலர் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆங்கிலேய காலனியாதிக்கவாதியான ஜெனரல் டயர், ஜாலியன்வாலாபாக் மைதானத்தில் வெள்ளையரை எதிர்த்துத் திரண்ட மக்கள்மீது, நாற்புறமும் வாயிற் கதவுகளை மூடிவிட்டு வெறித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினான். இன்று, காலனியாதிக்கவாதிகளின் விசுவாச எடுபிடியாக உள்ள வாஜ்பாய் அரசு, டெல்லி ராம்லீலா மைதானத்தில் திரண்ட நாட்டுப் பற்று கொண்ட உழைக்கும் மக்கள் மீது, ஜெனரல் டயர் வழியில் கதவுகளை அடைத்துவிட்டு கொலைவெறித் தாக்குதலை நடத்தியிருக்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேரணியை ஒடுக்கி, பேரணிக்குத் திரண்ட உழைக்கும் மக்கள் மீது டெல்லி போலீசார் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டித்தும், தேசத்துரோக பா.ஜ.க. கூட்டணி அரசை அம்பலப்படுத்தியும், ஜூன் 7-ஆம் தேதியன்று மாலை சென்னை மெமோரியல் ஹால் அருகே புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. திரளாகத் தொழிலாளர்களும் ஜனநாயகவாதிகளும் தோழமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று நடந்த இந்த கண்டன ஆர்ப்பாட்டம், பா.ஜ.க. அரசின் பாசிச கோர முகத்தை உழைக்கும் மக்களுக்குத் திரைகிழித்துக் காட்டுவதாக அமைந்தது.

**தகவல்:**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**

## ''பாசிச ஜெயா கும்பலின் கருப்புச் சட்டங்களைக் கருவறுப்போம்!'' - பு.ஜ.தொ.மு.வின் தெருமுனைக் கூட்டங்கள்

தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவதற்கு அவர்கள் பெற்றிருக்கும் ஒரே சட்டப்பூர்வ ஆயுதம் வேலை நிறுத்தம்தான். தனியார்மய - தாராளமயத் தாக்குதலைத் தீவிரப்படுத்தி வரும் பாசிச ஜெயா, அத்தியாவசியப் பணி பாதுகாப்புச் சட்டம் என்ற கருப்புச் சட்டத்தைக் கொண்டு, தொழிலாளர்கள் அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்ட உரிமையையும் பறித்துக் கொண்டு விட்டது. இக்கருப்புச் சட்டத்தையும், தனியார்மய - தாராளமயத்தால் நாடும் மக்களும் அடிமையாக்கப்பட்டு வருவதையும் பாசிச இருள் படர்ந்து வருவதையும் விளக்கி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் பிரச்சார இயக்கத்தை நடத்தி வந்தது. அதன் தொடர்ச்சியாக, கடந்த மே - 25 அன்று சென்னை - கொரட்டூர் ரெட்டித் தெருவிலும் மே - 27 அன்று அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் அருகிலும் மாலையில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது. இவ்விரு கூட்டங்களிலும் தோழர் விஜயகுமார் சிறப்புரையாற்றினார். தொழிலாளர்கள் திரளாக வந்து ஆதரித்து நன்கொடைகள் அளித்து ஊக்கமளித்தது புதிய நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது.






படிப்பகம்

www.padippakam.com

# பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறும் உலகம்



இன்றைய ஏகாதிபத்திய உலகக் கட்டமைப்பில் ஏறத்தாழ 80 கோடி மக்கள் அடுத்த வேளை சோற்றுக்கு வழியின்றி பட்டினியில் பரிதவிக்கிறார்கள். ஐந்து வயதுக்கும் கீழான குழந்தைகளில் 20 கோடி பேர் பாலும் சத்துணவின்றியும் பசியால் துடிக்கிறார்கள். அனைத்துலக மக்கள் தொகையில் 6-இல் ஒரு பங்கினர் ஒரு நாளைக்கு 50 ரூபாய்க்கும் குறைவாகக் கூலி பெற்று வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் ஐ.நா. மன்றத்தின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), உலகில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்தோடு கடந்த ஜூன் 10-13 தேதிகளில் ரோம் நகரில் உலக நாடுகளின் உச்சி மாநாட்டை நடத்தியது.

பெரும்பாலான நாடுகள் பட்டினிக் கொடுமையிலிருந்து தமது மக்களை விடுவிப்பதில் அக்கறை காட்டாத நிலையில், எந்த நாடும் இம்மாநாட்டுக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. பணக்கார ஏகாதிபத்திய நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டுக்கே வரவில்லை. ஜூன் 13-ஆம் தேதியன்று மாநாடு நிறைவடைவதற்கு இரண்டு மணிநேரம் முன்னதாகவே அவசரமாக முடித்து விட்டனர். காரணம், மாநாட்டுக்கு வந்த உலக நாடுகளின் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் அன்றைய உலகக்கோப்பை கால்பந்து போட்டியைக் கண்டுகளிக்க வேண்டியிருந்ததாம்!

1996-ஆம் ஆண்டில் இதே உணவு மற்றும் விவசாய அமைப்பின் மாநாடு நடத்தப்பட்டு பட்டினியை ஒழிக்க இலக்குகளும் தீர்மானிக்கப்பட்டன. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 2001-இல் இம்மாநாடு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உலகெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு - உலகமய எதிர்ப்புப் போராட்டங்கள் பெருகி வருவதைக் கண்டு அஞ்சிய இத்தாலிய அரசு, ரோம் நகரில் இம்மாநாடு நடந்தால் வன்முறை - தெருப் போராட்டங்கள் பெருகி விபரீத விளைவுகள் ஏற்படும் என்று பீதியடைந்து வேறிடத்தில் நடத்தச் சொல்லி இழுத்தடித்து வந்தது. பின்னர் பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டுடன் ஓராண்டு கழித்து இப்போது இம்மாநாடு நடந்துள்ளது.

1996-இல் நடந்த மாநாட்டில், அடுத்த 20 ஆண்டுகளில் - அதாவது 2015-க்குள் உலகில் பட்டினியால் வாடும் மக்கள் தொகையை 80 கோடியிலிருந்து 40 கோடியாகக் குறைப்பது என்று இலக்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் குறைந்தபட்சம் 20 கோடி மக்களை பட்டினிச் சாவிலிருந்து மீட்க முடியும் என்று பொருளாதார வல்லுனர்கள் ஆரூடம் கூறினார்கள். இந்த இலக்கை நிறைவேற்றப் பாடுபடுவது என்று 2000-வது ஆண்டில் ஐ.நா. மன்றம் நடத்திய புத்தாயிரமாவது ஆண்டின் வளர்ச்சி இலக்கு மாநாட்டிலும் குளுரைக்கப்பட்டது.

ஆனால், இதற்கான முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை. ஐ.நா.வின் உத்தேச கணக்குப்படி ஆண்டுக்கு ஏறத்தாழ 50 இலட்சம் பேர்களைப் பட்டினியிலிருந்து தற்காலிகமாக மீட்கும் அளவுக்குத்தான் இலக்கு நிறைவேறியுள்ளது. இதே விகிதத்தில் போனால், 20 ஆண்டுகளில் ஏறத்தாழ 10 கோடிப் பேரைத்தான் பட்டினியிலிருந்து மீட்க முடியும். மீதியுள்ள 70 கோடிப் பேர் பட்டினி நிலையில் அப்படியே நீடிப்பார்கள். இந்தக் கணக்கு கூட 1996-இல் இருந்த உலகப் பொருளாதார நிலைமை மற்றும் மக்கள்தொகை பெருக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதுதான். இன்று ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலும் கொள்ளையும் தீவிரமாகி வறுமையும் பட்டினியும் கோடிக்கணக்கான மக்களைக் கவ்வியுள்ள நிலையில், இந்தக் கணக்கு மிக அற்பமானதாகவே இருக்கும்.

ஏனெனில் ஆண்டுக்கு 2400 கோடி டாலர் (ஏறத்தாழ ரூ. 1,20,000 கோடி) அளவுக்கு சமூக நலத்திட்டங்களிலும், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களிலும் முதலீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட இலக்கை, உலகின் பணக்கார 8 நாடுகளும் செயல்படுத்தவே இல்லை. ஏழை நாடுகளோ ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் சிக்கி விவசாயத்துக்கான உதவியையும் மானியங்களையும் பாதிக்குமேல் குறைத்து விட்டன.

மறுபுறம், உலகமயமாக்கலின் விளைவாக ஏழை நாடுகளின் விவசாய நிலங்களும் மூலாதாரங்களும் அந்நியக் கம்பெனிகளால் சூறையாடப்படுகிறது. பாரம்பரிய விவசாயம் நாசமாக்கப்படுகிறது. உணவுக்காக விவசாயம் என்பதுபோய், ஏற்றுமதிக்காக விவசாயம் என்று மாற்றப்பட்டு வருகிறது. இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கம் காரணமாக உள்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் போண்டியாகி வறுமைக்கும் பட்டினிக்கும் தள்ளப்படுகிறார்கள். ஆப்பிரிக்க நாடுகளைத் தொடர்ந்து வறுமையும் பஞ்சமும் பட்டினியும் ஆசிய நாடுகளில் பற்றிப் படர்ந்து வருகிறது.

'நாகரீக'க் கோமான்களான ஏகாதிபத்தியவாதிகள் உலகின் கோடானுகோடி மக்கள் பட்டினியால் துடித்துக் கொண்டிருந்த போதிலும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. கல் நெஞ்சக்காரர்களான அவர்கள் கஞ்சித் தொட்டி நிறுவக்கூட ஏழை நாடுகளுக்குக் கடன் தர முன் வருவதில்லை. ஆனால் வறுமையையும் பட்டினியையும் ஒழிக்க, உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டங்களுக்கு மட்டுமே அவர்கள் கடன் கொடுக்க முன் வந்துள்ளார்கள். அதாவது, உயிரியல் தொழில் நுட்பத்துறையில் ஏகபோகமாக உள்ள மான்சாண்டோ முதலான அமெரிக்க நிறுவனங்களின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மலட்டு விதைகள், உரம், பூச்சி மருந்துகளை ஏழைநாடுகளின் தலையில் திணிக்கும் முயற்சிதான் இது. இதற்கு ஏற்றாற்போல, உயிரியல் தொழில் நுட்பத்தைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி வறுமையையும் பட்டினியையும் குறைக்கவேண்டும் என்று ரோம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், பசி - பட்டினியை ஆயுதமாக்கிக் கொண்டு, உயிரியல் தொழில் நுட்பத்தின் பெயரால் ஏழை நாடுகளை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிடவும் ஆதிக்கம் செய்யவும் உதவும் ஒரு உந்துபலகையாகவே இம்மாநாடு நடந்து முடிந்துள்ளது.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# கோகோ கோலா: குளிர்பான நிறுவனமா? கொலைகாரக் கூடாரமா?

தென்னமெரிக்கக் கண்டத்தின் வட முனையில் வெனிசுலாவை அடுத்துள்ள நாடு, கொலம்பியா. அமெரிக்காவின் நம்பகமான - விசுவாசமான சர்வாதிகாரிகளால் ஆளப்படும் ஏழை நாடு. அந்நாட்டில் சராசரியாக மூன்று நாட்களுக்கு ஒரு தொழிற்சங்க செயல்வீரர் கொல்லப்படுகிறார். உலகில் கொல்லப்படும் ஐந்து தொழிற்சங்க முன்னோடிகளில் மூவர் கொலம்பிய நாட்டவராக உள்ளனர் என்று அனைத்துலக தொழிலாளர் சங்கம் (ILO) குற்றம் சாட்டுகிறது. கொலம்பிய அரசின் ஆதரவோடு அதன் இராணுவம், போலீசு, சிறப்பு அதிரடிப் படைகள் மற்றும் கொலைக் குழுக்களைக் கொண்டு இப்படுகொலைகளைச் செய்து வருவது - அமெரிக்காவின் தேசங் கடந்த ஏகபோக குளிர்பான நிறுவனமான கோகோ கோலா!

அகன்ற அமெரிக்க குளிர்பான நிறுவனம் (Panamco) என்ற பெயரில் கோகோ கோலா, குளிர்பானத்தை பாட்டில்களில் அடைக்கும் ஆலைகளை கொலம்பியாவில் இயக்கி வருகிறது. இந்த ஆலைகளில் பணியாற்றும் தொழிற்சங்க முன்னோடிகளைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்வதும் பணிய மறுப்பவர்களை ஏ.யு.சி. எனப்படும் கொலம்பிய துணை இராணுவப்படையின் கொலைக் குழுக்களைக் கொண்டு தீர்த்துக் கட்டுவதும் கோகோ கோலாவின் கொலைகார உத்தியாக உள்ளது. கோக் நிறுவனத்தின் கொலைவெறியாட்டத்தை எதிர்த்து அனைத்துலகத் தொழிலாளர் உரிமை நிதியம் (ILRF) என்ற அமைப்பும், அமெரிக்க ஐக்கிய எஃகு தொழிலாளர் சங்கமும் அமெரிக்காவிலுள்ள மியாமி நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு ஜூலையில் வழக்கு தொடுத்துப் போராடி வருகின்றன. இந்த வழக்கிற்குப் பின்னர்தான் கொலைகார கோக்கின் கோர முகம் அனைத்துலக அரங்கில் அம்பலப் படத் தொடங்கியுள்ளது.

1989-ஆம் ஆண்டில் ஜோஸ் அவலினோ சிகானோ என்ற தொழிற்சங்க செயல்வீரர், பாஸ்டோ நகரிலுள்ள கோகோ கோலா ஆலையில் சுட்டுக் கொல்லப் பட்டார். 1996-இல் கேர்பா என்னுமிடத்திலுள்ள கோக் ஆலையில் லியோனார்டோ கிரானடோ, ஜோஸ் டேவிட் எனும் இரு முன்னணித் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் கட்ட முயன்றதற்காக கூலிப் படையினரால் ஆலைக்குள்ளேயே கொன்றொழிக்கப்பட்டனர். கோக் ஆலையின் தலைமை நிர்வாகி, ''தொழிற்சங்கத்தை அழிக்க துணை இராணுவப் படைகளிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளோம்'' என்று பகிரங்கமாகவே அறிவித்தான். கோக் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் சேர்ந்தால் கொலைக் குழுக்களிடமிருந்து மிரட்டல் வரும்; அவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவார்கள். இதனால் உயிருக்கு அஞ்சிய தொழிலாளர்கள் அமெரிக்காவிலுள்ள கோக் தலைமையகத்துக்குக் கடிதம் எழுதி முறையிட்டார்கள். தலைமை நிர்வாகிகள் கொலம்பிய கிளை நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நடந்ததோ வேறு!

1996 டிசம்பர் ஐந்தாம் நாளன்று கேர்பாவிலுள்ள கோக் ஆலைக்குள் நுழைந்த துணை இராணுவப் படையின் கொலைக் குழுவினர் ஐந்துபேர், அந்த ஆலையின் தொழிற்சங்கத் தலைவரான இசிட்ரோ செகுண்டோ கில் என்பவரை ஆலை வாயிலருகே சுட்டுக் கொன்றனர். அவரது உடலிலிருந்து பெருகிய இரத்தத்தால் ஆலையின் கோகோ கோலா இலச்சினை செந்நிறமாக உறைந்தது. அதே நாளில் கோக் ஆலைத் தொழிலாளர்களின் உள்ளூர் தொழிற்சங்க அலுவலகம் கூலிப்படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அடுத்த சில நாட்களில் ஆலைக்கு வந்த கொலைக்குழுவினர் ''தொழிற்சங்கத்தைக் கலைத்து விடுங்கள்; இல்லையேல் உங்களுக்குச் சாவு நிச்சயம்'' என்று தொழிலாளர்களுக்குத் துப்பாக்கி முனையில் எச்சரிக்கை விடுத்தனர். பின்னர் தொழிலாளர்கள் நிர்வாக அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு ''நான் தொழிற்சங்கத்திலிருந்து விலகிக் கொள்கிறேன்'' என்று எழுதப்பட்ட கடிதங்கள் தயாராக இருந்தன. அதில் ஒவ்வொரு தொழிலாளியும் கையெழுத்திடுமாறு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறு கேர்பாவில் தொழிற்சங்கம் அழித்தொழிக்கப்பட்டது.



1996-இல் புகாராமங்கா எனுமிடத்திலுள்ள கோக் நிறுவனத் தொழிலாளர்கள், தமது மருத்துவ ஈட்டுறுதி தொகையை கோக் நிறுவனம் மோசடி செய்ததை எதிர்த்து 5 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அதைத் தொடர்ந்து ஆலையில் குண்டு வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தொழிற்சங்க முன்னணியாளர்கள் 5 பேர் சிறையிடப்பட்டனர். இதர தொழிற்சங்க செயல்வீரர்கள் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பின்னர் ஆலையில் குண்டு வைத்த விவகாரமானது, கோக் நிறுவனமே செய்த ஏற்பாடுதான் என்று வழக்கு மன்றத்தில் அம்பலமானது.

அண்மையில் ஊதிய உயர்வு தொடர்பான போராட்டத்தைத் தொடர்ந்து கோக் நிறுவனத்துக்கும் நிர்வாகத்துக்குமிடையே பேச்சு வார்த்தை நடந்து வந்தது. கோக் நிறுவனத்தின் கொலைவெறி சதித்திட்டங்களைப் பற்றி உணர்ந்திருந்த தொழிற்சங்கத்தினர் கொலம்பிய அரசாங்கத்திடம் பாதுகாப்பு கோரினர். ஆனால் அரசாங்கமோ பாதுகாப்பு தர மறுத்துவிட்டது. இந்நிலையில் உள்ளூர் தொழிற்சங்கத் தலைவரான ஆஸ்கார் டாரியோசோடோபோலோ, தனது மகளுடன் தெருவில் நடந்து சென்ற போது பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப் பட்டார். கொலம்பியாவில் 2001-ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட தொழிற்சங்க முன்னோடிகளில் அவர் 62-வது நபர்!

இப்படுகொலையைத் தொடர்ந்து கொலம்பிய கோக் தொழிலாளர்கள் அமெரிக்கத் தொழிற்சங்கங்களோடு இணைந்து - குறிப்பாக அமெரிக்க கோகோ கோலா தொழிலாளர்களோடு இணைந்து போராடி வருகிறார்கள். டான் கோவலிக் என்ற அமெரிக்க வழக்கறிஞர் தனது சக வழக்கறிஞர்களுடன் இணைந்து கோகோ கோலா நிறுவனத்தின் கொலை வெறியாட்டத்துக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்துப் போராடி வருகிறார்.

கோக் - வெறும் தாகம் தீர்க்கும் குளிர்பானமல்ல. அந்த குளிர்பானத்தில் உறைந்திருப்பது தொழிலாளர்களின் இரத்தம். அது கொலைகாரர்களின் பானம். இரத்தம் குடிக்கும் காட்டேரிகளின் பானம். இந்த உண்மைகளை அறிந்த பின்னரும் ஒருவன் கோக் குடிக்கிறான் என்றால், அவன் மனித இனத்தவனாகவே இருக்க முடியாது.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com



# ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் மீது தஞ்சை மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் பிரேம்குமாரின் கொலைவெறித் தாக்குதல்—பழிவாங்கும் வெறித்தனம்!

தஞ்சை - மேரிஸ்கார்னர் ஆட்டோ நிறுத்தத்தில் 3.06.2002 அன்று போக்குவரத்து போலீசுக்கும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் தலையிட்டு, ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்க தலைவர் ஜோசப், செயலாளர் மற்றும் தாமஸ் ஆகிய மூவரையும் கடுமையாகத் தாக்கி தஞ்சை தெற்கு காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றார் காவல் துறை துணை ஆய்வாளர் முத்தமிழ்ச் செல்வன். தனது தவறை மறைக்க ஆட்டோ ஓட்டுநர்கள் தன்னை அடித்து உதைத்ததாக ஒரு பொய் தகவலை கூறி எஸ்.பி. பிரேம் குமாருக்கு வெறியேற்றினார். உடனே தெற்கு காவல் நிலையத்திற்கு வந்த எஸ்.பி. பிரேம்குமார், தோழர்கள் மூவரையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி மண்டையை உடைத்துவிட்டு போலீசாரைக் கொல்ல முயன்றதாக 'கொலை முயற்சி' உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் சிறையிலடைத்து தனது போலீசு வக்கிர புத்தியைக் காட்டிக் கொண்டார்.

அத்துடன் அவரது பழிவாங்கும் வெறி தணியவில்லை. சுமார் 30 ஆண்டுகளாக இருந்துவரும் மேரிஸ் கார்னர் ஆட்டோ நிறுத்தத்தைப் போக்குவரத்துக்கு இடையூறு எனக் காரணம் காட்டி அந்த இடத்தில் ஆட்டோ நிறுத்தக் கூடாது எனத் தடை செய்தார். மேலும் அந்த பகுதியில் எங்குமே ஆட்டோ நிறுத்த முடியாதவாறு தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, ஏழை ஆட்டோ ஓட்டுநர்களின் வயிற்றிலடிக்கிறார். அநாகரிகமாக பேசிய போலீசாரை மரியாதையாக பேசுங்கள் எனக் கேட்டதுதான் மேரிஸ் கார்னர் ஆட்டோ நிறுத்தப் பிரச்சினைக்கு அடிப்படை.

குற்றங்களைத் தடுக்க சட்டப்பூர்வ வழிமுறைகளைக் கையாளாமல் நேரடியாகச் சுட்டுத் தள்ளுவது, அடித்தே கொல்வது, கைகால்களை முறித்துச் சித்திரவதை செய்வது என்ற காட்டுமிராண்டித்தனமான மிருகத்தனமான வழிமுறைகளையே கையாள்கிறார், எஸ்.பி. பிரேம் குமார். இவர் தஞ்சை மாவட்ட எஸ்.பி.யாகப் பொறுப்பேற்றது முதல் தஞ்சையில் பலர் ''மோதல்'' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் மிரட்டப்பட்டு தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பலர் போலீசு நிலையத்திலேயே அடித்து கொல்லப்பட்டனர்.

மேரிஸ் கார்னர் ஆட்டோ நிறுத்தம் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் உள்ளது. அந்த இடத்தில் ஆட்டோ நிறுத்தக் கூடாது எனத் தடுக்கப் போலீசாருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. ஆனால், தனது அதிகார எல்லையை மீறி எஸ்.பி. அடாவடித்தனமாக நடந்து கொள்கிறார். ஆட்டோ ஓட்டுநர்கள் மீது எஸ்.பி.க்கு வந்த ஆத்திரத்திற்கும், பழி வாங்கும் போக்கிற்கும் காரணம் 'ஷேர் ஆட்டோ' முதலாளிகள் வீசிய எலும்புத் துண்டிற்கு காட்டும் விசுவாசமாகும்.

தஞ்சையில் ஓடும் 50 ஷேர் ஆட்டோக்கள் 2000 ஆட்டோ ஓட்டுநர்களை மாளாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த ஷேர் ஆட்டோக்களை ஒழிக்கவும், ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கவும், முன்னணியில் போராடி வரும் சங்கங்களுள் ஒன்றுதான் ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம். இச்சங்கத்தை ஒழித்துச் சங்கத் தலைவர்களைப் பொய் வழக்கு போட்டு முடக்கி, சங்கத்தை ஒழித்துவிட்டால் ஷேர் ஆட்டோ முதலாளிகள் தங்கு தடையின்றிக் கொள்ளையடிக்க எந்த பிரச்சினையும் வராது என கனவு காண்கிறார் எஸ்:பி. பிரேம்குமார். அந்த கனவினை நிறைவேற்றவே பொய் வழக்கு, மேரிஸ் கார்னர் ஆட்டோ நிலையம் அப்புறப்படுத்துதல் என்று துள்ளுகிறார் எஸ்.பி.

எஸ்.பி. பிரேம்குமார் சாதாரண போலீசாகப் பணியாற்றத் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல்வேறு மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்துள்ளார். உதாரணமாக 1983-இல் மதுரை வாடிப்பட்டியில் எஸ்.ஐ.யாகப் பணிபுரிந்த போது நல்ல காமன் என்பவரையும் அவரது மனைவியையும் கைவிலங்கிட்டுப் பேருந்து நிலையத்திலிருந்து காவல்நிலையம் வரை இழுத்து சென்று அவமானப்படுத்தியது மட்டுமின்றி, இருவரையும் சித்திரவதைப்படுத்தி நல்லகாமன் மனைவயின் தாலி சங்கிலியைப் பறித்துள்ளார். இச்சம்பவம் ஆர்.டி.ஓ. விசாரணைக்கு வந்து உண்மையென நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கற்பக விநாயகம் அவர்கள் ''தற்போது எஸ்.பி.யாக இருக்கும் பிரேம்குமாரை, தூய்மையான நபராக இந்த கோர்ட் அணுகவில்லை, இவரை போன்றவர்கள் போலீசு துறையில் அதிகாரிகளாக தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பது அவமானகரமானது'' என தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

அதேபோல் மூன்று மனித உரிமை மீறல் வழக்குகளில் பிணையில் வெளிவர இயலாத பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டும் அதிகாரி என்ற ஆணவத்தில் நீதிமன்றத்தில் சரணடையாமல் திரிந்து வருகிறார் எனவும் நீதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரு சில ஷேர் ஆட்டோ முதலைகளின் இலாபத்திற்காக ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்க்கை பாழடிக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமானால், ''தொழிலாளர்கள் ஒற்றுமை'' என்ற பெயரில் ஆட்டோ ஓட்டுநர்கள் ஓரணியில் அணிதிரண்டாக வேண்டும். உரிமை போராட்டத்தில் அடக்கு முறைகள், பொய் வழக்குகள் அனைத்தையும் எதிர்கொண்டு முறியடிக்கும் நெஞ்சுரத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதனை ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம் உணர்ந்து எஸ்.பி.யின் அடாவடித்தனத்திற்கு எதிராக சுவரொட்டி பிரச்சார இயக்கம் எடுத்து வருகிறது. ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்க சுவரொட்டிகளை போலீசு குண்டர்களை வைத்து தேடி தேடிக் கிழித்துத் தங்களை மக்கள் விரோதிகளாக நிரூபித்துக் கொண்டனர், தஞ்சை போலீசார்.

**தகவல்:**
**ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம், தஞ்சை மாவட்டம்.**



படிப்பகம்

www.padippakam.com

# அழுகி நாறும் ஜனநாயகம் அத்தர் பூசும் 'சேரிப் புயல்'

ஓட்டுச்சீட்டு ஜனநாயகம் என்பது எப்போதுமே உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகமாக இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. இருப்பினும் அதன் மீது நம்பிக்கையையும் மாயைகளையும் ஏற்படுத்தி மக்களை ஏய்க்க ஓட்டுக் கட்சிகள் தவறுவதுமில்லை. இன்றைய அரசியலமைப்பு முறையும் அதன் அங்கமான ஓட்டுச்சீட்டு ஜனநாயகமும் மரணப் படுக்கையில் விழுந்து கிடக்கும் நிலையில், அதற்குப் புத்துயிரூட்டக் கிளம்பியுள்ளார், விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பாளரான திருமாவளவன்.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி பஞ்சாயத்து தேர்தல் பிரச்சினை தொடர்பாக டெல்லி வரை போய் பிரதமர் வாஜ்பாயையும், காங்கிரசு தலைவி சோனியாவையும் சந்தித்து விட்டுத் திரும்பிய திருமாவளவன், ''ஜூனியர் விகடன்'' பத்திரிகைக்கு அளித்துள்ள வாக்குமூலமே, அவர் கைதேர்ந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவர் என்பதை நிருபித்துக் காட்டுகின்றது. திருமாவளவன் உதிர்த்த 'புரட்சி' முத்துக்கள் இவை:

**★ பாப்பாபட்டி, கீரிப்பட்டி உட்பட தலித்களுக்கான ஐந்து பஞ்சாயத்துகளில் தேர்தலை நடத்தியது நாங்கள்தான் என்று அ.தி.மு.க. அரசு மார்தட்டிக் கொள்கிறது. அப்படிப் பெருமைப்பட அவர்களுக்கு அருகதை இல்லை. கீரிப்பட்டியிலும் பாப்பாபட்டியிலும் நாங்கள் வேட்பாளர்களை நிறுத்தியதால்தான் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் வந்தது. இப்படி ஜனநாயகத்தைக் காப்பாற்றியதற்காக நாங்கள் படும்பாடு வேதனையானது.**

**★ இதை சட்டமன்றத்தில் பேச முயன்றேன். தொடர்ந்து ஐந்து நாட்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வர முயன்றேன். பேச வாய்ப்பு கிடைக்காததால் வெளி நடப்புச் செய்தேன். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய அரசோ, சாதி வெறியர்களைத்தான் பாதுகாக்கிறது.**

**★ டெல்லி போனேன். பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து, இது குறித்த முழு விவரங்களையும் எடுத்துச் சொன்னேன். அதிர்ச்சி அடைந்த அவர், என் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்.**

**★ அடுத்து காங்கிரசு தலைவர் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசினேன். ராஜீவ் காந்தி கொண்டு வந்த பஞ்சாயத்து ராஜ் திட்டத்துக்கு விடப்பட்ட சவால் இது! இதுபற்றி நீங்கள் நாடாளுமன்றத்தில் பேச வேண்டும். தேர்தலை நடத்த விடாமல் தடுக்கும் பஞ்சாயத்துகளுக்கு நிதி தராமல் தடுக்கும் சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்றேன். இது பற்றி விசாரிக்கிறேன் என்று சொன்னார் சோனியா.**

**★ மீண்டும் கே.ஆர். நாராயணனையே ஜனாதிபதி ஆக்க வேண்டும் என்று சோனியாவிடம் சொன்னேன். கடந்த முறை நாரயணனின் பெயரை முன்மொழிந்தது மூப்பனார்தான். இந்த முறையும் அவரையே ஜனாதிபதியாக்குவது மூப்பனாருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாக அமையும் என்றும் சொன்னேன். இந்த விசயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நம்பிக்கையான பதில் தந்தார் சோனியா.** (டெல்லியில் 'பாப்பாபட்டி' - ''அதிர்ந்தார் பிரதமர்!'', ஜூனியர் விகடன், 26.05.02)

பிரதமர் வாஜ்பாய் அதிர்ச்சி அடைந்தாராம்! அவரது கோரிக்கையைப் பரிசீலிப்பதாக உறுதியளித்தாராம்! குஜராத்தில் முசுலீம் மக்களை இந்துவெறியர்கள் உயிரோடு எரித்துக் கொன்ற கொடுஞ்செயலைக் கண்டு அதிர்ச்சியடையாமல் நிற்கும் பிரதமர், பாப்பாபட்டி - கீரிப்பட்டி விவகாரத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தார் என்றால் - கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பவர்கள் என்ன இளிச்சவாயர்களா? வாஜ்பாயை அவரது கட்சிக்காரர்களும் இந்துவெறி குருபீடமும் ''முகமூடி'' என்கிறார்கள். அந்த முகமூடி அதிர்ச்சியடைந்ததாம்! நம்பச் சொல்கிறார் திருமா.

ஏதோ இந்த விவகாரமெல்லாம் பிரதமருக்குத் தெரியாது போலவும், தெரிந்திருந்தால் உரிய நடவடிக்கை எடுத்து உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகத்தை நிலைநாட்டி விடுவார் என்பதுபோலவும் பிரமையூட்டுகிறார் திருமா. காசுமீரில் போலி ஜனநாயகத் தேர்தலை நடத்துவதற்காக எதிர்த்தரப்பு ஹுரியத் அமைப்பின் தலைவர்களைப் படுகொலை செய்தும், சித்திரவதை செய்து சிறையிலடைத்தும் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள வாஜ்பாய், பாப்பாபட்டி - கீரிப்பட்டியில் ஜனநாயகத்தை நிலைநாட்டி விடுவார் என்றால், நாட்டு மக்கள் வாயால் சிரிக்க மாட்டார்கள். சொந்தக் கட்சியிலேயே ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றாத வாஜ்பாயிடமும் சோனியாவிடமும் போய் பாப்பாபட்டியில் ஜனநாயகத்தை மீட்கச் சொல்லி முறையிடுவது அதைவிட கேலிக்கூத்து!

கீழத் தஞ்சையில் தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகளுக்குச் சவுக்கடியும் சாணிப்பாலும் கொடுத்து வதைத்த பண்ணையார் கட்சித் தலைவர் மூப்பனாரைப் 'புரட்சித் தலைவர்' என்று துதிபாடிய திருமா, இப்போது த.மா.கா. கட்சிக்காரர்களே மூப்பனாரை மறந்துவிட்ட நிலையில் அவருக்கு விசுவாசமாக அஞ்சலி செலுத்த விழைகிறார். அதிர்ந்தார் பிரதமர், நம்பிக்கையான பதில் தந்தார் சோனியா, உறுதியளித்தார் வெங்கையா நாயுடு என்று ஆளும் வர்க்க அரசியல் கட்சித் தலைவர்களைப் பிழைப்புவாதிகளுக்கே உரிய பாணியில் துதிபாடுகிறார்.




''தின்பது வாழைப்பழமாக இருந்தாலும் வெளியே வரும்போது மலமாகத்தான் இருக்கும்'' என்று ஓட்டுச்சீட்டு அரசியல்வாதிகளின் யோக்கியதையைப் பற்றி, முன்பு தேர்தல் புறக்கணிப்பு அரசியல் நடத்தி வந்த காலத்தில் திருமாவளவன் அடிக்கடி மேடைகளில் குறிப்பிடுவதுண்டு. இப்போது அவர், தேர்தல் சாக்கடையில் குதித்துக் கைதேர்ந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவராகி விட்டார். நடந்து முடிந்த சைதை சட்டமன்ற இடைத்தேர்தலில் 359 வாக்குகள் பெறும்போதே இந்த அளவுக்கு 'மணக்கிறார்' என்றால், சிறுத்தைகள் நாலுகால் பாய்ச்சலில் கிளம்பினால் என்னவாகுமோ தெரியவில்லை!

● மணி

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com



REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO.42648/85

Regn.No.TN/Chief.PMG-544/2002




# இதுதான் இன்றைய இந்தியா

எலியும், பூனையுமாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் பிரதமர் வாஜ்பாயியும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவி சோனியாவும் ஒரே மேடையில் தோன்றுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவர்கள் இந்திய நாடாளுமன்றம் நடைமுறைக்கு வந்து ஐம்பதாவது ஆண்டு தொடங்கிவிட்டதை, நாடாளுமன்றத்தின் பொன்விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

இந்திய மக்களில் பெரும்பாலோர் இந்த ஐம்பது ஆண்டுக்குள்ளாகவே இந்திய நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். மேல்தட்டு வர்க்கத்தைப் பொருத்தவரை இந்தியாவை வாட்டும் பிரச்சினைகளைத் தீர்க்க நாடாளுமன்றம் பயன்படாது; மாறாக இராணுவ சர்வாதிகாரமோ, இட்லர் போன்ற சர்வாதிகாரியோ தேவை என்கிறார்கள். தேர்தலுக்குத் தேர்தல் தவறாமல் ஓட்டுப் போடும் அடித்தட்டு மக்களும் கூட, 'கடமை'க்காகத்தான் ஓட்டுப் போடுகிறார்களே தவிர, இந்திய நாடாளுமன்றத்தின் மீது அவர்களுக்கு பிரமையெல்லாம் கிடையாது.

ஆனாலும், இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஓட்டுக் கட்சிகள், நாடாளுமன்றத்தைப் புனிதமான நிறுவனமாக மக்கள் முன் நிறுத்துகிறார்கள். முதலாளித்துவ அறிஞர்களோ, ''ஓட்டுக் கட்சிகள்தான் மோசம்; நாடாளுமன்ற ஜனநாயகம் மேன்மையானது'' என மக்களுக்கு உபதேசிக்கிறார்கள். சட்டம், மரபு -இந்த மந்திரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்கு உரு ஏற்றுகிறார்கள். நாடாளுமன்றத்தின் மீது நடந்த தாக்குதலை நாட்டின் மீது நடந்த தாக்குதலாக ஊதிப் பெருக்கி, மக்களை உசுப்பேற்றுகிறார்கள்.

நாடாளுமன்றம் பற்றி ஆளும் வர்க்கம் பூ சுற்றுவதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். ஒருநாட்டின் நாடாளுமன்றத்தின் முக்கியமான கடமை என்ன தெரியுமா? அந்நாட்டின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பாதுகாப்பது தான். அந்தத் தகுதி இந்திய நாடாளுமன்றத்திற்கு இருக்கிறதா என்பதுதான் நமது கேள்வி.

இதோ இந்தப் படத்தில் தராசின் இடப்புறத் தட்டின் அருகில் நிற்கிறாரே ஓர் அந்நியப் பெண், அவர் உலக வங்கியின் உதவித் தலைவர் மீகோ நிஷிமிசு. மும்பய் நகரில் உள்ள ஒரு ரேசன் கடையில் நுழைந்து, அக்கடை செயல்படும் விதத்தைக் கண்காணிக்கிறார், அவர்.

மேலும், மும்பயின் சேரிப் பகுதிகளில் இருந்து அடித்துத் துரத்தப்பட்ட மக்களைப் போய் பார்த்து ''உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்று இடம் நன்றாக இருக்கிறதா?'' என விசாரணையும் நடத்தியிருக்கிறார்.

ரேசன் கடைகளை இழுத்து மூட வேண்டும்; நகர்ப்புறக் குடிசைகளை ஒழிக்க வேண்டும் என இந்திய அரசுக்கு உத்தரவுக்கு மேல் உத்தரவாகப் போடுவது உலக வங்கிதான் என்பதை நாம் மறந்து விட்டால், உலக வங்கி துணைத் தலைவரின் இந்த விசாரணையை நல்லெண்ணம் கொண்டதாகக் கருதலாம். பின், இந்த அதிகாரியின் விசாரணைக்குப் பொருள்தான் என்ன?

உலக வங்கி கொடுக்கும் கடனையும், போட்டுக் கொடுக்கும் திட்டங்களையும் இந்திய அரசு முழுமையாகச் செயல்படுத்துகிறதா என்பதை இப்படி திடீர் விசாரணை நடத்தி கண்காணிக்கிறார்கள், அவர்கள்.



கடன்காரன் வீட்டிற்கு வந்து வட்டி கேட்டு வாசலில் நிற்பதையே யாரும் விரும்பமாட்டார்கள். அந்தக் கடன்காரன் சர்வ சுதந்திரமாக வீட்டிற்குள் நுழைந்து, ''எப்படி குடும்பம் நடத்துறே?'' எனக் கேட்டால், அது கடன்பட்டவரின் சுயமரியாதைக்கே விடப்படும் சவால். அப்படி சுயமரியாதையை இழந்து போய் நிற்கிறது இந்தியா.

கடன்பட்டவனின் பெண்டாட்டி, பிள்ளைகளைக் கொத்தடிமைகளாகப் பிடித்துச் செல்லும் கந்துவட்டிக் காரனைப் போல, இந்தியாவையே கொத்தடிமையாக்கும் உலக வங்கி ஒருபுறம்; தாராளமயம் - தனியார்மயம் என்ற போர்வையில் உலக வங்கியின் தரகனாகச் செயல்படும் நாடாளுமன்றம் மறுபுறம். இந்த இலட்சணத்தில் நாடாளுமன்றத்திற்கு பொன்விழா ஒரு கேடா? இந்த வெட்கக்கேட்டை இனியுமா நாம் சகித்து வாழ வேண்டும்?

படிப்பகம்